காளிதாஸ மஹாகவியால் இயற்றப்பட்ட

# மாளவிகா க்னிமித்திரம்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது

எஸ்.எஸ். தேசிகன்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113

காளிதாஸ

மஹாகவியால் இயற்றப்பட்ட

# மாளவிகாக்னிமித்திரம்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது

எஸ்.எஸ். தேசிகன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி, சென்னை - 600 113

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Malavikagnimitram** |
| Author | : | S.S. Desikan |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>C.I.T. Campus, Chennai-600 113<br>Ph: 2542992 |
| Publication No. | : | 428 |
| Language | : | Tamil |
| Edition | : | Re-edition ; First Edition:1938 |
| Date of Publication | : | 2002 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | viii + 80 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 20/- |
| Laser | : | IITS |
| Printed by | : | United Bind Graphics<br>189-D, Royapettah High Road<br>Mylapore, Chennai - 600 004<br>PH. 4984693, 4661807 |
| Subject | : | Translation |

தமிழ் வளர்ச்சி இயக்ககம் வழங்கும் சிறந்த மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிடும் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்று இந்நூல் வெளிவருகிறது.

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

# அணிந்துரை

காளிதாசர் வடமொழி இலக்கிய உலகில் தலைசிறந்த மகாகவியாக, கவிச்சக்கரவர்த்தியாகப் போற்றப்பட்டவர். இரகுவம்சம், குமாரசம்பவம், மேகசந்தேசம், ருதுசம்ஹாரம், சாகுந்தலம், விக்கிரமோர்வசியம், மாளவிகாக்னிமித்திரம் ஆகிய காளிதாசரின் படைப்புகள் யாவும் புகழ்பெற்றவையாகும்.

மகாகவி காளிதாசரின் படைப்புகள் தமிழில் பலமுறை மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. 'சாகுந்தலம்' காளிதாசரின் தலைசிறந்த படைப்பாக, சிறந்த உலக நாடகங்களில் ஒன்றாக இடம் பெற்றுள்ளது. இந்நாடகம் தமிழில் பதினாறு முறை மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளதைக் குறிப்பிட்டுக்காட்டலாம். இதே போன்று மாளவிகாக்கினிமித்திரம் நாடகமும் தமிழில் ஐந்துக்கும் மேற்பட்ட மொழிபெயர்ப்புகளில் வெளிவந்துள்ளன. ஸ்ரீனிவாச ராகவாச்சாரியார், எஸ். ஸ்ரீனிவாச தேசிகன், நடேச சாஸ்திரியார், ஆர்.வி. கிருஷ்ணமாச்சாரியார், ப. சம்பந்த முதலியார், எஸ்.ஏ. இராமசாமி ஆகியோரின் மொழிபெயர்ப்பில் மாளவிகாக்னிமித்திரம் எனும் இந்நாடகம் வெளிவந்துள்ளது. பலரும் பாராட்டும் காளிதாசரின் படைப்புகளைத் தமிழிலும், வடமொழியிலும் புலமை பெற்ற அறிஞர்கள் மொழிபெயர்த்து வழங்கியுள்ளனர்.

எஸ். ஸ்ரீனிவாச தேசிகன் 1938-ஆம் ஆண்டில் வெளியிட்ட மாளவிகாக்னிமித்திர நாடக மொழிபெயர்ப்பை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மறுபதிப்பாக வெளியிடுகிறது. இந்நூல் 1930-களில் வழங்கிவந்த சமஸ்கிருதமும், தமிழும் கலந்த மொழிநடையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இந்நூற்றாண்டில் நிலவும் இருமொழிக்கலப்பு மொழிநடையைப் போல 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலக்கட்டத்தில் சமஸ்கிருதமும் தமிழும் கலந்த இருமொழிக் கலப்பு மொழிநடை தவிர்க்க வியலாததாயிருந்தது. குறிப்பாக, சமஸ்கிருத இலக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்த்த சமஸ்கிருத வல்லுநர்களிடையே இம்மொழிநடை இயல்பாகவே அமைந்திருந்தது. இம்மொழிநடை தமிழறிஞர் பலராலும் பெரிதும் வரவேற்கவியலாததாக இருப்பினும், இந்நூல் மொழிபெயர்ப்பு இலக்கிய வகையைச் சார்ந்தது என்பதாலும், மொழிபெயர்ப்பிலக்கிய ஆய்விற்கு இந்நூல் பெரிதும் பயனுடையதாக அமையும் என்பதாலும் தமிழக அரசின் தமிழ்வளர்ச்சித் துறையின் நிதியுதவியுடன் இந்நூல் மறுபதிப்புச் செய்யப்படுகிறது.

இந்நிறுவனச் செயல்கள் அனைத்திற்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் நிறுவனத்தலைவர் **மாண்புமிகு கல்வி அமைச்சர் முனைவர் மு. தம்பிதுரை** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திரு பு.ஏ. இராமையா இ.ஆ.ப** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத்துறைக் **கூடுதல் செயலாளர் திரு. தா. சந்திரசேகரன் இ.ஆ.ப** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி இயக்ககம் வழங்கும் சிறந்த மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிடும் திட்டத்தின் கீழ் இந்நூலை வெளியிட நிதியுதவி வழங்கிய தமிழ் வளர்ச்சி **இயக்குநர் முனைவர் ம. இராசேந்திரன்** அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி.

இந்நூலின் அச்சுப்படிகளைத் திருத்திச் செம்மை செய்து உதவிய முனைவர் மு. வளர்மதி அவர்களுக்கு எனது பாராட்டுகள். இந்நூலிற்கு ஒளியச்சுக் கோப்புச் செய்து தந்த நிறுவனக் கணிப்பொறி உதவியாளர்கள் திருமதி வெண்ணிலா, திருமதி பி. கௌசல்யா ஆகியோருக்கும் எனது வாழ்த்துகள்.

இந்நூலினைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கு நன்றி.

**இயக்குநர்**

# FOREWORD
## (First Edition)

The name of Kalidasa is one to conjure with in India. Few literate people are strangers to his works. Those who understand Sanskrit of course are in a position to enjoy him the most; but, in spite of the fact that even the best translations cannot bring out the spirit of the original, Kalidasa's dramas do not lose much in beauty or impressiveness in translations.

Mr. S Srinivasa Desikan possesses sound scholarship in both Sanskrit and Tamil, and as such is well fitted to perform the task he has undertaken namely, a literal translation of the "Malavikagnimitram". Though this drama is supposed to be only a third-rate production of Kalidasa's, still its plot, full of incidents and intriguing situation as it is, will appeal more to the man in the street than the justly reputed "Sakuntalam", which must be regarded more as a work of art intended for the connoisseur. I have had opportunities of going through Mr. S.S. Desikan's translation of the "Malavikagnimitram", and I am glad to be able to testify that it is quite faithful to the original. I wish this maiden attempt of the author at interpreting Kalidasa to the average reader every success.

**(Sd,) K.S. Patrachari, M.A.,**
Retired Lecturer,
Kumbakonam College
26th October 1937.

# முன்னுரை

மாளவிகாக்னிமித்திரம் என்ற இந்நாடகம் பல நூற்றாண்டுகளுக்கு முன் கவிகுல திலகனான மஹாகவி காளிதாஸனால் வடமொழியில் இயற்றப்பட்டது. இது ரஸபூர்த்தியை உடையது, பண்டித ஜனங்களின் மனதைக் கவரத்தக்கது என்பதை யாவரும் மறுப்பாரல்லர். வட மொழியில் பயிற்சியில்லாத தென்மொழி யறிந்த தமிழன்பர்களும் இன்பமுறுமாறு இந்நூலை எனது அற்ப அறிவிற்கு எட்டியவாறு கூடியவரையில் சொற்பொருளுக்குச் சரியாகத் தமிழில் மொழிபெயர்த்துள்ளேன். இம்மாதிரி வேறு மொழிபெயர்ப்பு இருக்கினும், எனது இத் துணிகரச் செயலுக்கு எனதன்பர்களின் தூண்டுதலே காரணமாகும். குற்றங்கள் காணப்படின் தயவுகூர்ந்து அவைகளை மன்னித்தல் வேண்டும். மறுபதிப்பில் அவைகள் திருத்திக் கொள்ளப்படும். தனது சிரமத்தைக் கருதாது இந்நூலைப் படித்து நூன்முகம் எழுதி உதவிய கும்பகோணம் காலேஜ் ரிடையர்ட் லெக்சரர் ஸ்ரீமான், K.S. பாட்டராச்சாரியார், M.A. அவர்களுக்குப் பன்முறை எனது வந்தனங்களைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். இவ்விஷயத்தில் எனக்கு உதவி புரிந்த திரு. T. சுப்பராய செட்டியார் அவர்களுக்கும், கோகுலநாத ஹிந்துமஹாஜன ஹைஸ்கூல் தமிழாசிரியர் திரு. ப. ஜீவரத்தினம் பிள்ளை அவர்களுக்கும் எனது நன்றி செலுத்தப்படுகின்றது.

"Gokulam"
Salem
27-1-38

**S.S. Desikan**

# நாடகபாத்திரங்கள்

## புருஷர்கள்

1. சூத்திரதாரன்
2. பாரிபார்சுவிகள்
3. அக்னி மித்திரன் (கதாநாயகனான விதிசா நகரத்தரசன்).
4. கௌதமன் (விதூஷகன்)
5. வாஹதகன் (மந்திரி)
6. கணதாஸன் (அரண்மனை நாட்டியாசிரியன்).
7. ஹரதத்தன் (மற்றோர் நாட்டியாசிரியன்).
8. மௌத்கல்யன் (கஞ்சுகி அல்லது நகரிபொக்கிஷதாரன்)
9. ஸாரஸகன் (தாரிணி தேவியின் வேலையாள்).
10. வைதாளிகர்கள் இருவர்கள் (அரசனைத் துதி பாடுகின்றவர்கள்).

## ஸ்திரீகள்

11. மாளவிகா (கதாநாயகி மாதவஸேனனது ஸஹோதரி).
12. தாரிணி (பட்டமஹிஷி)
13. இராவதி (அரசனது இரண்டாவது மனைவி)
14. பரிவ்ராஜிகா (ஸந்யாஸினி)
15. ஜயஸேனா (அரண்மனைக் காவற்காரி)
16. பகுளாவளிகா (தாரிணீதேவியின் பரிஜனமும் மாளவிகையின் தோழியும்)
17. கௌமுதிகா }
18. நாகரிகா } தாரிணி தேவியின் வேலைக்காரிகள்
19. நிபுணிகா (இராவதியின் வேலைக்காரி)
20. மதுகரிகா (உத்தியானவனக் காவற்காரி)
21. ஜ்யோத்ஸ்னிகா (யக்ஞஸேனனிடமிருந்து வந்த கலைஞி)
22. மதனிகா (மாதவஸேனனது வேலைக்காரி)
23. ஸமாபிருதிகா (பரிவ்ராஜிகையின் வேலைக்காரி)

## மற்றப் பாத்திரங்கள்

24. யக்ஞஸேனன் (விதர்ப்பதேசத் தரசன்)
25. மாதவஸேனன் (மாளவிகையின் ஸஹோதரனும் யக்ஞஸெனன் தாயாதியும்)
26. ஸுமதி (மாதவஸேனனது மந்திரி)
27. புஷ்பமித்திரன் (அக்னிமித்திரனது தந்தை)
28. வஸுமித்திரன் (அக்னிமித்திரனது புதல்வன்)
29. வீரஸேனன் (அக்னிமித்திரனது மைத்துனனும் தாரிணி தேவியின் ஸஹோதரனும்)
30. மௌர்யஸசிவன் (யக்ஞஸேனனது மந்திரி)
31. துருவஸித்தி (அரண்மனை விஷவைத்தியன்)
32. வஸுலக்ஷ்மி (அரசனது குமாரி)
33. மாதவிகா (நிலவரைக் காவற்காரி)
34. சந்திரிகா (இராவதியின் வேலைக்காரி)

### காட்சி

விதிசாநகரமும், அங்கே நந்தவனங்களும்.

# மாளவிகா க்னிமித்திரம்

## முதலாமங்கம்

பக்தர்களுக்குப் பலவித பயன்களை யளிக்கின்ற அஷ்டைசுவரியத்துடன் கூடியவராயிருந்த போதிலும் தான் சருமத்தையே ஆடையாகத் தரித்திருக்கின்றவரும், மனைவியோடு கூடின சரீரமுடையவராக இருந்தபோதிலும் சப்தம் முதலிய விஷயங்களில் பற்றற்ற மனமுடைய முனிவர்களுக்கும் எட்டாமல் இருக்கின்றவரும், எட்டுவித சரீரங்களால் உலகம் முழுமையும் தரிக்கின்றவராக இருந்தபோதிலும் தேஹாபிமானமில்லாதவரும் ஆகிய அப்பேர்ப்பட்ட பரமசிவன் (நீங்கள்) முக்தி மார்க்கத்தைக் காணும்பொருட்டு உங்களது அக்ஞானத்தை நீக்கட்டும்.

(ஆசி கூறிய பின்பு)

**ஸூத்தரதாரன்:-** (திரையை நோக்கி) மாரிஷ! இங்கு வா.

( வந்து )

**பாரிபார்சுவிகன்:-** ஐயா! இதோ வந்தேன்.

**ஸூத்திரதாரன்:-** காளிதாஸ மஹா கவியால் இயற்றப்பட்ட ''மாளவிகா க்னிமித்திரம்'' என்ற நாடகம் இவ்வஸந்தோ த்ஸவத்தில் நடிக்கப்பட வேண்டுமென இப்பண்டித ஸபை எனக்குக் கட்டளை யிட்டிருக்கின்றது. ஆனதால், ஸங்கீதமாரம்பிக்கப்படலாம்.

**பாரிபார்சுவிகன்:-** வேண்டாம்! வேண்டாம்!! புகழ் பெற்ற பாஸர், ஸௌமில்லகர், கவிபுத்திரர் முதலியவர்களின் நாடகங்களைவிட்டு வர்த்தமான கவியான காளிதாஸனால் இயற்றப்பட்ட இந்நாடகத்தில் சபையோர்களுக்குக் கௌரவம் எவ்வாறு உண்டாகும் ?

**சூத்திரதாரன்:-** அப்பா! நீ கூறிய வார்த்தைகள் விவேகமுள்ளவைகள் தாமா? யோசி!

2. ஆதிகாலத்தியதென்ற காரணத்தினாலேயே காவியங்கள் அனைத்தும் நன்மையாக ஆகின்றதில்லை. நவீன காலத்தியதென்ற காரணத்தினாலேயே அக்காவியங்கள் நிந்திக்கத்தக்கவைகளாகவும் ஆகின்றதில்லை. வித்துவான்கள் (காவியங்களின்) குணதோஷங்களைக்

கவனித்தே இரண்டிலொன்றை ஆதரிக்கின்றார்கள். மூடனோவெனில், பிறர் அறிவைக்கொண்டே தனதறிவைச் செலுத்த வேண்டியவனாக இருக்கின்றான்.

**பாரிபார்சுவிகன்:-** ஐயா! இவ்விஷயத்தில் தாங்களே பிரமாணமாகின்றீர்கள்.

3\. **ஸூத்திரதாரன்:-** தாரிணீ தேவியாரது பரிஜனங்கள் தங்கள் கடமைகளைச் செலுத்துவதில் சுறுசுறுப்பாய் இருப்பதுபோலவே யானும் முன்னமே சபையோர்களிடமிருந்து வணக்கத்துடன் (என்னால்) பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டளையைச் சுறுசுறுப்புடன் நிறைவேற்ற விரும்புகின்றேன்.

(வெளியே செல்கின்றார்கள்)

பிரஸ்தாவனை முடிந்தது

(சேடி வருகின்றாள்)

**சேடி:-** "சமீபகாலமாய்க் கற்பிக்கப்பட்டுவருகின்ற 'சலிதம்' என்ற நாட்டியத்தில் மாளவிகை எவ்வளவுதூரம் பயின்றிருக்கின்றனள்?" என நாட்டியாசிரியரான கணதாஸரைக் கேட்டுவருமாறு மஹாராணி அவர்களால் யான் கட்டளையிடப் பட்டிருக்கின்றேன். ஆகையால், சங்கீத சாலைக்குச் செல்லுகின்றேன்.

(செல்லுகின்றாள்)

(கையில் ஆபரணங்களை எடுத்துக்கொண்டு இரண்டாவது சேடிவருகின்றாள்)

**முதலாமவள்:-** ( இரண்டாமவளைப் பார்த்து )

ஸகி! கௌமுதிகா! என்ன? எதில் உனது இவ்வாழ்ந்த யோசனை? சமீபமாகவே சென்றுகொண்டும் இங்கு நின் பார்வையைச் செலுத்துகின்றா யில்லையே!

**இரண்டாமவள்:-** ஒஹோ! பகுளாவளிகையா! ஸகி! நாகமுத்திரையுடன் கூடின இம்மோதிரத்தைத் தேவியாரது கட்டளையின் பேரில் சிற்பியிடமிருந்து வாங்கிக்கொண்டு வருகின்றேன். இதன் அழகில் என் மனது ஈடுபட்டிருந்ததால் யான் உனது நிந்தைக்கு ஆளானேன்.

பகுளாவளிகா:- ஸகி ! தகுதியான வஸ்துவில் தான் உனது பார்வை ஊன்றியதாயிருந்தது. கிரணங்கள் வீசுகின்ற இம்மோதிரத்தினால் உனது கரம் புஷ்பித்திருக்கின்றது போலன்றோ விளங்குகின்றது!

கௌமுதிகா:- ஸகி ! எங்குச் செல்கின்றாய் ?

பகுளாவளிகா:- "நாட்டியம் கற்றுக்கொள்வதில் மாளவிகையினது திறமை எவ்வாறு இருக்கின்றது?" என நாட்டியாசிரியரான கணதாஸரைக் கேட்டுவருமாறு தேவியவர்கள் கட்டளையிட்டிருக்கின்றார்கள். ஆகையால் கணதாஸரிடம் செல்லுகின்றேன்.

கௌமுதிகா:- ஸகி! இம்மாதிரியான காரியத்தினால் மறைத்து வைக்கப்பட்டிருந்தபோதிலும் மாளவிகையானவள் நமது மஹாராஜாவால் பார்க்கப்பட்டுவிட்டாள் என்றல்லவோ தெரியவருகின்றது!

பகுளாவளிகா:- ஆம்! சித்திரத்தில் தேவியாரது பக்கத்தில் அவள் அரசனால் பார்க்கப்பட்டாள்.

கௌமுதிகா:- ஸகி! அதெவ்வாறு ?

பகுளாவளிகா:- ஸகி! கவனி. மஹாராணியார் சித்திரசாலைக்குச் சென்று அங்கு ஒவிய ஆசிரியனால் புதிதாய் எழுதி வர்ணம் தீட்டப்பட்ட சித்திரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதுசமயம் அரசன் வந்துவிட்டார்.

கௌமுதிகா:- பின்பு! பின்பு!

பகுளாவளிகா:- தேவியாரால் வரவேற்கப்பட்ட பின்பு அரசன் தேவியாருடன் ஒரே ஆஸனத்தில் அமர்ந்தார். சித்திரத்தில் பரிஜனங்களுக்கு மத்தியிலும் தேவியாரது அருகிலும் வரையப்பட்டிருந்த மாளவிகையைப் பார்த்து அரசன் மஹாராணியைக் கேட்டார்.

கௌமுதிகா:- என்ன வென்று ?

பகுளாவளிகா:- "தேவியாரது ஸமீபத்தில் எழுதப்பட்டிருக்கும் இப்பெண் புதிதாகக் காணப்படுகின்றதே ! இவளது பெயர் என்ன" என்று--

கௌமுதிகா:- அடி! சுந்தரவடிவங்கள் மீது அன்பு தானாகத் தோன்றுவது இயல்பன்றோ! இருக்கட்டும்! பின்பு!

பகுளாவளிகா:- அரசனது வார்த்தையைத் தேவியார் லஷ்யம் செய்யவே இல்லை. ஆனால், அரசனோ சந்தேகித்தவராய் அடிக்கடி

மஹாராணியைத் தொந்தரவு செய்த வண்ணமாகவே இருந்தார். மஹாராணியார் பதில் யாதொன்றும் கூறாமலிருக்க, குமாரியான வஸுலக்ஷ்மி "அப்பா ! இவள் மாளவிகா" என்று சொல்லி விட்டாள்.

**கௌமுதிகா:-** (புன்னகையுடன்) குழந்தைப் பருவத்திற்கு இது இயல்புதானே! பின்பு யாது நேர்ந்தது ?

**பகுளாவளிகா:-** வேறு யாது இதைக் காட்டிலும்? அரசனது கண்களில் புலப்படாமல் முன்னைவிட அதிக ஜாக்ரதையாய் இப்பொழுது மாளவிகை காப்பாற்றப்பட்டு வருகின்றாள்.

**கௌமுதிகா:-** ஸகி! இனி நீ உனது வேலையைக் கவனிப்பாய். நானும் இம் மோதிரத்தைத் தேவியாரிடம் கொடுக்கச் செல்லுகின்றேன்.

( வெளியே செல்லுகின்றனள் )

**பகுளாவளிகா:-** ( சிறிது சென்று, கவனித்து )

இதோ! கணதாஸரும் நாட்டியசாலையில் இருந்து வெளியே சென்று கொண்டிருக்கின்றார். அவர் என்னைப் பார்க்குமாறு எதிர்ப்படுகின்றேன்.

( செல்லுகின்றாள் )

( வந்து )

**கணதாஸன்:-** இவ்வுலகில் எல்லோரும் தங்கள் தங்கள் குலவித்தைகளைக் கௌரவித்துக் கொள்ளுகின்றார்கள். ஆனால், எனது குலவித்தையான நாட்டியத்திற்கே உண்மையான கௌரவமிருக்கின்றது.

*4.* ஏனெனில், பரதர் முதலிய முனிவர்கள் இந்நாட்டியத்தை இந்திராதி தேவர்களுக்குக் கண்களால் அநுபவிக்கத்தக்க இனிய விருந்தெனக் கருதுகின்றார்கள். இந்நாட்டியமானது பரமசிவனால் உமா தேவியோடு கலந்த தனது சரீரத்தில் இரண்டுவிதமாய்ப் (வாஸ்யம், தாண்டவம்) பிரிக்கப் பட்டிருக்கின்றது. இந்நாட்டியத்தில் முக்குணங்களில் (ஸத்வம், ரஜஸ், தமஸ்) இருந்து உண்டான உலகத்தோர்களது சரித்திரம் பற்பல ரஸங்களால் விளக்கப்படுகின்றது. ஆகையால், நாட்டியம் ஒன்றாகவே இருப்பினும், பலவித ருசியுள்ள ஜனங்களுக்குப் பலவாறாகத் திருப்தியை அளிக்கின்றது.

**பகுளாவளிகா:-** ( சிறிது முன்னேவந்து ) ஐயா ! வந்தனம்.

**கணதாஸன்:-** மங்களம் வாய்ந்தவளே ! வாழ்க !

**பகுளாவளிகா:-** ஐயா! தங்களது மாணவியான மாளவிகை வித்தியாப்பியாஸத்தில் தங்களுக்கு அதிகத் தொந்தரவைக் கொடுக்காமல் இருக்கின்றனளாவென்று மஹாராணியார் கேட்கின்றார்கள்.

**கணதாஸன்:-** பகுளாவளிகா! மாளவிகை அதிக ஆற்றல் வாய்ந்தவளென்றும் புத்திக்கூர்மை வாய்ந்தவளென்றும் மஹாராணியாரிடம் நான் விண்ணப்பம் செய்து கொள்ளுவதாகத் தெரிவிப்பாய். சுருங்கச்சொன்னால்,

5. அபிநய விஷயத்தில் மாளவிகையின்பொருட்டு எத்தகைய நாட்டியம் என்னால் கற்பிக்கப்படுகின்றதோ, அதை மிகவும் விசேஷமாய் அவள் செய்வதால் அவளிடமிருந்தே யான் உபதேசிக்கப்படுகின்றேன் போலும்.

**பகுளாவளிகா:-** (மனதுள்) இராவதியையும் இவள் மீறிவிட்டாள்போல் நினைக்கின்றேன். (வெளியாய்) தங்கள் மாணவியே புண்யசாலியாக இருக்கின்றாள். ஏனெனில், குருவான தாங்கள் இவள் விஷயத்தில் இவ்வாறு திருப்தியடைகின்றீர்களல்லவா!

**கணதாஸன்:-** மங்களம் நிறைந்தவளே! இவளுக்கு ஒப்பானவள் கிடைப்பது அரிதானதால் யான் ஒன்று கேட்கின்றேன். இப்போ்ப்பட்டத் தகுதிவாய்ந்த பாத்திரம் (மாணவி) தேவியாரால் எங்கிருந்து அடையப்பட்டது?

**பகுளாவளிகா:-** ஐயா! தேவியாருக்கு வீரஸேனன் என்ற ஸஹோதரனொருவன் இருக்கின்றான். அவன் எல்லைப்புறக் கோட்டையில் அதிகாரியாக அரசனால் நியமிக்கப்பட்டவன். "இச்சிறுமி கலைகள் கற்கத் தகுதியானவள்" எனக் கருதி, இம்மாளவிகை அவனால் தனது ஸஹோதரிக்கு வெகுமதியாக அனுப்பப்பட்டாள்.

**கணதாஸன்:-** (மனதுள்) வடிவத்தின் விசேஷத்திலிருந்தே இவள் உயர் குலத்தில் தோன்றியவள் என ஊகிக்கின்றேன். (வெளியாய்) பகுளாவளிகா! உறுதியாய் நான் ஐயம் பெறுவேன். ஏனெனில்,

6. சமுத்திர சிப்பியில் வீழ்ந்த மழைநீர் எவ்வாறு முத்தாக மாறுகின்றதோ, அவ்வாறே தகுதியான பாத்திரத்தில் (மாணவனிடம்) கற்பிக்கப்பட்ட வித்தையானது மேன்மையை அடைகின்றது.

**பகுளாவளிகா:-** ஐயா! தங்கள் மாணவி எங்கே?

**கணதாஸன்:-** இப்பொழுதுதான் ஐந்து அங்கங்களால் செய்யக்கூடிய அபிநயம் ஒன்றைக் கற்பித்து, அவளைக் களைப்பாறும்படி சொன்னேன். ஜன்னலின் வழியாய் உத்தியானத் தடாகத் தோற்றத்தைப் பார்த்துக்கொண்டு மாளவிகையானவள் களிப்புடன் காற்று வாங்கிக் கொண்டிருக்கின்றாள்.

**பகுளாவளிகா:-** ஐயா! சரி! எனக்கு விடை அளியுங்கள். மாளவிகையினது விஷயத்தில் தங்களுடைய திருப்தியைத் தேவியாரிடம் தெரிவித்து அவர்களுக்கும் சந்தோஷத்தை விருத்தி செய்கின்றேன்.

**கணதாஸன்:-** நீ உனது ஸகியைப் பார்க்கலாம். நானும் சிறிது ஒய்வுபெற்று எனது கிருஹம் செல்லுகின்றேன்.

**முகவுரையின் முடிவு**

(பரிஜனங்களுடன் அரசனும், கையில் கடிதத்துடன் மந்திரியும் பிரவேசிக்கின்றார்கள்)

ராஜா:- ( கடிதத்தைப் படித்துக் கொண்டிருக்கும் மந்திரியைப் பார்த்து) வாஹதக! விதர்ப்பதேச மன்னனது கருத்து யாது? என்ன செய்யப் போகின்றான்?

வாஹதகன்:- அரசே! தனக்குத் தீங்கு தானே விளைவித்துக்கொள்ள யோசிக்கின்றான்.

ராஜா:- அவனது கடிதத்தைப் படி. யான் அதைக்கேட்க விரும்புகின்றேன்.

வாஹதகன்:- இப்பொழுது விதர்ப்ப மன்னனாகிய யக்ஞஸெனனால் கீழ்க்கண்டவாறு பதில் எழுதப்பட்டிருக்கின்றது. அஃதாவது: தங்களது பிதுரு ஸகோதரனின் குமாரனான மாதவஸேனன் எனது ஸம்பந்தத்தை விரும்பியவனாய் இங்கு வந்துகொண்டு இருக்கும் பொழுது, இடையில் தங்களது எல்லைப்புற அதிகாரியால் தாக்கப்பட்டுச் சிறையிலிடப்பட்டான். என்னை உத்தேசித்துத் தாங்கள் அம்மாதவ ஸேனனையும் அவனது மனைவியையும் ஸஹோதரியையும் சிறையில் இருந்து விட்டுவிட வேண்டும்-என்று மஹிமை வாய்ந்த தாங்கள் கட்டளையிட்டிருந்தீர்கள். ஆனால், பங்காளிகளிடத்தில் அரசர்களது காரியம் எவ்வாறாக இருக்குமென்பதைத் தாங்கள் அறியாதவர்களல்ல. ஆகையால், தாங்கள் இவ்விஷயத்தில் நடுநிலைமை வஹித்தல் வேண்டும். மாதவஸேனனது ஸஹோதரியோ, இவனைப் பிடிக்கும் சமயத்தில் எங்கேயோ காணாமல் போய்விட்டாள். யான் அவளைத் தேடுவதின்பொருட்டு முயற்சி செய்யப்போகின்றேன்.

மாதவஸேனனை அவசியம் விட்டுவிட வேண்டுமெனத் தாங்கள் கருதினால் தயவுசெய்த கீழ்க்குறித்த நிபந்தனையைக் கவனித்தல் வேண்டும்.

அதாவது :-

7. "சிறையில் வைக்கப்பட்டிருக்கும் எனது மைத்துனனான மௌரியஸசிவனைத் தாங்கள் சிறையிலிருந்து விடுவிப்பீர்களே யானால், அந்த க்ஷணத்திலேயே நான் மாதவஸேனனைச் சிறையிலிருந்து விட்டுவிடுவேன்".

ராஜா:- (கோபத்துடன்) ஓஹோ! துஷ்டன் என்னிடம் காரிய பரிவர்த்தனத்தைக் கருதியா வியவஹாரம் செய்கின்றான்? வாஹதக! விதர்ப்பதேசத்தரசன் எனக்கு ஜன்ம விரோதியாயும்

தீங்கு விளைவிக்கின்றவனாகவும் இருக்கின்றான். ஆகையால் முன்னமே நாம் தீர்மானித்தபடி விதர்ப்பராஜனை அடியோடு ஒழிக்க வீரஸேனனது தலைமையின் கீழ் நமது படையணிக்கு உத்தரவு கொடுப்பாயாக.

**மந்திரி :-** அரசே! கட்டளைப்படி

**ராஜா:-** அமாத்ய! அதைப்பற்றி நீ யாது நினைக்கின்றனை ?

**மந்திரி:-** அரசே! தாங்கள் கூறும் வார்த்தை ராஜ நீதியை அநுஸரித்தே இருக்கின்றது எவ்வாறெனில்,

8. ஸமீபகாலத்தில் ஊன்றப்பட்ட மரமானது நன்கு வேரூன்றப்படாத காரணத்தால் எவ்வாறு வீழ்த்தப் பட்டுச் சாய்கின்றதோ, அவ்வாறே ஸமீபகாலத்தில் ராஜ்யத்தைப் பெற்றவனாய்க் குடிகளின் பூர்ண அன்பைப் பெறாமல் இருக்கின்ற சத்துருவும் எளிதில் ஜெயிக்கப் படுகின்றான்.

**ராஜா:-** ராஜா நீதியை எழுதியவர்களது வசனம் வீணாகமாட்டாது ஆகையால் நமது ஸேனாபதி யுத்தத்திற்குப் புறப்படட்டும்.

**மந்திரி:-** அப்படியே!

( வெளியே செல்லுகின்றான் )

( பரிஜனங்கள் அவர் அவர்கள் முறைப்படி அரசனைச் சுற்றி நிற்கின்றார்கள் )

(வந்து)

**விதூஷகன்:-** " கௌதம! தற்செயலாய் சித்திரத்தில் பார்க்கப்பட்ட மாளவிகை நேரிலும் பார்க்கப் படுமாறு தகுந்த உபாயமொன்றை எனக்காக யோசனை செய்வாய் " என்று அரசனால் நான் உத்திரவிடப் பட்டிருக்கின்றேன். அவ்விதமே உபாயமும் என்னால் யோசிக்கப் பட்டது, அரசனிடம் அதைத் தெரியப் படுத்துகின்றேன்.

(சிறிது செல்கின்றான்)

**ராஜா:-** (விதூஷகனைக் கண்டு) வேறு காரியார்த்தமாய் இதோ மற்றறோர் மந்திரி வந்துகொண்டிருக்கின்றான்.

**விதூஷகன்:-** மஹாராஜ! வாழ்க! வாழ்க!!

**ராஜா:-** (சிரக்கம்பம் செய்து) நண்ப ! இங்கு உட்காரலாம்.

**விதூஷகன்:-** (உட்காருகின்றான்)

ராஜா:- மித்திர! உனது அறிவாகிய கண்ணிற்கு யான் விரும்பிய பொருளைப் பெறச் சாத்தியமான ஏதாவது ஓர் உபாயம் புலப்பட்டதா?

விதூஷகன்:- உபாயமா. உபாயம்! அதன் ஐயத்தைப்பபற்றி வினவுங்களேன்!

ராஜா:- அதெவ்வாறு?

விதூஷகன்:- (காதோடு) . . .இப்படித்தான்.

ராஜா:- நல்லது! நண்ப! சாதூரியமாய் உன்னால் ஆரம்பம் செய்யப்பட்டது. இக்காரியத்தில் நாம் வெற்றி பெறுவது அதிகடினமாயிருப்பினும் நமக்கு இது நம்பிக்கையையே உண்டுபண்ணுகின்றது.

9. ஏனெனில், கண்களை உடையவனாக இருப்பினும் மனிதன் இருளில் பதார்த்தங்களைத் தீபத்தின் உதவியின்றிப் பார்க்கின்றானில்லை. அவ்வாறே ஸஹாயத்தையுடைய மனிதன் தான் இடையூறுடன் கூடின எத்தகைய காரியத்தையும் நிறைவேற்றச் சக்தி உள்ளவனாகின்றான்.

( திரைமறைவில் )

போதும் போதும் தற்புகழ்ச்சி! நம்மிருவர்களுள் யார் மேலானவர்? எவர் தாழ்மையானவர்? என்பது அரசனது முன்னிலையிலேயே வெளியாகப் போகின்றது.

ராஜா:- (கேட்டு) நண்ப! நின் உபாயமாகிய மரத்தில் புஷ்பம் மலர்ந்து விட்டதே!

விதூஷகன்:- அரசே! விரைவில் பழங்களையும் பார்க்கலாம்.

(கஞ்சுகி வருகின்றான்)

கஞ்சுகி:- அரசே! தங்கள் கட்டளையை நிறைவேற்றியதாக மந்திரி தெரியப்படுத்திக் கொள்ளுகின்றார். கணதாஸன், ஹரதத்தன் இவ்விருவர்கள் வந்திருக்கிறார்கள்.

10. இரண்டு நாட்டியாசிரியர்களும் ஒருவர்மீது ஒருவர் ஐயம் பெற விரும்பியவர்களாய் அபிநயத்தின் பொருள்களே உருவெடுத்து வந்தவைகள் போல் மஹாராஜாவைக் காண வந்திருக்கின்றார்கள்.

ராஜா:- அவர்களை அழைத்து வா.

**கஞ்சுகி:-** உத்தரவுப்படி

(வெளியே சென்று)

(அவ்விருவர்களுடன் பிரவேசித்து)

இப்படி வாருங்கள். இப்படி வாருங்கள்

**ஹரதத்தன்:-** (அரசனைப் பார்த்து) அரசனது மஹிமை அணுகத்தகாததாக விருக்கின்றது. ஏனெனில்,

11. இவ்வரசன் என்னோடு பழகாதவரல்ல. இவர் என்னால் ஆச்ரயிக்கத் தகாதவராகவுமில்லை. ஆயினும் நடுங்கிக் கொண்டே நான் இவரது ஸமீபம் செல்கின்றேன். சமுத்திரமானது க்ஷணம் தோறும் எவ்வாறு புதிது புதிதாகக் காணப்படுகின்றதோ, அவ்வாறே எனது கண்களுக்குப் புதிது புதிதாகவே காணப்படுகின்றார் இவரும்.

**கணதாஸன்:-** புருஷ வடிவங்கொண்ட இந்த தேஜஸானது அதிக மஹிமை வாய்ந்ததன்றோ! ஏனெனில்,

12. வாஸலில் ஸேவகர்களால் அநுமதிக்கப்பட்ட பின்பே யான் உள்ளே பிரவேசித்தேன். பின்பு, கஞ்சுகியோடு கூடவே அரசனது ஸமீபமும் செல்கின்றேன். ஆயினும் எனது பார்வையைத் தடைசெய்கின்ற இவ்வரசனது தேஜஸாலேயே (வசனங்களன்றிக்கே) மறுபடியும் நான் தடுக்கப்படுகின்றேன் போலும்.

**கஞ்சுகி:-** இதோ அரசன் வீற்றிருக்கின்றார். நீங்கள் வாருங்கள்.

**இருவர்களும் :** (வந்து) அரசே! வாழ்க! வாழ்க!!

**ராஜா:-** வருக! (பரிஜனத்தைப் பார்த்து) இருவர்களுக்கும் இரண்டு ஆஸனங்கள் கொண்டு வாருங்கள்.

(இருவர்களும் பரிஜனங்களால் கொண்டு வரப்பட்ட ஆஸனங்களில் அமர்கின்றார்கள்)

**ராஜா:-** மாணவர்களுக்குக் கற்பிக்கவேண்டிய ஸமயத்தில் நீங்கள் இருவர்களும் ஒருங்கே இங்குவந்த காரணம் யாது ?

**கணதாஸன்:-** அரசே! கேட்கவேண்டும். நான் திறமை வாய்ந்த குருவினிடமிருந்தே அபிநயவித்தையைக் கற்றிருக்கின்றேன். கற்பித்துக்கொண்டும் இருக்கின்றேன். மஹாராஜாவாலும் மஹாராணியாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவனாகவும் இருக்கின்றேன்.

**ராஜா:-** நன்கறிவேன். பின்பு!

**கணதாஸன்:-** "என்கால் பொடி யொவ்வா இவனா ஈடு ? ஆகமாட்டான்". என்று தகுந்த பெரியோர்களது முன்னிலையில் இந்த ஹரதத்தனால் நான் நிந்திக்கப்பட்டேன்.

**ஹரதத்தன்:-** மஹாராஜா! "சமுத்திரத்திற்கும் சிறு குட்டைக்குமுள்ள தாரதம்மியம்போல் தனக்கும் எனக்கும் தாரதம்யம் இருக்கின்றது" என்று நிந்தனைசெய்ததில் இவரே முதல்வராகின்றார். ஆகையால், எங்களிருவர்களையும், சாஸ்திரத்திலும் செய்கையிலும் தாங்கள் தான் பரீக்ஷை செய்யவேண்டும். தாங்களே எங்கள் இருவர்கட்கும் நுட்பமறிந்த மத்தியஸ்தர்களாகின்றீர்கள்.

**விதூஷகன்:-** இவ்வுறுதிமொழிதான் மிக்க அழகு.

**கணதாஸன்:-** இம்முறைதான் சிறந்தது. அரசே! ஜாக்ரதையாய்க் கவனிக்க வேண்டும்.

**ராஜா:-** சற்றுப் பொறு. இதில் தேவியார் நம்மீது சந்தேகம் கொள்ளலாம். ஆகையால், பண்டித கௌசிகி, தேவி இவ்விருவர்கள் முன்னிலையிலேயே இந்த வியவஹாரம் தீர்மானிக்கப்படவேண்டும்.

**விதூஷகன்:-** அரசே! தாங்கள் கூறுவதும் நியாயமே!

**ஆசிரியர்கள்:-** அரசனது இஷ்டப் படியே!

**ராஜா:-** மௌத்கல்ய! இந்த விருத்தாந்தத்தைத் தெரியப்படுத்தி, பண்டித கௌசிகி, தேவி இவ்விருவர்களையும் இங்கு அழைத்துவா.

**கஞ்சுகி:-** கட்டளைப் படியே !

*(வெளியே சென்று, தேவி, பண்டித கௌசிகி இருவர்களுடன் கஞ்சுகி வருகின்றான்)*

இப்படி வாருங்கள், வாருங்கள் இப்படி.

**தேவி:-** *(பண்டித கௌசிகையைப் பார்த்து)*, அம்மா! ஹரதத்தன், கணதாஸன் இவ்விருவர்களுக்கும் நேர்ந்திருக்கின்ற இப்போட்டியைப் பற்றித் தாங்கள் யாது நினைக்கின்றீர்கள்?

**பரிவ்ராஜிகா:-** தேவி! உங்களது கக்ஷி தோல்வியை அடைந்து விடுமோ என்ற ஸந்தேகம் உங்களுக்கு வேண்டாம். கணதாஸன் எவ்வகையிலும் எதிரிக்குக் குறைந்தவனே யல்ல.

தேவி:- அம்மா! அவ்வாறே இருப்பினும் அரசனது தயவு ஹரதத்தனுக்கே மேன்மையை விளைவிக்கின்றது.

பரிவ்ராஜிகா:- அடடா! "மஹாராணி" என்ற பட்டம் தங்களுக்கும் உண்டு என்பதைத் தாங்கள் யோசிக்க வேண்டும்.

*13.* அக்னி பகவான் ஸூரிய ஸம்பந்தத்தால் அதிக தேஜஸை அடைகின்றான். அவ்வாறே சந்திரனும் இரவினது ஸம்பந்தம் பெற்று மேன்மையை யடைகின்றான்.

விதூஷகன்:- அரசே! பாருங்கள்! இதோ தாரிணீ தேவியார் பண்டித கௌசிகையை முன்னிட்டுக்கொண்டு வருகின்றார்கள்.

ராஜா : இவளைப் பார்க்கின்றேன். இவள்,

*14.* மங்களகரமாய் அலங்கரித்துக் கொண்டிருக்கின்ற தாரிணீதேவி யதிவேஷம்பூண்ட கௌசிகியுடன் கூடி, உருவெடுத்து வந்த வேதாந்த வித்தையுடன் கூடின மூன்று வேதமே போல் விளங்குகின்றனள்.

பரிவ்ராஜிகா:- *(ஸமீபம் வந்து)* அரசே! வாழ்க! வாழ்க!!

ராஜா:- தாயே! நமஸ்கரிக்கின்றேன்.

பரிவ்ராஜிகா:- மஹாராஜா!

*15.* அதிக பலம் வாய்ந்த ஸந்தானத்தை யுடையவர்களாயும் ஸமான பொறுமை வாய்ந்த வர்களாயுமிருக்கின்ற தாரிணீ, பூதேவி இவ்விருவர்களுக்கும் தாங்கள் பல்லாண்டு பல்லாண்டு கணவனாயிருத்தல் வேண்டும்.

தாரிணீ:- நாத! வந்தனம்! வந்தனம்!!

ராஜா:- தேவி! வருக! வருக!! *(பரிவ்ராஜிகையைப் பார்த்து)* ஆஸனத்தில் அமரவேண்டும்.

*(எல்லோரும் அந்தஸ்துக்குத் தக்கபடி அமருகின்றார்கள்)*

ராஜா:- தாயே! நிபுணர்களான கணதாஸன் ஹரதத்தன் இவ்விருவர்களுக்கும் தங்கள் தங்கள் அறிவின் மேன்மையைப் பற்றி போட்டி ஏற்பட்டுவிட்டது. ஆகையால் தாங்கள்தான் இவ்விஷயத்தில் தீர்மானம் கூறுதல் வேண்டும்.

பரிவ்ராஜிகா:- *(புன்னகையுடன்)* வேண்டாம்! போதும் இப்பரிஹாஸம்!! ரத்நபரிக்ஷை செய்வது நகரத்திலே யல்லாது கிராமத்திலல்லவே.

ராஜா:- அப்படியல்ல. தாங்கள் நன்கறிந்த கௌசிகியல்லவா! நானும் தேவியும் இவர்களிடம் பக்ஷபாத முள்ளவர்களாக இருக்கின்றோம்

ஆசிரியர்கள்:- அரசன் உண்மையையே கூறுகின்றார். ( பரிவ்ராஜிகையைப் பார்த்து ). தாயே ! நடு நிலைமையில் இருக்கின்றபடியால், தாங்களே எங்கள் இருவர்களின் குணதோஷங்களைப் பகுத்தறியத் திறமை வாய்ந்தவர்களாகின்றீர்கள்.

ராஜா:- ஆனால் விவாத மாரம்பிக்கப் படட்டுமே!

பரிவ்ராஜிகா:- மஹாராஜ! நடித்துக் காண்பிக்க வேண்டியதன்றோ நாட்டிய சாஸ்திரம்! வாக்குவாதத்தால் இங்கு யாது பயன்? ஆனால், மஹாராணியார் யாது நினைக்கின்றார்களோ?

தேவி:- என்னைக் கேட்பீர்களே யாகில் இவர்களுடைய விவாதமே எனக்குப் பிடிக்கவில்லை.

கணதாஸன்:- தேவி! ஸ்மான வித்தையை உடைய ஒருவனால் யான் அவமதிக்கப்படுமாறு தாங்கள் செய்யவேண்டாம்.

விதூஷகன்:- தேவி! இரு ஆட்டுக் கடாக்களின் சண்டையைத்தான் பார்ப்போமே! இவர்களுக்கு வீணாய்ச் சம்பளம் கொடுப்பதால் யாது பயன்?

தேவி:- கௌதம! என்ன? நீ கலகத்தையே விரும்புகின்றனையே!

விதூஷகன்:- தேவி! அப்படியல்ல. இரண்டு மதகஜங்கள் ஒன்றோடொன்று சண்டை போட்டுக்கொண்டிருக்கும்பொழுது, அவைகளில் ஏதாவதொன்று தோல்வியடையாவிடில் அச்சண்டை எவ்வாறு ஒப்வடையும்?

ராஜா:- தாயே! (அங்க ஸௌஷ்டவத்துடன் அழகாய்க் காட்டப்பட்ட) இவ்விருவர்களின் அபிநயத்தைத் தாங்கள் பார்த்திருக் கின்றீர்களா?

பரிவ்ராஜிகா:- ஆம்! பார்த்திருக்கின்றேன்.

ராஜா:- சரி! அதுவே போதுமானதே! என்ன அதைக்காட்டிலும் இப்பொழுது இவர்களால் நமக்கு அதிகமான நம்பிக்கை உண்டுபண்ண வேண்டியிருக்கின்றது ?

பரிவ்ராஜிகா:- மஹாராஜ! அப்படியல்ல. அதை யான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

16. வித்தையானது ஒருவனால் நன்கு கற்கப்பட்டதாக இருக்கின்றது. மற்றொருவனால் நன்கு போதிக்கப் படக்கூடியதாக இருக்கின்றது. ஆகவே, இவ்விருவகையையும் எவன் ஒருவன் ஒருங்கே பெற்றிருக்கின்றானோ, அவனே ஆசிரியர்களுள் முதன்மை வாய்ந்தவனாகின்றான்.

**விதூஷகன்:-** ஆசிரியர்களே! பரிவ்ராஜிகையின் மொழிகளைக் கேட்டீர்களா? இதுவே உபதேசத்தினது ஸாரமாகும்.

**ஹரதத்தன்:-** நாங்களும் இதை அங்கீகரிக்கின்றோம்.

**கணதாஸன்:-** (மஹாராணியை நோக்கி ) இவ்விதம் தீர்மானத்திற்கு வந்துவிட்டது.

**தேவி:-** மாணவியினது புத்திக்குறைவால் ஏதேனும் குறைவு ஏற்படுமேயானால், அது உபதேசித்த ஆசிரியரது குற்றமாகுமா?

**ராஜா:-** தகுதியற்றவர்களை மாணவர்களாக ஏற்றுக் கொள்வதும் குருவினுடைய புத்திக்குறைவே யன்றோ ?

**தேவி:-** (மனதுள்) இப்பொழுது யாது செய்வது ? போதும் அரசனது மனதிற்கு உத்ஸாஹத்தை வளர்த்தது. (வெளியாய்) கணதாஸ! உபயோகமற்றக் காரியத்தில் ஏன் முயலுகின்றாய்? இதை விட்டு விடேன்!

**விதூஷகன்:-** மஹாராணியார் நன்றாய்ச் சொல்லுகின்றார்கள். கணதாஸ! ஸங்கீதம் கற்பித்தல் என்ற பாவனையால் ஸரஸ்வதீ தேவிக்கு நிவேதனம் செய்யப்பட்ட பணியாரங்களைச் சாப்பிட்டு வந்த உனக்குத் தோல்வியை விளைவிக்கக்கூடிய இப்போட்டியால் யாது பயன்?

**கணதாஸன்:-** தேவி! தங்களது வார்த்தையும் உண்மையில் இக்கருத்தையேதான் விளக்குகின்றது. ஆனால், சமயத்தில் சொல்ல வேண்டியதை நான் சொல்லிவிடுகின்றேன். கேளுங்கள்.

17. "பதவி ஏற்பட்டுவிட்டது" என்று வாதத்திற்குப் பயந்தவனாய்ப் பிறரால் செய்யப்பட்ட நிந்தையைப் பொறுத்துக்கொண்டு எவனொருவன் தனது வித்தையைக் கேவலம் ஜீவனத்தின் பொருட்டே உபயோகிக்கின்றனனோ, அவன் அறிவை விலைக்கு விற்கும் வியாபாரி யெனவே கருதப்படுகின்றான்.

**தேவி:-** கணதாஸ! உனது மாணவியோ சமீப காலமாகத்தானே கற்பிக்கப்பட்டுவருகின்றாள்! இன்னமும் மனதில் நன்கு தரித்துக்கொள்ளப்படாத உனது உபதேசத்தை அவள் பஹிரங்கமாகத் தெரிவிப்பது நியாயமல்லவே!

**கணதாஸன்:-** மஹாராணி! அதனால்தானே எனக்கும் இதில் இப் பிடிவாதம்.

**தேவி:-** சரி! ஆனால், நீங்கள் இருவர்களும் உங்கள் திறமையை பரிவ்ராஜிகையவர்களுக்கு மட்டில் காண்பிக்கலாமே!

**பரிவ்ராஜிகா:-** தேவி! இது நியாயமல்லவே! எல்லாம் அறிந்தவராயிருப்பினும் ஒருவருடைய தீர்மானம் குற்றமுள்ளதே யாகும்.

**தேவி:-** *(மனதுள்)* என்ன! இவள் ஒரு விவேகமற்ற ஸன்யாஸினியாக இருக்கின்றனளே! விழித்துக் கொண்டிருப்பினும் என்னைத் தூங்குகின்றவளைப் போலன்றோ கருதுகின்றாள்.

( கோபத்துடன் திரும்புகின்றாள் )

( அரசன் பரிவ்ராஜிகைக்கு அவளைக் காண்பிக்கின்றான் )

**பரிவ்ராஜிகா:-** *(தேவியைப் பார்த்து)* சந்திரவதனே!

*18.* காரணமின்றிக் கணவனது பார்வையிலிருந்து முகத்தை ஏன் திருப்பிக் கொள்கின்றனை? குல ஸ்திரீகள் கணவன் மார்களிடத்தில் வீரங்காட்டுகின்றவர்களாக இருப்பினும் தக்கதொரு காரணத்துடனல்லவோ கோபிக்கின்றார்கள்.

**விதூஷகன்:-** தாயே! காரணமிருக்கின்றதே! தனது கக்ஷியைக் காப்பாற்ற வேண்டுமல்லவோ! *(கணதாஸனைப் பார்த்து)* கணதாஸ! மஹாராணியாருடைய கோபம் என்ற பாவனையில் நீ காப்பாற்றப்படுகின்றாய். நன்கு கற்றவனாக இருப்பினும் ஒவ்வொரு மனிதனும் போதிக்கு மாற்றல் வாய்ந்தவனாக இருக்கின்றா னில்லை.

**கணதாஸன்:-** தேவி! கேளுங்கள்! கேளுங்கள்!! ஜனங்கள் எவ்வாறு கருதுகின்றார்கள் என்பதைக் கவனியுங்கள், ஆகையால், இப்பொழுது நான்,

*19.* எனது உபதேசத்திறமையை இந்தப் போட்டியில் காண்பிக்கவே போகின்றேன். தாங்கள் அநுமதியளிக்கத்தான் வேண்டும். இல்லாவிடில், யான் தங்களால் கைவிடப்பட்டவன் ஆவேனன்றோ!

( ஆஸணத்தில் இருந்து எழுந்திருக்கின்றான் )

**தேவி:-** (மனதுள்) நாம் என்ன செய்வது? (வெளியாய்) தாங்கள் போதிக்கும் திறமை மிகவும் வாய்ந்தவர்களே!

**கணதாஸன்:-** வெகு நேரமாய்க் காரணமில்லாமல் ஸந்தேகப்பட்டுக் கொண்டிருந்தேன். (அரசனைப் பார்த்து) அரசே! மஹாராணியார் உத்திரவளித்து விட்டார்கள். ஆகையால், நான் எத்தகைய அபிநயத்தில் எனது உபதேசத் திறமையைக் காண்பிக்க வேண்டும்? ஆக்ஞாபிக்க.

**ராஜா:-** பரிவ்ராஜிகையவர்கள் கட்டளையிடுவார்கள். அதன்படி நடக்கட்டும்.

**பரிவ்ராஜிகா:-** தேவியாரது மனதில் ஏதோ இருக்கின்றது. ஆகையால், நான் ஐயப்படுகின்றேன்.

**தேவி:-** தாயே! கூச்சம் வேண்டாம்! தாங்களே கூறுங்கள் என் பரிஜனங்கள் மீது கட்டளை செலுத்தும் திறமை இன்னமும் என்னிடமே இருக்கின்றது.

**ராஜா:-** என்மீதும் இவ்விதமே கூறலாம்.

**தேவி:-** தாயே! நீங்கள் கூறுங்கள்.

**பரிவ்ராஜிகா:-** அரசே! நான்கடிகள் கொண்ட " சலிதம் " என்ற நாட்டியத்தை நடிப்பது கடினமெனக் கூறுகின்றார்கள். ஆதலால், ஒரே விஷயமான அபிநயத்தையே இவ்விருவர்களும் நடிக்க நாம் பார்க்கலாம். அதில் இவ்விருவர்களுடைய உபதேச தாரதம்யம் நன்கு வெளியாகும்.

**இருவர்களும்:-** தாயே! தங்களது கட்டளைப்படியே.

**விதூஷகன்:-** ஆனால், நீங்கள் இருகக்ஷிக்காரர்களும் நாடக மேடை சென்று பூர்வாங்கங்களைத் தயார் செய்த கொண்டு தூதனை அனுப்புங்கள். அல்லது, மிருதங்க சப்தமே எங்களைத் தூண்டி விடட்டும்.

**ஹரதத்தன்:-** அப்படியே! (எழுந்திருக்கின்றான்)

**கணதாஸன்:-** (தேவியைப் பார்க்கின்றான்)

**தேவி:-** (கணதாஸனைப் பார்த்து) ஜயம் பெறுவாயாக! யான் ஒரு பொழுதும் குருவினுடைய ஜயத்திற்கு விரோதம் தேடுகின்றவளல்லவே!

(இருவரும் புறப்படுகின்றார்கள்)

**பரிவ்ராஜிகா:-** (இருவரையும் பார்த்து), சற்று இங்கு வாருங்கள்.

**இருவர்கள்:-** (திரும்பி) இதோ வருகின்றோம்.

**பரிவ்ராஜிகா:-** தீர்மானம் கூறுமதிகாரம் எனக்குக் கொடுத்திருப்பதால் நான் ஒன்று சொல்லுகின்றேன். இந் நடிகர்களுடைய அவயவங்களின் சீரியதன்மை, சலனம் இவைகளின் விளக்கத்திற்கு இடைஞ்சல் யாதுமில்லாமல் அலங்கரிக்கப் பட்டவர்களாய் இவ்விருவர்களும் மேடையில் பிரவேசிக்க வேண்டும்.

**இருவர்கள்:-** தாயே! வந்தனம். நாங்களும் இவ்விஷயம் அறிகின்றோம்.

(வெளியே செல்லுகின்றார்கள்)

**தேவி:-** (அரசனைப் பார்த்து), நாத! ராஜீய காரியங்களிலும் தாங்கள் இத்தகைய உபாயத்தைக் காண்பிப்பீர்களேயாகில், இது மிக்க அழகாகவிருக்கும்.

20. ராஜா:- பெருந்தன்மை வாய்ந்தவளே! என்னை வேறு விதமாய்க் கருதவேண்டாம். இது என்னால் ஏற்பட்டதல்ல. உலகில் பெரும்பாலும் ஸமானவித்தையுள்ளவர்கள் ஒருவருக்கொருவர் புகழில் பொறாமை கொண்டவர்களாகவே இருக்கின்றார்கள்.

(திரையினுள் மிருதங்க சப்தத்தை எல்லோரும் கேட்கின்றார்கள்)

**பரிவ்ராஜிகா:-** (தனக்குள்) கஷ்டம்! கஷ்டமற!! ஸங்கீதமும் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. இனிப் போகவேணும் போலும். ஏனெனில் :- இது,

21. மேக கர்ஜனமெனச் சந்தேகித்து கழுத்தை உயரத் தூக்கிக் கொண்டிருக்கின்ற மயில்களால் தொடர்ந்து சப்தம் செய்யப்பட்ட இப்புஷ்கரத்தினுடைய வாத்திய விசேஷமானது மத்திமஸ்வரத்துடன் மயில்களுக்கு இன்பமளிக்கின்றதாய் மனதைச் சந்தோஷப் படுத்துகின்றது.

ராஜா:- தேவி! நாமும் ஸபையோர்களுடன் கலந்துகொள்வோமே!

**தேவி:-** (மனதுள்) ஆஹா! மஹாராஜாவினது காரியம் எவ்வளவு நாகரீகமற்றதாக இருக்கின்றது!

(எல்லோரும் எழுந்திருக்கின்றார்கள்)

**விதூஷகன்:-** (அரசனுடன் ஒருபுறமாய்). மஹாராராஜா! தாரிணீ தேவியார் தங்களிடம் சந்தேகங்கொள்ளாமல் இருக்குமாறு தைரியமாய் அமைதியுடன் செல்லுங்கள்.

22. ராஜா:- தைரியமுள்ளவனாக இருந்தபோதிலும் இம்முரஜவாத்திய கோஷமானது காரியஸித்தியின் மார்க்கத்தில் இறங்குகின்ற என் மனோரதத்தினது (மணமாகிய இரதம்) சப்தம்போல் எங்களை அவசரப் படுத்துகின்றது.

(எல்லோரும் வெளியே செல்லுகின்றார்கள்)

## முதலாமங்கம் முடிந்தது

# இரண்டாமங்கம்

(ஸங்கீத பூர்வாங்கங்கள் திட்டம் செய்யப்பட்ட பின்பு, சினேகிதனோடு அரசனும், தாரணீதேவி, பரிவ்ராஜிகா, பரிஜனங்கள் ஆகிய இவர்களும் ஆஸனங்களில் முறையே அமர்ந்தவர்களாய்ப் பிரவேசிக்கின்றார்கள்)

ராஜா:- தாயே! ஆசிரியர் இருவர்களுக்குள் எவருடைய உபதேசப்பயனை நாம் முதலில் பரீக்ஷிக்கலாம் ?

பரிவ்ராஜிகா:- இருவர்களும் அறிவில் சமானமானவர்களே ! ஆயினும், வயதில் முதிர்ந்த கணதாஸனே முதலில் மரியாதை பெறத்தகுந்தவனாயிருக்கின்றான்.

ராஜா:- மௌத்கல்ய! ஆசிரியர்கள் இருவர்கட்கும் இவ்விதமே தெரியப்படுத்தி உனது கட்டளையை நிறைவேற்றுவாய்.

கஞ்சுகி:- தேவ! கட்டளைப்படி

(வெளியே செல்கின்றான்)

கணதாஸன்:- அரசே! மத்திமலயத்துடனும் நான்கு பாதங்களுடனும் கூடிய சர்மிஷ்டாதேவியினது கிருதியின் நான்காவது பாதத்தின் அபிநயத்தைத் தாங்கள் ஏகமனதுடன் கவனிக்கவேண்டும்.

(கணதாஸன் வெளியே செல்கின்றான்)

ராஜா:- (ஒரு புறமாய்) நண்ப !

1. திரை மறைவில் இருக்கும் மாளவிகையைப் பார்க்க அதிக ஆவல் கொண்டவைகளாய் எனது கண்கள் பொறுமையின்றித் திரையை நீக்க முயல்கின்றது போலும்.

(ஒரு புறமாய்)

விதூஷகன்:- மஹாராஜா! நேத்திரானந்தகரமான தேன் ஸமீபிக்கின்றது. ஆனால், வண்டும் கூடவே இருக்கின்றது. ஆகையால், நீங்கள் ஜாக்கிரதையுடன் பார்க்கவேண்டும்.

(மாளவிகை, அவளது அவய சீர்மையைக் கவனித்துக் கொண்டு கணதாஸன் ஆகிய இவ்விருவர்கள் வருகின்றார்கள்).

**விதூஷகன்:-** (மறைவாய்) மஹாராஜ! கவனியுங்கள். இவளது ஸௌந்தரியத்தின் இனிமை இவளது உருவப்படத்திற் காட்டிலும் குறைவில்லாததாகின்றது.

2. **ராஜா:-** (ஒரு புறமாய்) மித்திர!

நான் (முதன்முதலாக) மாளவிகையைச் சித்திரத்தில் பார்த்தபொழுது என் மனமானது " சித்திரத்தில் காணப்பட்ட இச்தச் சுந்தரவடிவம் (உண்மையில்) எப்படி இருக்க முடியும்?" என்று சந்தேகித்தது. ஆனால், இப்பொழுதோ, இவளை (சித்திரத்தில்) எழுதிய ஓவிய ஆசிரியனைச் சித்திரம் வரைவதில் பூர்ண ஆற்றல் வாய்ந்தவனல்லன் என்றே யான் நினைக்கின்றேன்.

**கணதாஸன்:-** குழந்தாய்! வெட்கப்படாதே! நிமிர்ந்து தைரியமாயிரு.

**ராஜா:-** (மனதுள்) என்ன ஆச்சரியம்! இவளது ஸவுந்தரியமோ அவயவ மொவ்வொன்றிலும் குற்றமற்றதாயிருக்கின்றது.

3. இவளது முகம், நீண்ட கண்களுடன் சரத்காலச் சந்திரனைப்போல சாந்தியையுடையதாயிருக்கின்றது. இருகைகளும், தோள்களில் ஸமமாய் வளைவாய் இருக்கின்றன. மார்பு, ஒன்றோடு ஒன்று நெருங்கிய தனங்களை உடையதாய் இருக்கின்றது. இருபார்சுவங்களும், சமமாய்ச் சீவி இழைக்கட்பட்டிருக்கின்றன போலும், இடை, பிடியில் அடங்கிவிடுவதாயிருக்கின்றது. ஜகனம், விஸ்தரிக்கக் கூடியதாயிருக்கின்றது. பாதங்கள், ஒழுங்காய்ச் சற்றே வளைந்த கட்டைவிரல்களை உடையதாய் இருக்கின்றது. ஆகையால், இவளது சரீரம் நாட்டிய ஆசிரியனுடைய மனோபாவத்திற்கு ஒத்தவாறே அமைந்திருக்கின்றது.

**மாளவிகை:-** (பூர்வாங்கமான இராகத்தைப் பாடி நான்கு பாதங்கள் கொண்ட கீதத்தில் நான்காவது பாதத்தைப் பாடுகின்றாள்)

4. ஹே மனதே! இஷ்ட நாயகன் அடையமுடியாதவனாகவே இருக்கின்றான். அவனைப்பற்றி இனி ஆசையை ஒழித்துவிடு. ஹா! இதென்ன ஆச்சரியம்! என் இடது கடைக்கண் யாது காரணம்பற்றியோ துடிக்கின்றதே! அவன் வெகு காலத்திற்குப் பின்னே காணப்படுகின்றான். அவனை நான் எவ்வாறு அணுகுவேன்! ஹேநாத! யான் சுவாதீனமற்றவள், உன்னிடமே பிரேமையும் கொண்டவள் என்பதை நீயே அறிவாயன்றோ?

(பாடி அதன் கருத்தை அபிநயத்தால் விளக்கி நர்த்தனம் செய்கின்றாள்)

**விதூஷகன்:-** (மறைவாய்) மஹாராஜ! மாளவிகையானவள் நான்கு பாதங்கள் கொண்ட கீதத்தின் மூலமாய்த் தன்னைத் தங்களிடத்திலேயே ஒப்பித்து விட்டனள் போலும்.

(மாளவிகையானவள் கீதத்தின் முடிவில் வெளியே செல்ல விரும்புகின்றாள்)

**ராஜா:-** (மறைவாய்) நண்ப! என் மனதும் அவ்வாறே எண்ணுகின்றது. இவளால்,

5. "ஹே நாத! என்னைத் தங்களிடமே பிரேமை கொண்டவளாக அறிந்து கொள்ளுங்கள்" என்ற கீதத்தில் "நாத! ஸ்வாதீனமற்ற என்னை" முதலிய வசனங்களைத் தனது அவயவப் ப்ரகடன பூர்வமாய் அபிநயித்துக் காட்டி, இம்மாளவிகையானவள், தாரிணீ தேவியார் அருகிலிருந்தமையால் என்மீது தனது பிரேமையைக் காட்ட வேறு வழியில்லாமல் நாகரீக முறையில் பிரார்த்தித்த பாவனையாக எனக்குப் பதில் உரைத்தனள் போலும்.

**விதூஷகன்:-** அம்மணி! நில்! நில்!! முக்கியமான பாகத்தை நீ அபிநயிக்க மறந்து விட்டாய். நான் அதைக் கேட்கப் போகின்றேன்.

**கணதாஸன்:-** குழந்தாய்! சற்றுப் பொறு, இவ்வுபதேசம் குற்றமற்றதெனக் கூறிய பின்பே நீ செல்வாய்.

**ராஜா:-** (மனதுள்) அங்க நிலை ஒவ்வொன்றிலும் இவளது ஸௌந்தரியம் சிறப்புற்று விளங்குகின்றது.

6. எவ்வாறெனில், மணிக்கட்டில் அசைவற்று நிற்கும் வளைகளோடு கூடின இடதுகையை இடுப்பில் வைத்துக் கொண்டும், சியாமாக் கொடியினது கிளைபோன்ற மற்றொரு கையைக் கீழே தொங்கவிட்டுக் கொண்டும், கால் கட்டை விரலால் மெதுவாய்த் தள்ளப்பட்ட புஷ்பங்களோடு கூடின தளவரிசையில் தனது பார்வையைச் செலுத்திக் கொண்டும், நேராகவும் உயரமாகவும் இருக்கின்ற சரீரத்தின் மேற்பாதி பாகத்துடன் இவளது நிற்கும் நிலை நாட்டியத்தைக் காட்டிலும் மிக்க அழகு வாய்ந்து விளங்குகின்றது.

**தேவி:-** கணதாஸ! கௌதமனது வார்த்தையையா ஒரு பொருட்டாகக் கருதுகின்றாய்?

கணதாஸன்:- தேவி! இவ்வாறு கூறவேண்டாம். அரசனுடைய அறிவில் இருந்து கௌதமனுக்கும் புத்திக் கூர்மை யுண்டாயிருக்கலா மன்றோ! ஏனெனில்,

7. சேற்றை யகற்றும் விதையினுடைய (தேத்தாங்கொட்டை) ஸம்பந்தத்தால் கலங்கின தண்ணீர் எவ்வாறு தெளிவை யடைகின்றதோ, அவ்வாறே கற்றோர்களின் சேர்க்கையால் மந்த புத்தியை உடையவனும் புத்திக் கூர்மையை அடைகின்றான்.

(விதூஷகனைப் பார்த்து)

ஐயா! தாங்கள் கூற விரும்பியதைக் கூறலாம். கேட்கின்றோம்.

விதூஷகன்:- (கணதாஸனைப் பார்த்து) கணதாஸ! முதலில் மத்தியஸ்தரைக் கேள். பின்பு, நான்கண்ட குறைகளைக் கூறுகின்றேன்.

கணதாஸன்:- தாயே! குணமோ! அல்லது குற்றமோ! எதுவாயிருப்பினும் தாங்கள் பார்த்தவாறு கூறவேண்டும்.

பரிவ்ராஜிகா:- கணதாஸ! நான் பார்த்தவரை எல்லாம் குற்றமற்றதாகவே இருந்தது, ஏனெனில்,

8. அவயவங்கள் ஒவ்வொன்றும், பதங்களைத் தமக்குள் வைத்திருந்தனபோல் பொருளை நன்கு விளக்கின. பாதங்களை வைப்பதும், தாளத்தை அநுஸரித்தே இருந்தது. உணர்ச்சிகளில் தாதாத்ம்யமே (அபெதம்) தோன்றின. அபிநயமோ, கைகளை நீட்டுவதின் அளவை ஒத்திருந்தது. அவ்வபிநயத்தின் மாறுதலின் தொடர்பில் அபிநயிக்கப்படுகின்ற நிர்வேதாதி பாவமானது (உணர்ச்சி) பிருகிருதஸ்தாயீ பாவத்திலிருந்து (விஷயம்) முன்னபிநயிக்கப்பட்ட ஸஞ்சாரீ பாவத்தை (முன்னுணர்ச்சியை) நீக்குகின்றது. ஆயினும், நாட்டியத்தில் ஏற்பட்ட பிரேமை முன்போலவே இருந்தது.

கணதாஸன்:- மஹாராஜ! தாங்கள் என்ன எண்ணுகின்றீர்கள்?

ராஜா:- கணதாஸ! நாங்கள் முறியடிக்கப்பட்டோம்.

கணதாஸன்:- அரசே! இன்றுதான் நாட்டியாசிரியனாகின்றேன்.

9. அக்கினியில் காய்ச்சப்பட்ட ஸுவர்ணமானது தோஷம் நீங்கி பிரகாசிப்பதேபோல், எந்த வித்தையானது அரசராகிய தம்மால் பரிசீலனை செய்யப்பட்டுக் குற்றமற்றறதாகின்றதோ, அதுவே குணதோஷங்களை யறிந்த வித்துவான்களினாலும் பாராட்டப் பட்டுப் பெருமையை அடைகின்றது.

தேவி:- நாத! தெய்வாதீனமாய்ப் பரிக்ஷகர்களைத் திருப்திசெய்து விளங்குகின்றீர்கள்.

**கணதாஸன்:-** தேவி! தங்களது தயவு தான் எனது அபிவிருத்திக்குக் காரணமாகின்றது. *(விதூஷகனைப்பார்த்து)* கௌதம! இப்பொழுது தங்கள் மனதில் இருப்பதைக் கூறுங்கள்.

**விதூஷகன்:-** சரி! நாட்டியம் துவக்கப்படுவதற்கு முன் பிராம்மண பூஜை செய்திருக்கவேண்டுமன்றோ! அதை நீங்கள் மறந்து விட்டீர்கள்.

**பரிவ்ராஜிகா:-** ஆச்சரியம்! பரீக்ஷாதிகாரி அபிநய சாஸ்திரத்தில் நன்கு பயின்றவராயிருக்கின்றார்!

( எல்லோரும் நகைக்கின்றார்கள் )

( மாளவிகையும் நகைக்கின்றாள் )

**ராஜா:-** *(மனதுள்)* எனது கண்கள் பார்க்கவேண்டிய பொருள்களுள் சிறந்த பொருளையே கண்டன.

*10.* நீண்ட நயனங்களுடன் கூடினமாளவிகையினது முகம் புன்னகையால் அற்பமே வெளிக்காட்டப்பட்ட பற்களால் அழகு வாய்ந்ததாய், கேஸரங்கள் முழுமையையும் வெளிக்காட்டாது சிறிது மலர்ந்த பங்கஜம் போன்ற தோற்றமுடையதாய் எனது கண்களால் காணப்பட்டன.

**கணதாஸன்:-** பிராம்மணோத்தம! இது முதல்முதலில் செய்யும் பூர்வாபிநயமல்ல. அல்லாதிருப்பின் பூஜ்யரான தங்களை நாங்கள் எவ்வாறு மறக்கமுடியும் ?

**விதூஷகன்:-** உலர்ந்த மேக கர்ஜனத்தைக் கேட்டுத் தண்ணீரை விரும்பும் விவேகமற்ற சாதகப்பறவையைப் போல் யானுமாகின்றேனன்றோ?

**பரிராவ்ஜிகா:-** உண்மையில் இவ்விதமே!

**விதூஷகன் :** தாயே! அறிஞர்களது திருப்தியைக் கொண்டன்றோ மூடர்களும் தங்களைத் திருப்தி செய்து கொள்ளுகின்றார்கள். ஆகையால், பண்டித கௌசிகியார் இவ்வபிநயத்தைப் புகழ்கின்றபடியால் நானும் இம்மாளவிகைக்கு வெகுமதி அளிக்கின்றேன்.

*(அரசனது கையிலிருந்து வளையைக் கழற்றுகின்றான்)*

**தேவி:-** மாணவக ! நில் ! நில் !! குணதோஷங்களை அறியச் சக்தியற்ற நீ எதற்காக ஆபரணத்தைக் கொடுக்கின்றனை ?

**விதூஷகன்:-** பிறருடையது என்றுதான்!

**தேவி:-** *(கணதாஸனைப் பார்த்து)* ஐயா! கணதாஸ! உனது மாணவி தான் பயின்ற வித்தையை நன்கு விளக்கினள்.

கணதாஸன்:- குழந்தாய்! வா! நாம் இப்பொழுது செல்வோம்.

(மாளவிகை குருவோடு செல்கின்றாள்)

விதூஷகன்:- (அரசனைப் பார்த்து மறைவாய்) அரசே! தங்களுக்குப் பணி செய்ய எனக்குப் புத்தித் திறமை இவ்வளவுதான்.

ராஜா:- மாணவக! வேண்டாம். "இவ்வளவுதான்" என்று ஏன் உன்னுடைய புத்தியை ஓர் எல்லைக்கு உட்படுத்தப் பார்க்கின்றாய்! அஃதிருக்கட்டும், இப்பொழுது:-

11. திரையில் மாளவிகையினது தோற்றம் மறைந்ததானது என் கண்களது பாக்கியக் குறைவேயோ! மனக்காக்ஷிப் பெருவிழாவினது முடிவேயோ! அல்லது என்பால் வந்து கொண்டிருக்கும் சந்தோஷத்தின் மார்க்கத்திற்கு ஓர் தடங்கல் தானோ! என்னென்பேன்!

விதூஷகன்:- (மறைவாய்) சபாஷ் ! வறிஞனாகிய பிணியாளன் போலன்றோ இவர் வைத்தியனாலேயே மருந்து கொண்டுவரப் படவேண்டுமென விரும்புகின்றார். சபாஷ்!

ஹரதத்தன்:- (பிரவேசித்து) இப்பொழுது எனது திறமையையும் பார்க்கத் தாங்கள் தயவுசெய்ய வேண்டும்.

ராஜா:- (மனதுள்) நமது எண்ணம் நிறைவேறியது. (மரியாதையாய்) ஹரதத்த! நாம் உமது திறமையையும் பார்க்கவே ஆவலுள்ளோம்.

ஹரதத்தன்:- அநுக்ரஹிக்கப்பட்டேன்.

( திரையினுள் )

ஸ்துதிபாடகன்:- அரசே! வாழ்க! வாழ்க!!

12. உத்தியான வனத்தினது தடாகங்களில் இருக்கும் தாமரை இலையின் நிழல்களில் அன்னப்பறவைகள் கண்களைப் பாதி மூடியவைகளாய்க் காணப்படுகின்றன. அதிக தாபத்தால் உப்பரிகைகள் புறாக்களால் வெறுக்கப்பட்ட கொடுங்கைகளை யுடையவைகளாய் இருக்கின்றன. சிதறப்பட்ட நீர்த்துளிகளைத் தாகத்தால் அருந்த விரும்பிய மயிலானது சுழன்று கொண்டிருக்கும் ஜலயந்திரங்களைச்

சுற்றிலும் பறந்துகொண்டிருக்கின்றன. சூரிய பகவானும் தனது செங்கிரணங்களால் குணங்கள் மிக்க ராஜாவாகிய தங்களையே ஒத்து விளங்குகின்றான்.

**விதூஷகன்:-** ஹோ! பிராம்மணர்களின் போஜன காலம் அல்லவோ இது! அரசே! இது தங்களுக்கும் தான்! வேளைதவறி உட்கொண்டால் வைத்தியர்கள் குறை கூறுவார்கள். ஹரதத்த! நீ இப்பொழுது என்ன சொல்லுகிறாய் ?

**ஹரதத்தன்:-** எனக்குப் பேச வாயேது ?

**ராஜா:-** (ஹரதத்தனைப் பார்த்து) உனது சிக்ஷையை நாம் நாளைய தினம் பார்க்கின்றோம். நீ இன்று ஓய்வு எடுத்துக்கொள்ளலாம்.

**ஹரதத்தன்:-** (கட்டளைப்படியே)

(வெளியே செல்கிறான்)

**தேவி:-** நாத! தாங்கள் ஸ்நானம் முதலிய காரியங்களைச் செய்ய வேண்டும்.

**விதூஷகன்:-** தேவி! இன்று விசேஷமான போஜனாதிகளை முடிக்கத் துரிதப்படுத்துங்கள்.

**பரிவ்ராஜிகா:-** மஹாராஜ! வாழ்க! வாழ்க!!

(பரிவ்ராஜிகை, தேவியுடனும் பரிஜனங்களுடனும் வெளியே செல்கின்றாள்)

**விதூஷகன்:-** மஹாராஜ! ஆஹா! சௌந்தரியத்தில் மட்டில் அன்றிக்கே அபிநயத்திலும் மாளவிகை ஒப்பற்று விளங்குகிறாள்.

**ராஜா:-** மித்திர!

*13.* இயற்கையில் ஸௌந்தரியம் வாய்ந்த மாளவிகையை வசீகரமான நாட்டிய சாஸ்திரத்துடன் கூடியவளாகப் படைத்த பிரும்மதேவன் மன்மதனுக்கு விஷம் பூசின பாணத்தைத் தயார் செய்திருக்கின்றான் போலும்! பலவாறு பேசுதலால் யாது பயன்! நீ என்னைக் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

**விதூஷகன்:-** மஹாராஜ! தாங்களும்தான் என்னை மறந்துவிடக்கூடாது. இப்பொழுது என் வயிற்றினுட்பாகம் கடைவீதியில் இருக்கும் ரொட்டி அடுப்பினுட்பாகம் போல் தஹிக்கப்படுகின்றது.

**ராஜா:-** நண்ப! உனது நண்பன் விஷயத்திலும் நீ இதுபோன்ற கவலையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

விதூஷகன்:- அரசே! நான் அவ்வாறே செய்யத் தீர்மானித்திருக்கிறேன். ஆனால், அம்மாளவிகையினது தரிசனமோ, மேகவரிசைகளால் மறைக்கப்பட்ட சந்திரிகைபோல் பிறரால் தடைப்பட்ட தாயிருக்கிறது. தாங்களோ வெனில், புலால் விற்குமிடத்தைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கும் பறவையைப்போல் இருக்கின்றீர்கள். ஆகையால், காரியசித்தியைப் பெறவேண்டுமென்றால், தாங்கள் பொறுமையுடன் இருக்குமாறு தங்களை வேண்டுகின்றேன்.

14. ராஜா:- கௌதம! எவ்வாறு யான் அவ்வாறு இருக்கமுடியும்? அந்தப்புரச் சுந்தரிகளுடன் விலாஸாதிகள் அனைத்தையும் அறவே வெறுத்த எனது பிரேமை முழுமைக்கும் அழகிய கண்களையுடைய அம்மாளவிகை ஒருத்தியே லக்ஷியமாக இருக்கின்றனளே!

(வெளியே செல்கின்றார்கள்)

## இரண்டாமங்கம் முடிந்தது

# மூன்றாமங்கம்

(பரிவ்ராஜிகையின் சேடி வருகின்றாள்)

**சேடி:-** மஹாராணி அவர்களுக்குக் கையுறையாகக் கொடுப்பதின் பொருட்டு மாதுளம்பழம் கொண்டுவரும்படி பரிவ்ராஜிகையவர்கள் எனக்குக் கட்டளையிட்டிருக்கின்றார்கள். ஆனதால், உத்தியானவனத்தைப் பாதுகாக்கும் மதுகரிகையைத் தேடிச் செல்லுகின்றேன்.

(சற்று சென்று, சுற்றிலும் பார்த்து)

ஆஹா! இதோ மதுகரிகையும், தங்கநிறமான அசோகமரத்தைப் பார்த்துக்கொண்டு நிற்கின்றாள். இவளிடம் செல்லுகின்றேன்.

(உத்தியான பாலிகையான மதுகரிகை வருகின்றாள்)

**முதல்வள்:-** (ஸமீபம் வந்து) மதுகரிகா! நந்தவனத்தைப் போஷிக்கும் உனது காரியம் நன்கு நடைபெற்று வருகின்றதா ?

**இரண்டாமவள்:-** ஸமாபிருதிகா! வருக! வருக!!

**ஸமாபிருதிகா:-** ஸகி! பரிவ்ராஜிகையவர்கள் எனக்குக் கீழ்க்கண்டவாறு உத்தரவு கொடுத்திருக்கின்றார்கள் அஃதாவது வெறுங்கையோடு என்போன்றவர்களால் மஹாராணியவர்கள் பார்க்கத் தகுந்தவர்களல்ல. ஆனதால், மாதுளம்பழத்தைக் கையுறையாகக் கொண்டு மஹாராணியைப் பார்க்க விரும்புகின்றேன்.

**மதுகரிகா:-** ஸகி! இதோ உனது அருகாமையிலேயே மாதுளம்பழம் இருக்கின்றது. ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக்கொண்டிருந்த நாட்டியாசிரியர் இருவர்களுடைய உபதேசத் திறமையையும் பரிக்ஷை செய்ததில் பரிவ்ராஜிகை அவர்களால் எவர் புகழப்பட்டார்? இதை எனக்கு முதலில் கூறுவாய்.

**ஸமாபிருதிகா:-** இருவர்களுமே நன்கு சாஸ்திரம் பயின்றவர்கள், உபதேசிப்பதிலும் அதிகத் திறமை வாய்ந்தவர்கள். ஆனால், மாளவிகையின் அபிநயத் திறமையால் கணதாஸன் அதிகக் கௌரவம் பெற்றான்.

**மதுகரிகா:-** ஸகி! மாளவிகையைப் பற்றி ஏதோ ஓர் வதந்தி கேட்கப் படுகின்றதே! அது யாது ?

**ஸமாபிருதிகா:-** அரசன் மாளவிகையின் மீது அளவற்ற காதல் கொண்டிருக்கின்றார். தாரணீ தேவியாரது மனவருத்தத்திற்குப் பயந்தே இவ்விஷயத்தில் அரசன் தனது சாமர்த்தியத்தைக் காண்பிக்காமல் இருக்கின்றார். மாளவிகையும் சில நாட்களாக அணிந்து எறியப்பட்ட மல்லிகை மாலைபோல் வாடினவளாகவே காணப்படுகின்றாள். இதற்கு மேல் யான் எதையும் அறியேன்! எனக்கு விடை கொடுப்பாய்.

**மதுகரிகா:-** இக்கிளையில் தொங்குகின்ற மாதுளம் பழத்தைப் பறித்துக்கொள்.

**ஸமாபிருதிகா:-** (பறித்து) ஸகி! நீயும் பெரியோர்களுக்குப் பணிவிடை செய்வதின் பயனாக இதைக்காட்டிலும் உயர்ந்த பலத்தைப் பெறுவாய்

(புறப்படுகின்றாள்)

**மதுகரிகா:-** நாமிருவரும் சேர்ந்தே போகலாம். இந்தத் தங்கநிறமான அசோகமரம் அநேக காலமாய்ப் புஷ்பிக்காமல் இருக்கின்றது. இதற்குத் "தோஹத"க் கிரியை செய்ய வேண்டிய நிமித்தமாய் நானும் தேவியார் அவர்களிடம் விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டியவளாக இருக்கின்றேன்.

**ஸமாபிரிதிகா:-** நியாயமே! இது உனது கடமையல்லவா!

(வெளியே செல்கின்றார்கள்)

பிரவேசகம்

*(காதல் நோய்கொண்ட அரசன் விதூஷகனுடன் வருகின்றான்)*

ராஜா:- *(தன்னைக் கவனித்து)*

*1.* பிரியையினது ஆலிங்கன ஸுகத்தைப் பெறாததின் பயனாய் சரீரம் மெலிந்து விடலாம். சிறிது நேரமாவது அவள் காணப்படவில்லை என்ற காரணம் பற்றிக் கண்களும் கண்ணீரைப் பெருக்கலாம். ஆனால், ஹேசித்தமே! மான் விழிகள் போன்ற விழிகளையுடைய அம்மாளவிகையை விட்டு நீ ஒரு க்ஷணமும் அகலுகின்றாயில்லை. ஆனதால், மேலான இன்பம் நின் ஸமீபத்திலேயே இருக்க, நீ ஏன் இவ்வாறு வருந்துகின்றனை ?

ளவிதூஷகன்:- மஹாராஜ! மனோதிடத்தைக் கைவிட்டுத் தாங்கள் இவ்வாறு வருந்துவது அழகல்லவே! மாளவிகையினது தோழியான பகுளாவளிகையை நான் கண்டேன். தாங்கள் கூறியுள்ள விருத்தாந்தத்தையும் அவளிடம் கூறி இருக்கின்றேன்.

ராஜா:- அவள் யாது பதில் உரைத்தனள்?

விதூஷகன்:- மஹாராஜ! அவள் கீழ்க்கண்டவாறு பதில் கூறினள். அஃதாவது:- இக்கட்டளையினால் யான் அநுக்ரஹிக்கப் படுகின்றேன். ஆனால், மெலிந்த அம்மாளவிகையானவள் ஸர்ப்பத்தால் காக்கப்பட்ட நிதிபோல் முன்னிலும் அதிக ஜாக்ரதையுடன் காக்கப்பட்டு வருகின்றபடியால் எளிதில் அணுகத்தகாதவளாகவே இருக்கின்றாள். ஆயினும், யான் எனது முயற்சியைச் செய்கின்றேன். அரசனிடம் விக்ஞாபனம் செய்து கொள்ள வேண்டும்.

ராஜா:- மனத்தே தோன்றி மஹிமை வாய்ந்த ஹேமன்மத! கிட்டாததன்மேல் மனக்கிளர்ச்சியைத் தூண்டி விட்டுக் கிடைக்கும் காலம் வரும்வரைக் காத்திருக்கச் சக்தியற்ற என்மீது ஏன் சமர் தொடுக்கின்றனை?

(ஆச்சரியத்துடன்)

2. மனதைப் பிளக்கும் இத்தீவிர வேதனை எங்கே? விரும்பத் தகுந்த மிருதுவான உனது ஆயுதம் எங்கே? ஆகையினால் எந்த வஸ்து அதிக மிருதுத்தன்மை வாய்ந்ததோ, அது அதிகக் கொடுமையானது என உலகத்தோர் கூறும் வார்த்தை ஹேமன்மத! உன்னிடமே காணப்படுகின்றது.

விதூஷகன்:- மஹாராஜ! தங்கள் அபீஷ்டம் நிறைவேறுமாறு காரியம் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றது. ஆனதால், தாங்கள் நிம்மதியாயிருக்கலாம்.

ராஜா:- நண்ப! அவசியமான காரியத்திலும் வெறுப்படைந்த மனதுடன் நான் எங்குச் சென்று இப்பகலைக் கழிப்பேன்?

விதூஷகன்:- இன்றுதான் வஸந்த காலத்தின் ஆரம்பத்தைக் குறிப்பிடுகின்ற சிவந்த அசோக புஷ்பத்தை இராவதீ தேவியார் நிபுணிகாமூலம் தங்களுக்குக் காணிக்கையாக அனுப்பி, "நவ வஸந்தோற்சவம்" என்ற பாவனையால் தங்களோடு கூடி ஊஞ்சலாடி மகிழக்கொண்டுள்ளத் தமது விருப்பத்தைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கின்றார்களே? ஆகையால், முன்

தாங்கள் வாக்குறுதியளித்த வண்ணமே அவர்களது அபீஷ்டத்தைப் பூர்த்தி செய்யுமாறு பிரமதவனத்திற்கே செல்வோம்.

**ராஜா:-** நண்ப! இது தகுதியல்ல.

**விதூஷகன்:-** ஏன் தகுதியல்ல?

**ராஜா:-** மித்திர! ஸ்திரீகள் இயற்கையிலேயே புத்திக் கூர்மை வாய்ந்தவர்கள். இராவதியிடம் நான் எவ்வளவு அன்பு காட்டிய போதிலும், மற்றோர் ஸ்திரீயிடம் அன்பு கொண்டுள்ள என்னை அவள் எங்ஙனம் கண்டுகொள்ளாமல் இருக்க முடியும்? ஆனதால்,

*3.* உசிதமானதாக இருப்பினும் இராவதியினுடைய பிரார்த்தனையை நாம் நிறைவேற்றாமல் இருப்பதே நலமாகும். அப் பிரதிக்ஞாபங்கத்திற்குப் பரிஹாரமாக நாம் பற்பல காரணங்களைக் கூறிவிடலாம். ஏனெனில், அன்பின்றி நம்மால் செய்யப்படும் உபசாரமானது முன்னையை விட அதிகமாக இருந்தபோதிலும், அது விவேகிகளான ஸ்திரீகளுக்கு உபசாரமாகமாட்டாது அன்றோ?

**விதூஷகன்:-** மஹாராஜ! அந்தப்புர ஸ்திரீகளிடம் தங்களுக்கு இருக்கும் தாக்ஷிண்யத்தைத் திடீரெனத் தள்ளிவிடுவதுபோலக் கூறுவதும் தகுதியல்லவே!

**ராஜா:-** *(யோசித்து)* ஆனால், பிரமதவனமார்க்கத்தைக் காண்பிப்பாய்.

**விதூஷகன்:-** இவ்வழியே வாருங்கள்

*(இருவரும் செல்கின்றார்கள்)*

அரசே! இதோ! காற்றினால் இத்தளிர்கள் அசைக்கப்படுகின்ற இத்தோற்றம் வஸந்தன் தனது விரல்களால் தங்களை இப்பிரமத வனத்தில் பிரவேசிக்குமாறு துரிதப்படுத்துகின்றான் போலும்!

**ராஜா:-** *(பரிச சுகத்தை யுணர்ந்து)* வஸந்தன் உண்மையில் பெருந்தன்மை வாய்ந்தவனன்றோ?

*4.* மித்திர! மதங்கொண்ட குயில்களினுடைய இனிய சப்தங்களால் வஸந்தன் தயவுடன் மதன வேதனைச் சிறிது சகிக்கக் கூடியதாக இருக்கின்றதா? என என்னைக் கேட்கின்றான் போலும். மாமலர்களின் நறுமணத்துடன் ஹிதமாய்ப் பரிசிக்கின்ற தென்றல், எனது சரீரத்தில் தடவிக்கொடுக்கும் அவளது கரம்போல் இன்பம் அளிக்கின்றது.

**விதூஷகன்:-** அரசே! நந்தவனத்தில் பிரவேசியுங்கள். மனம் நிம்மதியை அடையலாம்.

(இருவரும் பிரவேசிக்கின்றார்கள்)

**விதூஷகன்:-** மஹாராஜ! இங்கே வஸந்த லக்ஷிமியை நன்கு கவனியுங்கள். தங்களை வஞ்சிக்க எண்ணங் கொண்டே இவள், நன்றாய் அலங்கரித்துக் கொள்ளப்பட்ட யுவதிகளும் நாணும்படி பருவ மலர்களால் அலங்கரிக்கப்பட்டு விளங்குகின்றாள்.

5. **ராஜா:-** நண்ப! ஆச்சரியத்துடன் கவனிக்கின்றேன். சிவந்த இவ்வசோக புஷ்பத்தின் காந்தியால் கோவைப் பழம்போன்ற உதடுகளில் பூசப்பட்ட "அலக்தகம்" என்ற செம்பஞ்சுக் குழம்பானது தனது சிறப்பை இழந்ததாயிருக்கின்றது. சற்றிருண்டு வெண்சிவப்பான இம்மருதாணி மலர்கள், முகங்களில் பலவர்ணங்களால் செய்துகொள்ளும் "விசேஷகம்" என்ற அலங்காரமான பூச்சைப் புறக்கணிக்கின்றது. தேனீக்களாகிய அஞ்சனத்தோடு கூடிய திலக புஷ்பங்கள் நெற்றித் திலகத்தையே தோற்கடித்ததாயிருக்கின்றது. ஆகையால், ஸ்திரீகள் தங்கள் முகங்களை அலங்கரித்துக் கொள்வதை இந்த வஸந்த லக்ஷ்மியானவள் இவ்விதம் அவமதிக்கின்றனள் போலும்.

(இருவர்களும் உத்தியான சோபையைக் கவனிக்கின்றார்கள்)

(மனவெழுச்சியுடன் மாளவிகை பிரவேசிக்கின்றாள்)

**மாளவிகா:-** அரசனது மனோபாவம் எவ்வாறாக இருக்கின்றதென்பதை அறியாமல் அவரை நான் நேசிப்பது எனக்கே வெட்கமாக இருக்கின்றது. இப்படி இருக்க, எனதருமைத் தோழியிடம் இச்சங்கதியைத் தெரியப்படுத்துவதற்குத்தான் எனக்குத் திறமை எங்கே ? பரிஹாரமில்லாமையால் தாங்கவொண்ணாத வேதனையை எனக்கு மன்மதன் எவ்வளவு காலம் வரைதான் கொடுத்துக் கொண்டு இருப்பானோ? யானறியேன்.

*(சிறிது சென்று)*

யான் எங்கே செல்கின்றேன்? *(யோசித்து)*. ஆம்! "கௌதமனது புத்திக்குறைவால் ஊஞ்சலில் இருந்து கீழே விழுந்த எனது பாதங்கள் வருந்துகின்றன. நீ சென்று தங்கநிறமான அசோக மரத்தின் விருப்பத்தை நிறைவேற்றுவாய். இன்றுமுதல் ஐந்து தினங்களுக்குள் இந்த அசோகமரம் புஷ்பிக்குமாகில், அப்பொழுது யான் (இடையில் பெரு மூச்சுவிட்டு) உனது விருப்பத்தைப் பூர்த்தி செய்து வைப்பேன்" என மஹாராணியவர்களால் யான்

கட்டளையிடப்பட்டிருக்கின்றேனன்றோ! ஆகையால், எனது கடமையைச் செலுத்தவேண்டிய இடத்திற்கு யான் முதலில் செல்லுகின்றேன். எனது பாதங்களுக்கு அலங்காரம் செய்யும் பொருட்டு பகுளாவளிகை இங்கு வருவதற்குச் சிறிது நேரம் செல்லும். அதற்குள் யாதொரு இடையூறுமின்றி யான் அழுகின்றேன்.

*(செல்லுகின்றாள்)*

**விதூஷகன்:-** ஹா! மத்தியபானத்தால் மயங்கி மதி இழந்தவனுக்கு இதோ கற்கண்டு கிடைத்துவிட்டதே!

**ராஜா:-** அதென்ன?

**விதூஷகன்:-** இதோ! பூர்ணமாய் அலங்கரித்துக் கொள்ளாமல் கவலை கொண்டவள்போல் தனிமையாய் மாளாவிகையானவள் சமீபத்திலேயே இருக்கின்றனளே!

**ராஜா:-** *(ஸந்தோஷத்துடன்)* என்ன? மாளவிகையா?

**விதூஷகன்:-** ஆம்! மாளவிகைதான்.

**ராஜா:-** இனி எனது உயிர் என்னிடம் தங்கி இருக்கலாம்.

6. தாகத்தால் ஜலபானத்தை விரும்பிய வழிப்போக்கனது மனம் ஸாரஸபக்ஷிகளின் சப்தங்களால் அருகாமையிலேயே தருக்களால் மறைக்கப்பட்டிருக்கும் தடாகத்தை அடைந்து எவ்வாறு சாந்தியை அடைகின்றதோ, அவ்வாறே சோர்வுற்ற எனது மனமும் நிம்மதியை அடைகின்றது. அவள் எங்கே?

**விதூஷகன்:-** அவள் தருவரிசைகளின் மத்தியில் இருந்து இவ்வழியாகவே வந்து கொண்டிருக்கின்றாள்.

**ராஜா:-** *(பார்த்து, மகிழ்வுடன்)* நண்ப! இவளைப் பார்க்கின்றேன்.

7. நிதப்பங்களில் அகன்றும், இடையில் மெலிந்தும், தனங்களில் உயர்ந்தும், கண்களில் நீண்டும் இருக்கின்ற இதோ எனது உயிர் வந்து கொண்டிருக்கின்றது. மித்திர! இவளது நிலைமை முன்னிலும் அழகு வாய்ந்து விளங்குகின்றது. எவ்வாறெனில்,

8. நாணல் மடல்போல் வெளுத்த அகன்ற கன்னங்களுடன் சிற்சில ஆபரணங்களை மட்டில் அணிந்து கொண்டிருக்கும் இம்மாளவிகையானவள் வஸந்த காலத்தில் தழைகள் பழுத்து சிற்சில மலர்களுடன் கூடின குந்திக்கொடிபோல் விளங்குகின்றனள்.

**விதூஷகன்:-** இவளும் தங்களைப் போலவே மன வேதனைகொண்டு உழல்பவள் போலும்.

**ராஜா:-** நீ அன்பால் இவ்விதம் எண்ணுகின்றனை.

**மாளவிகா:-** புஷ்பங்களாகிய ஆபரணங்களைப் பெறாது மிருதுவான தோஹதத்தை விரும்புகின்ற இவ்வசோகத் தருவும் என்னைப் போல் கவலை கொண்டதாக அன்றோ காணப்படுகின்றது. சரி! தருக்களின் நிழலால் குளிர்ந்த இப்பளிங்கின்மேல் உட்கார்ந்து மனதிற்கு நிம்மதியை உண்டு பண்ணிக் கொள்ளுகின்றேன்.

**விதூஷகன்:-** அரசே! கேட்டீர்களா! கேளுங்கள். கேளுங்கள். இது மாளவிகையின் வார்த்தை. "கவலை கொண்டவளாக இருக்கின்றேன்" என்று கூறுகின்றனள்.

**ராஜா:-** நண்ப! இதனாலேயே உனது ஊகம் சரியானதென்று யான் எப்படி நினைக்கமுடியும்? ஏனெனில்,

*9.* மருதாணி மலர்களின் மகரந்தங்களை எடுத்துக்கொண்டு, சிறிது விரிந்த தளிர்களது மத்தியிலிருந்து பெருகும் நீர்த்துளிகளோடு கூடின இத்தென்றலானது காரணமில்லாமலே மனோவிகாரத்தை யுண்டுபண்ணுகின்றதன்றோ?

(மாளவிகை உட்காருகின்றாள்)

**ராஜா:-** கௌதம! இங்குவா. நாம் இக் கொடியின் பின்னே மறைந்திருப்போம்.

**விதூஷகன்:-** அரசே! தூரத்தில் இராவதி வருகின்றாளென நினைக்கின்றேன்.

**ராஜா:-** நண்ப! தாமரைத் தடாகத்தைக் கண்ட மதகஜம் முதலையைப் பொருட்படுத்துகின்றதில்லையே!

(பார்த்துக்கொண்டு நிற்கின்றான்)

**மாளவிகை:-** இடையீடின்றி, மிக உயர்ந்தநிலைமையை அடைய விரும்பிய ஹே மனமே! ஏன் பேராசைப் படுகின்றாய்? பேராசைப்பட்டு என்னை வீணாகத் தொந்தரவு செய்தல் வேண்டாம்!

(விதூஷகன் அரசனைப் பார்க்கிறான்)

**ராஜா:-** பிரியே! சினேகத்தின் விபரீதத் தன்மையைப் பார்த்தாயா?

*10.* உனது மனச் சோர்வுக்குக் காரணம் இன்ன தென்பதை நீ விவரிக்கின்றாயில்லை. எனது ஊகமும் அதன் உண்மையை அறியத் திறமையற்றதாய் இருக்கின்றது. ஆயினும், ஹே

சுந்தரி! இத்தகைய வருத்தங்களுக்கு யான் என்னையே லக்ஷ்யமாகக் கருதுகின்றேன்.

**விதூஷகன்:-** மஹாராஜா! இப்பொழுது தங்களது ஸந்தேஹம் தெளிந்துவிடும். ஏகாந்தத்தில் மாளவிகையைச் சந்திக்க, நமது செய்தியைத் தெரிந்த பகுளாவளிகையும் இதோ வந்துகொண்டு இருக்கின்றனள்.

**ராஜா:-** நமது பிரார்த்தனையை அவள் நினைவில் வைத்துக் கொண்டிருப்பாளா?

**விதூஷகன்:-** மஹாராஜ! என்ன! தங்களது இச்செய்தி எவ்வளவு முக்கியமானது? இப் பணிப்பெண் இதை எவ்விதம் மறப்பாள்? யானன்றோ இதை இன்னமும் மறக்காமல் இருக்கின்றேன்.

(மாளவிகையின் பாதங்களை அலங்கரிக்க கைகளில் ஆபரணங்களை வைத்துக் கொண்டு பகுளாவளிகை வருகின்றாள்)

**பகுளாவளிகா:-** ஸகி! சுகமா!

**மாளவிகா:-** ஹோ! பகுளாவளிகா! வரவேண்டும். வரவேண்டும். உட்காருவாய்.

**பகுளாவளிகா:-** (உட்கார்ந்து) ஸகி! உனக்குத் தகுதியான காரியத்தையே தேவியார் உனக்கு கொடுத்திருக்கின்றார்கள். ஆகையால், உனது பாதத்தை என்னிடம் கொடு. அதில் செம்பஞ்சுக் குழம்பைப் பூசி தண்டையையும் பூட்டுகின்றேன்.

**மாளவிகா:-** (மனதுள்) ஹே மனமே! இத்தகைய பாக்கியம் எனக்கு கிட்டி விட்டது என மகிழ்தல் வேண்டாம். இக் கஷ்டத்திலிருந்து யான் என்னை எவ்வாறு விடுவித்துக் கொள்வேன். அல்லது இதுவே எனக்கு மரணகாலத்திற்கேற்ற அலங்காரமாக ஆகும்.

**பகுளாவளிகா:-** ஸகி! ஏன் ஐயப்படுகின்றனை? மஹாராணியவர்கள் இவ்வசோக விருக்ஷம் புஷ்பிக்கவேண்டுமென அதிகக் கவலைக் கொண்டிருக் கின்றார்கள்.

**ராஜா:-** ஒஹோ! இந்த அசோக மரத்தின் பொருட்டுச் செய்யும் தோஹதக்கிரியையா இது!

**விதூஷகன்:-** என்ன! தேவியார் இம்மாளவிகையைக் காரணமின்றி அந்தப்புரத்திற்குரிய அலங்காரங்களால் அலங்கரிக்க மாட்டார்கள் என்பதைத் தாங்கள் அறியவில்லையா?

**மாளவிகை:-** ஸகி! இதை மன்னித்துக் கொள்ள வேண்டும்.

(பாதத்தைக் கொடுக்கின்றாள்)

**பகுளாவளிகா:-** அடி! என்ன! நீயுமெனது சரீரமாகவே இருக்கின்றாய்.

(மாளவிகையின் பாதத்திற்கு அலங்காரம் செய்கின்றாள்)

*11.* **ராஜா:-** கௌதம! பிரியையினுடைய பாதத்தின் நுனியில் பூசப்பட்ட இந்த செம்பஞ்சின் ஈரமான கோடுகளைப் பார்த்தனையா? இவைகள் பரமசிவனால் எரிக்கப்பட்ட மன்மதனாகிய விருக்ஷத்தில் முதல் முதலில் தளிர்க்கின்ற தளிர்கள் போலல்லவோ காணப்படுகின்றன.

**விதூஷகன்:-** மஹாராஜா! இவளது பாதத்திற்குத் தகுதியான அதிகாரத்தையே மஹாராணியார் இவளுக்குக் கொடுத்திருக்கின்றார்கள்.

**ராஜா:-** நண்ப! நீ கூறியது உண்மையே.

*12.* புதிய தளிர்போல் சிவந்ததாயும், சுற்றிலும் ஒளி வீசுகின்ற நகங்களை யுடையதாயுமிருக்கின்ற தனது பாதத்தின் நுனியால், இந்நங்கை தோகதத்தை விரும்பி, புஷ்பிக்காமலிருக்கின்ற அசோகமரத்தையும், சமீபத்தில் குற்றம் செய்து தலைகுனிந்து நிற்கின்ற கணவனையும் தண்டிக்கத் தகுந்தவளாகவே இருக்கின்றாள்,

**விதூஷகன்:-** குற்றம் செய்தால் தங்களையும்தான் இவள் இவ்வாறே தண்டிப்பாள்.

**அரசன்:-** வரப்போவதைக் கூறும் பிராம்மணோத்தமனது வசனம் என்னால் ஏற்றுக் கொள்ளற்பாலதே.

( மத்தியத்தால் மயக்கமுற்ற இராவதி சேடியுடன் வருகின்றாள் )

**இராவதி:-** குழந்தாய்! நிபுணிகா! மத்தியத்தால் ஏற்படும் மயக்கமானது காதலிகளுக்கு அதிக அழகைக் கொடுக்கின்றதென யான் கேள்விப் பட்டிருக்கின்றேன். இவ்வதந்தி உண்மைதானா!

**நிபுணிகா:-** முன்பு இது உலகப்பேச்சாகவே இருந்தது. ஆனால், இப்பொழுது அது உண்மையாயிற்று.

**இராவதி:-** அன்பினால் கூறும் இவ்வார்த்தை போதும்! மஹாராஜாவானவர் முன்னமே டோலா கிருஹத்திற்குச் சென்றுவிட்டார் என்பதை நீ எவ்வாறு அறிந்தாய்?

**நிபுணிகா:-** தேவி! அரசன் தங்களிடத்தில் வைத்திருக்கும் குறையற்ற அன்பிலிருந்துதான் நான் ஊகித்தேன்.

இராவதி:- அடி! போதுமிந்த தோத்திரம்! நடு நிலைமையிலுள்ளவள் போல் பேசுவாய்.

நிபுணிகா:- வஸந்தகாலப் பூஜாப் பணியாரங்களில் விருப்பம்கொண்ட கௌதமனால் இது சொல்லப்பட்டது. சீக்கிரம் வாருங்கள்.

இராவதி:- (மத நிலைமைக்குத் தக்கவாறு சிறிது சென்று) நிபுணிகா! மத்தியத்தினால் சிறிது மயக்கம் கொண்டவளாய் இருப்பினும், என்னை எனது மனம் நாதனைப் பார்க்கவே தூண்டுகின்றது. ஆனால், எனது பாதங்களோ மார்க்கத்தில் செல்கின்றதில்லை.

நிபுணிகா:- தேவி! நாம் டோலா கிருஹத்திற்கு வந்துவிட்டோமே.

இராவதி:- நிபுணிகா! என்ன! நாதன் இங்கு காணப்படவில்லையே.

நிபுணிகா:- தேவி! நன்றாய்க் கவனியுங்கள். அரசன் இங்குதான் எங்கேயாவது பரிஹாஸார்த்தமாய் ஒளிந்து கொண்டிருக்கலாம். நாமும் கொடிகளால் சூழப்பட்ட அசோகமரத்தின் நிழலிலுள்ள பளிங்கிற்குச் செல்வோம்.

( இராவதி அவ்வாறே செய்கின்றாள் )

நிபுணிகா:- (சிறிது சென்று, பார்த்து) தேவி! பாருங்கள். மாந்தளிர்களைப் பறிக்கையில் நாம் செவ்வெறும்புகளால் கடிக்கப்படுகின்றோம்.

இராவதி:- இதென்ன!

நிபுணிகா:- தேவி! இதோ! பகுளாவளிகை அசோகமரத்தின் நிழலில் மாளவிகையின் பாதத்திற்கு அலங்காரம் செய்து கொண்டிருக்கின்றாள்.

இராவதி:- (பயத்தைக் காண்பித்து) இது மாளவிகைக்குத் தகுதியான இடமல்லவே! நிபுணிகா! நீ யாது நினைக்கின்றாய் ?

நிபுணிகா:- தேவி! ஊஞ்சலிலிருந்து கீழே விழுந்த காரணத்தால் பாதங்களில் வேதனைகொண்ட மஹாராணி அவர்களால் அசோகமரத்தின் விருப்பத்தை நிறைவேற்றும் இவ்வதிகாரத்தில் மாளவிகையானவள் நியமிக்கப் பட்டிருக்கின்றாளென ஊகிக்கின்றேன். இல்லாவிடில், தான் தரித்துக்கொள்ளும் தண்டைகளைத் தனது பரிஜனத்திற்கு அணிய மஹாராணியார் எவ்வாறு அனுமதிப்பார்கள்?

இராவதி:- நிபுணிகா! மாளவிகைக்கு இது பெருத்த கௌரவமே!

நிபுணிகா:- தேவி! என்ன! மஹாராஜாவைத் தேடாமல் இருக்கின்றீர்களே!

இராவதி:- நிபுணிகா! எங்கு செல்வதற்கும் எனது கால்கள் எழவில்லையே! எனது மனம் எதையோ ஸந்தேஹிக்கின்றது. நான் முதலில் எனது ஸந்தேகத்தைத் தீர்த்துக் கொள்கின்றேன். சற்றுப் பொறு. *(மாளவிகையைக் கவனித்து மனதுள்)* ஓ! நியாயம்தான். எனது மனம் பயந்தது சரியே!

பகுளாவளிகா:- *(மாளவிகையை அவளது பாதத்தைக் கவனிக்கச் செய்து)* ஸகி! உனது பாதத்திலிடப்பட்ட செம்பஞ்சின் இரேகை உன் மனதைத் திருப்தி செய்கின்றதா?

மாளவிகை:- எனது பாதமாக விருப்பதால் யான் இதைப் புகழ வெட்கப்படுகின்றேன். அடி! இவ்வலங்கார வித்தையை நீ எவரிடமிருந்து கற்றுக்கொண்டாய் ?

பகுளாவளிகா:- ஸகி! இவ்விஷயத்தில் யான் மஹாராஜாவினது மாணவியன்றோ.

விதூஷகன்:- அரசே! சரி! சரி!! குருதக்ஷிணையைக் கொடுக்குமாறு இவளைத் துரிதப்படுத்துங்களேன்.

மாளவிகா:- ஸகி! நீ சிறிதும் கர்வமில்லாதவளாகவே இருக்கின்றனை.

பகுளாவளிகா:- ஸகி! நான் கற்றவித்தையை வெளிப்படுத்துவதற்குத் தகுதியான உனது பாதங்களைப் பெற்றேன். இப்பொழுது நான் கர்வப்படவே போகின்றேன். *(மனதுள்)* எனது கடமை முடிவுபெற்றது. *(பாதத்தைக் கவனித்து வெளியாய்)* ஸகி! உனது பாதம் அலங்கரிக்கப்பட்டது. இது உலர வாயால் ஊதவேண்டியதில்லை. இவ்விடத்தில் காற்றும் வீசிக்கொண்டுதான் இருக்கின்றது.

ராஜா:- நண்ப! கவனி! கவனி!!

13. ஈரமான செம்பஞ்சுப் பூச்சுகளையுடைய இவளது பாதத்திற்கு என்முக மாருதத்தால் ஊதிப் பணி செய்ய நேர்ந்த மேன்மையான ஸந்தர்ப்பம் இதுவே.

விதூஷகன்:- மஹாராஜ! ஏன் வருந்துகின்றீர்கள்? வெகுகாலம் இவ்வுரிமையை அநுபவிக்கும் பாக்கியத்தைத் தாங்கள் விரைவில் பெறுவீர்கள்.

பகுளாவளிகா:- ஸகி! உனது பாதம் செந்தாமரை மலர்போல் விளங்குகின்றது. உறுதியாய் நீ மஹாராஜாவினது மடியில் சார்ந்திருப்பாயாக.

*( இராவதி நிபுணிகா முகத்தைப் பார்க்கின்றாள் )*

ராஜா:- எனது விருப்பமும் இதுவேயாகும்.

மாளவிகா:- ஸகி! என்ன! தகுதியற்ற வசனங்களை மொழிகின்றாயே நீ!

பகுளாவளிகா:- சொல்ல வேண்டிய வசனத்தைத் தானே சொன்னேன்.

மாளவிகா:- அடி! பகுளாவளிகா! நான் உனக்குப் பிரியை யல்லவா. ஆகையால்தான் இவ்விதம் கூறுகின்றாய்.

பகுளாவளிகா:- ஸகி! எனக்கு மட்டும் அல்ல.

மாளவிகா:- சரி! மற்றும் யாருக்கு?

பகுளாவளிகா:- ஸகி! குணத்தைப் போற்றும் மஹாராஜாவுக்கும்தான் நீ பிரியையாக இருக்கின்றாய்.

மாளவிகா:- ஸகி! ஏன் பொய் பேசுகின்றாய்? அத்தகைய பாக்கியம் என்னிடமில்லையே!

பகுளாவளிகா:- உண்மைதான். இது உன்னிடமில்லை. ஆனால், மெலிந்து சிறிது வெளுத்த மஹாராஜாவின் சரீரங்களில் இது காணப்படுகின்றதே!

நிபுணிகா:- தேவி! இத்துஷ்டை கூறும் வார்த்தை முன்னமேயே நன்றாக யோசிக்கப்பட்டது போலும்.

பகுளாவளிகா:- "அன்பு அன்பினால் பரிசோதிக்கப்பட வேண்டும்" என்ற பெரியோர் பழமொழியை உண்மையாகச் செய்வாய்!

மாளவிகா:- அடி! என்ன! உன்னிஷ்டம்போல் பேசுகின்றாயே.

பகுளாவளிகா:- இல்லை! இல்லை!! அன்பு நிறைந்த இவ்வசனம் அரசனால் கூறப்பட்டவைகளேயாகும்.

மாளவிகா:- ஸகி! மஹாராணியை நினைக்க எனது மனம் அஞ்சுகின்றதே!

பகுளாவளிகா:- அடி பேதாய்! வஸந்த காலத்தின் ஸாரமான நல்ல மாமலர்களை எப்பொழுதும் தேன் வண்டுகள் சூழ்ந்துகொண்டு தானிருக்கின்றன. அதனால், அப்புஷ்பங்கள் அணிந்துகொள்ளப் படுகின்றதில்லையா என்ன?

மாளவிகா:- ஸரி! இவ்விஷயத்தில் எனக்கு ஏதாவது தீங்கு நேரிடுமேயாகில் நீதான் உதவிபுரிதல் வேண்டும்.

பகுளாவளிகா:- அடி! நெருக்கடியான காலத்தில் உதவிபுரியும் *பகுளாவளிகை என்றல்லவா நானும் அழைக்கப்படுகிறேன்.

* "பகுளாவளிகா" என்பது மகிழமலர் மாலையைக் குறிக்கும். அது வாட வாட வாசனை மிகும்.

ராஜா:- பகுளாவளிகா! நல்லது! நல்லது!!

14. "ஏன் பொய் பேசுகின்றனை? இத்தகைய பாக்கியம் என்னிடமில்லையே!" என்ற மாளவிகையினது பாவத்தைத் தெரிந்தபின்பு, "அரசனது இளைத்த சரீரங்களில் இது காணப்படுகின்றது என்ற பகுளாவளிகையின் பதில் வார்த்தையாலும், பின்பு, நீ என்ன உனதிஷ்டம்போல் பேசுகின்றனையே? என்று பகுளாவளிகையை மாளவிகையானவள் நிராகரித்தபொழுது "இவ்வசனம் அரசனால்தான் கூறப்பட்டது" என்று தக்கவாறு உரைத்த பகுளாவளிகையின் பதில் வார்தையாலுமே இம்மாளவிகையானவள் தனது தோழியின் கட்டளையில் நின்றாள். ஆகையால், "காதலர்களது உயிர் தூதர்கள் வசத்திலேயே இருக்கின்றன" என்பது நியாயமே.

இராவதி:- நிபுணிகா! பார்த்தனையா? பகுளாவளிகையால் தூண்டப்பட்டே மாளவிகை இக்காரியத்தில் இறங்கியிருக்கின்றாள்.

நிபுணிகா:- தேவி! உபதேசம்தான் ஆசையற்றவர்களுக்கும் ஆசையை யுண்டுபண்ணுகின்றது.

இராவதி:- அடி! என்மனம் காரணமில்லமலா பயந்தது? இப்பொழுது யான் இதன் உண்மையைத் தெரிந்துகொள்ளுகின்றேன். பின்பு இதைப்பற்றி என்ன செய்ய வேண்டுமென்று யோசிக்கின்றேன்.

பகுளாவளிகா:- ஸகி! உனது மற்றோர் பாதமும் அலங்கரிக்கப்பட்டது. இரண்டு பாதங்களிலும் தண்டைகளை யணிகின்றேன் (அவ்வாறே செய்கின்றாள்) அடி! எழுந்திரு; அசோகமரம் புஷ்க்குமாறு தேவியாரது கட்டளையை நிறைவேற்றுவாய்

(எழுந்திருக்கின்றார்கள்)

இராவதி:- ஒஹோ! இது மஹாராணி யவர்களது கட்டளையா? இருக்கட்டும்!

பகுளாவளிகா:- ஸகி! இதோ உனது முன்னால் காணப்படுவது ராகத்தை உடையதாயும் அநுபவிக்கத் தகுந்ததாயும் இருக்கின்றது.

மாளவிகா:- (ஸந்தோஷத்துடன்) ஸகி! யார்? மஹாராஜாவா?

பகுளாவளிகா:- (புன்னகையுடன்) ஸகி! அரசனல்ல. அசோகமரத்தினது கிளையில் தொங்கும் பூங்கொத்து அன்றோ இது! இதை யணிந்துகொள்.

விதூஷகன்:- அரசே! கேட்டீர்களா.

ராஜா:- நண்ப! காதலர்களுக்கு இதுவே போதுமானது.

15. பாரஸ்பர பிரேமையற்ற இருவர்களுக்குள் சம்பவிக்கும் ஸமாகமத்தைக் காட்டிலும், பரஸ்பர பிரேமைகொண்டு ஸமாகமம்பெறாது, மரணமடைகின்ற இருகாதலர்களுடைய இன்ப அன்பே மேலானது என யான் திருப்தியடைகின்றேன்.

(மாளவிகை தளிர்களால் அலங்கரித்துக்கொண்டு விளையாட்டாக அசோகதரு புஷ்பிக்கும் பொருட்டுத் தனது பாதத்தை நீட்டுகின்றாள்)

16. ராஜா:- நண்ப!
இந்த அசோக தருவின் இளந்தளிர்களால், தனது காதுகளை யலங்கரித்துக்கொண்ட இந்த மாளவிகையானவள், பின்பு, அம்மரத்தின் மேல் தனது பாதமலர்களையே சூட்டுகின்றாள். இவ்விருவர்களுமே தமக்குள் தகுந்த பொருளைப் பரிவர்த்தனம் செய்துகொண்டு விட்டமையால் யான் ஏமாற்றப்பட்டவனானேன்.

மாளவிகா:- ஸகி! நமது மனோரதம் நிறைவேறுமா?

பகுளாவளிகா:- ஸகி! உனது பாதப் பரிசத்தைப் பெறுவதான இத்தகைய கௌரவத்தைப் பெற்றும் இந்த அசோகமரம் உடனே புஷ்பிக்கத் தவறுமே யாகில், இது குணத்தை அறியச் சக்தியற்றதாகவேயாகும். அது உன்னுடைய குற்றமாகாது.

17. ராஜா:- ஹே அசோக! மெல்லிய இடையை உடைய மாளவிகையால், தண்டைகளது சப்தத்தோடு கூடியதும், புதிய தாமரை மலர்போல் சிவந்ததுமாகிய இந்தப்பாதத்தினால் கௌரவிக்கப்பட்ட நீ உடனே புஷ்பிக்கத் தவறினால், இக்கௌரவம், நீ காமிகளின் வழக்கமான (சாதாரணமான) தோகதத்தைத் தரித்ததற்குச் சமானமாகவே ஆகிவிடும்.

நண்ப! சம்பாஷணைக்கு அநுகூலமான இச் சந்தர்ப்பத்தை அனுசரித்து இப்பொழுது யான் இவளிடம் செல்ல விரும்புகிறேன்.

விதூஷகன்:- அரசே! வாருங்கள். இப்பொழுது இவளிடம் ஒரு வேடிக்கை செய்கின்றேன்.

(இருவரும் வருகின்றார்கள்)

நிபுணிகா:- தேவி! இதோ! மஹாராஜாவும் இங்கு வருகின்றார்.

இராவதி:- அடி! நான் முன்னமேயே எதிர் பார்த்ததுதானே இது!

**விதூஷகன்:-** *(ஸமீபம் வந்து)* ஸகி! அரசனுக்கு அருமைத் தோழனான இந்த அசோக தருவை நீ உனது இடது பாதத்தால் தண்டித்தனையே! இது தகுதியா?

**இருவர்களும்:-** *(பரபரப்புடன்)* ஹா! அரசனா!

**விதூஷகன்:-** பகுளாவளிகா! இவளது தகுதியற்ற இத்தகைய செயலை அறிந்திருந்தும் நீ ஏன் இவளைத் தடுக்காமல் இருந்தனை ?

*(மாளவிகை பயத்தை நடிக்கின்றாள்)*

**நிபுணிகா:-** தாயே! ஆர்ய கௌதமன் என்ன காரியம் செய்கின்றான் பார்த்தீர்களா?

**இராவதி:-** அடி! இப்படிச் செய்யாவிட்டால் இவன் எவ்வாறு ஜீவிப்பான்?

**பகுளாவளிகா:-** ஐயா! இவள் தேவியாரது கட்டளையைத்தானே செலுத்துகின்றாள். இவ்வதிக் கிரமத்தில் இம்மாளவிகை சுவாதீனமற்றறவளாகவே இருக்கின்றாள். தாங்கள் தயவு செய்ய வேண்டும்.

*(அரசன் முன் மாளவிவகையை நமஸ்கரிக்கும்படி செய்து, தானும் நமஸ்கரிக்கின்றாள்)*

**ராஜா:-** இவ்விதம் நீ குற்றவாளி அல்லாமலிருந்தால், ஹே கல்யாணி! எழுந்திருப்பாய்.

*(கை கொடுத்து எழுந்திருக்கச் செய்கின்றான்)*

**விதூஷகன்:-** அரசே! இதுதான் சரி! இவ் விஷயத்தில் மஹாராணியார் மரியாதை செய்யப் படவேண்டியது தானே!

**ராஜா:-** *(சிரித்துக்கொண்டு)*

*18.* சுந்தரி! கடினமான இம்மரக்கிளையை உதைத்ததனால் தளிர்போல் மிருதுவான உனது இடது பாதத்திற்கு இப்பொழுது வேதனை ஒன்றும் உண்டாகவில்லையா ?

*(மாளவிகை வெட்கப்படுகின்றாள்)*

**இராவதி:-** *(பொறாமையுடன்)* ஆஹா! என்ன ஆச்சர்யம்! மஹாராஜாவினது ஹிருதயம் புதிய வெண்ணைபோல் எவ்வளவு மிருதுவா யிருக்கின்றது ?

**மாளவிகா:-** பகுளாவளிகா! மஹாராணியாரது கட்டளை நிறைவேற்றப்பட்டது. வா, தேவியாரிடம் தெரிவித்துக் கொள்வோம்.

**பகுளாவளிகா:-** ஆனால், அரசனிடம் விடை பெற்றுக் கொள்.

**ராஜா:-** மங்களவடிவே! சென்று வரலாம். ஆனால், எனது பிரார்த்தனைகளுக்கும் தக்க சந்தர்ப்பம் இதுவே. அதையும் நீ கவனித்தல் வேண்டும்.

**பகுளாவளிகா:-** ஸகி! கவனமாய்க்கேள் (அரசனைப்பார்த்து) அரசே! ஆக்ஞாபியுங்கள்.

19. **ராஜா:-** ஸகி! இந்த மனிதனும் வெகு காலமாய் ஸந்தோஷமாகிய புஷ்பத்தைப் பெறாமல் இருக்கின்றான். ஆகையால், மற்ற எதிலும் விருப்பமற்ற இவனுக்கும் (உனது) பரிசமாகிய அம்ருதத்தினால் திருப்தியை அளிப்பாள்.

**இராவதி:-** (திடீரெனத் தோன்றி) அடி! திருப்தி செய்! திருப்தி செய்!! அசோகமரம் மலரைமட்டில் கொடுக்கும். இவரோ வெனில், புஷ்பம், பழம் இவ்விரண்டையுமே கொடுப்பார்.

(எல்லோரும் இராவதியைக் கண்டு பரபரத்தார்கள்)

**ராஜா:-** (ஒரு புறமாய்) நண்ப! இப்பொழுது நாமென்ன செய்வது? யாது உபாயம் இருக்கின்றது?

**விதூஷகன்:-** என்ன! ஒட்டம் தான்.

**இராவதி:-** பகுளாவளிகா ! நல்லவேலை ஆரம்பித்தாய். மாளவிகா! ஏன்! அரசனது இஷ்டத்தைப் பூர்த்தி செய்யலாமே!

**இருவர்களும்:-** தாயே! தயவு செய்யுங்கள். நாங்கள் அரசனது தயவை எதிர்பார்க்கும் பரிஜனங்கள் தானே.

(இருவர்களும் வெளியே செல்கின்றார்கள்)

**இராவதி:-** ஆஹா! புருஷர்கள் ஒருக்காலும் நம்பத்தக்கவர்களே யல்ல. வேடனது கீதத்தில் மோஹிக்கப்பட்ட மான் பேடையைப் போலன்றோ யானும் இவருடைய கபடம் நிறைந்த வசனங்களை நம்பி, சந்தேகிக்காமலே இதுவரை இதை அறியேன்.

**விதூஷகன்:-** (மறைவாய்) அரசே! ஏதாவது ஒரு பதில் கூறுங்கள். சீக்கிரம்! சீக்கிரம்!! கன்னக்கோலுடன் கையோடு பிடிக்கப்பட்ட கள்வன் யாது பதிலுரைப்பான்? கன்னம் போடும் வித்தையைக் கற்றுவரும் மாணவனாகத் தானே தன்னைக் கூறுதல் வேண்டும்.

**ராஜா:-** சுந்தரி! எனக்கு மாளவிகையால் ஆகவேண்டியது ஒன்றுமே இல்லை. நீ இங்கு வரச்சிறிது தாமதம் ஏற்பட்டது. ஆகையால் தான், ஏதோ இவ்விதம் பொழுதைக் கழித்தேன்.

**இராவதி:-** நாத! உண்மை. தாங்கள் அதிக நம்பிக்கை உள்ளவர்கள்தான். நிம்மதியைத் தரக்கூடிய இத்தகைய பொருள் தங்களிடம் இருப்பதாக யான் இதுவரை அறியேன். ஆஹா! அறிந்திருந்தால், பாபியான யான் தங்களது ஸந்தோஷத்திற்கு இடையூறாக இங்கு வந்தே இருக்க மாட்டேன்.

**விதூஷகன்:-** தேவி! தாங்கள் மஹாராஜாவினது நடத்தையை நாகரீக மற்றதாகக் கருத வேண்டாம். தற்செயலாய் மார்க்கத்தில் தேவியின் பரிஜனத்தோடு நேர்ந்த ஸம்பாஷணையே குற்றமாகக் கருதப்பட்டால், இது விஷயத்தில் தாங்கள் தான் நீதி கூறல் வேண்டும்.

**இராவதி:-** இல்லை! இல்லை!! ஸம்பாஷணையே நடக்கட்டும். நான் எதற்காக அனாவசியமாய் என்னைத் துன்புறுத்திக் கொள்கின்றேன்?

(கோபத்துடன் செல்கின்றாள்)

**ராஜா:-** (இராவதியைப் பின் சென்று) தேவி! தயவுசெய்வாய்.

(இராவதி ஒட்டியாணம் கழண்டு அதனால் பாதங்கள் தடுக்கப்பட்ட போதிலும், செல்கின்றாள்)

**ராஜா:-** ஸுந்தரி! அன்பார்ந்தவனிடத்தில் இத்தகைய உபேக்ஷை உனக்குத் தகுதியல்லவே!

**இராவதி:-** ஹே வஞ்சக! உனது நெஞ்சம் என்னால் நம்பமுடியாததாக வன்றோ இருக்கிறது.

20\. **ராஜா:-** பிரியே! நின்னை அகல முடியாத சம்பந்தமுடைய என்னையா 'வஞ்சக' என்றனை? அஃதிருக்கட்டும். நின் பாதங்களில் வீழ்ந்து வேண்டிக் கொள்ளுகின்றதே ஒட்டியாணம்! இதனிடத்திலுமா நீ கோபத்தைத் தணிக்கின்றாயில்லை.

**இராவதி:-** இந்த ஒட்டியாணமும் உங்களைப் போலவே தான் இரக்கமற்றதாயிருக்கின்றது.

(ஒட்டியாணத்தை எடுத்து அதனால் அரசனை அடிக்க விரும்புகின்றாள்)

21. **ராஜா:-** கோபத்தால் கண்ணீரைப் பெருக்கிக் கொண்ட இராவதி தேவியானவள், அஜாக்கிரதையால் தனதிடுப்பிலிருந்து நழுவிய தங்க ஒட்டியாணத்தை எடுத்து, அதனால், குற்றவாளியான என்னைத் தண்டிக்க முயன்ற இத் தோற்றம், மழை நீரைப் பெருக்கிக்கொண்டு மேகவரிசையானது, மின்னற்கொடியால் விந்தியமலையைத் தாக்க நின்றது போலும்.

**இராவதி:-** மீண்டுமா என்னைக் குற்றவாளியாக நிரூபணம் செய்கின்றீர்கள்.

(அடிப்பதை நிறுத்தி தங்கமாலையுடன் கையைத் தொங்கவிட்டுக் கொள்ளுகின்றாள்)

**ராஜா:-** குற்றவாளியான எனக்குத் தண்டனை விதிப்பதை ஏன் நிறுத்தி விடுகின்றாய்?

22. சுருண்ட கூந்தலால் அழகு வாய்ந்தவளே! நீ கோபத்தையே காண்பிக்கின்றாய். ஆயினும், அடிமையினிடம் காதலையே வளர்ப்பவளாகின்றாய்! நிச்சயம், நான் இவ்வாறு செய்ய அநுமதிக்கப் படுகின்றேன்.

(பாதங்களில் விழுகின்றான்)

**இராவதி:-** நாத! தங்கள் மனதைத் திருப்தி செய்யக்கூடிய மாளவிகையின் பாதங்களல்லவே இவைகள்.

(சேடியுடன் இராவதி வெளியே செல்கின்றாள்)

**விதூஷகன்:-** அரசே! எழுந்திருங்கள். இராவதியால் தயவு செய்யப் படுகின்றீர்கள். இராணியின் தயவை அடைந்துவிட்டீர்கள்.

**ராஜா:-** (எழுந்திருந்து இராவதியைக் காணாமல்) பிரியை சென்று விட்டனளோ!

**விதூஷகன்:-** மஹாராஜ! தங்களது தகுதியற்ற இக்காரியத்தினால் இராவதி தேவியார் கோபித்தவளாகவே செல்கின்றாள். இதுவும் தங்களுக்கு நன்மையென்றே நினைக்கின்றேன். வக்கிரகதியால் ராசியை நோக்கிச் செல்லும் செவ்வாய்க்

கிரஹம்போல, மறுமுறையும் அவர்கள் ஒருக்கால் திரும்பி வரலாம். அதற்குள், நாம் சீக்கிரம் சென்று விடுவோம்.

ராஜா:- ஆஹா! மன்மதனுடைய செய்கை இவ்விதம் முரண்பாடாகவா இருக்கவேண்டும்? எனது மனமோ, பிரியையான மாளவிகை யினால் அபகரிக்கப்பட்டது. ஆகையால், எனது நமஸ்காரத்தை ஏற்காது செல்கின்ற இராவதி எனக்கு ஓர் உபகாரத்தையே செய்கின்றாள் போலும். எனெனில், என்னிடம் இவ்வாறு அன்பு நிறைந்தவளாய் இருப்பினும், எனது மனம், கோபத்துடன் செல்கின்ற இராவதியை உபேக்ஷை செய்வது எனக்குச் சாத்தியமே.

*(நண்பனுடன் அரசன் வெளியே செல்கின்றான்)*

## மூன்றாம் அங்கம் முற்றிற்று

# நான்காம் அங்கம்

(காமநோவு கொண்ட அரசனும், வேலைக்காரியும் வருகின்றனர்)

1. ராஜா:- (மனதுள்) மாளவிகை எனது கர்ணங்களின் வழியே செல்லத் துடங்கவே, காதலாகிய தருவானது விருப்பம் என்ற வேரை யூன்றிற்று, யான் அவளது நயனங்களுக்கு விஷயமாகுங்கால் (பார்க்கப்பட்டதும்) அம்மரம் மனோவிகாரமென்ற தளிர்களைத் தழைத்தது. அவளது கர ஸ்பரிசத்தால் ரோமங்களைச் சிலுத்த அத்தரு அரும்புகள் நிறையப் பெற்றது போலும். ஆகையால், அத்தருவானது சோர்வுற்ற என்னை (மாளவிகையை அடைதலென்ற) பழத்தின் சுவையையும் அருந்துகின்றவனாகச் செய்யட்டும்.

(வெளியாய்)

நண்ப! கௌதம!

சேடி:- அரசே! வாழ்க! வாழ்க!! கௌதமன் இங்கு இல்லையே!

ராஜா:- (மனதுள்) ஆம்! மாளவிகையைப்பற்றிய செய்தியை அறிந்து வரும்படி நான் அவனை அனுப்பினேன்.

(வந்து)

விதூஷகன்:- அரசே! வாழ்க!!

ராஜா:- ஜசேனா! தாரிணீதேவி இப்பொழுது எங்கு இருக்கின்றாள்? பாதங்களின் வேதனையை உணராமலிருக்குமாறு அவள் யாது உபாயம் செய்துகொண்டு இருக்கின்றாள்? அறிந்து வா.

சேடி:- அரசே! கட்டளைப்படி.

(வெளியே செல்கின்றாள்)

ராஜா:- நண்ப! நின் ஸகியான மாளவிகையினது விருத்தாந்தம் என்ன?

விதூஷகன்:- என்ன! பூனையின் கையிலகப்பட்ட பெண்குயிலுடைய கதிதான்.

ராஜா:- (கவலையுடன்) என்ன சமாச்சாரம்?

**விதூஷகன்:-** கபிலவர்ணம் வாய்ந்த நயனங்களை உடைய தாரிணீ தேவியாரது உத்தரவினால் மெலிந்த அம்மாளவிகையானவள் உக்ராண நிலவறைக்குள் யமனுடைய வாயிலில் தள்ளப்பட்டதுபோல் தள்ளப்பட்டாள்.

**ராஜா:-** எங்கள் இருவர்களது ஸந்திப்பைத் தெரிந்த பின்பு தேவி இவ்வாறு செய்தாள்?

**விதூஷகன்:-** ஆம்!

**ராஜா:-** தேவியை இவ்விதம் கோபிக்கும்படி செய்த நமது விரோதி எவராக இருக்கலாம்?

**விதூஷகன்:-** அரசே! கேளுங்கள். நேற்றைய தினம் மஹாராணி அவர்களது பாதத்தில் ஏற்பட்ட வேதனையை விசாரிக்க அவர்களிடம் இராவதி தேவியார் வந்திருந்ததாக பரிவ்ராஜிகை யவர்களிடமிருந்து நான் கேள்விப்பட்டேன்.

**ராஜா:-** பின்பு.

**விதூஷகன்:-** அரசன் தனது காதலியை (உன்னை)க் கண்டனரா? என்று தாரிணீ தேவியார் இராவதியை வினவினார்கள். "இவ்வுபசார வசனம் தங்கள் பரிஜனத்தை நாடிவிட்டது. ஆகையால், இது அர்த்தமற்றதாகும்''. என்று இராவதி தேவியார் பதிலுரைத்தார்கள்.

**ராஜா:-** இவர்களது ஸல்லாபம், பெயரைக் குறிப்பிடாமலே மாளவிகையினிடம் ஸந்தேகத்தை விளைவிக்கின்றது.

**விதூஷகன்:-** பின்பு, இடைவிடாத வற்புறுத்தப்பட்ட இராவதி தேவியார் தங்களது தகுதியற்ற நடத்தையை மஹாராணியிடம் வெளிப்படுத்தி விட்டார்கள்.

**ராஜா:-** ஆஹா! தாரிணீ தேவி மிகுந்த கோபமுடைய வளாயிற்றே! பின்பு யாது நேர்ந்தது ?

**விதூஷகன்:-** என்ன இதற்குமேல்! மாளவிகை, பகுளாவளிகை இவ்விருவரும் கால்களில் விலங்கிட பட்டவர்களாய் நாககன்னிகைகள்போல் சூரியசஞ்சாரமற்ற பாதாளவுலகத்ததில் வாஸம் செய்கின்றார்கள்.

**ராஜா:-** ஹா! கஷ்டம்! கஷ்டம்!!

2. இனிய கீதங்களைப் பாடிக்கொண்டு, மலர்ந்த மாமலர்களில் வாஸம் செய்துவந்த பெண்குயில், தேன்வண்டு ஆகிய

இவ்விரண்டும், பெருங்காற்றுடன் கூடின அகால மழையினால் மரத்தின் பொந்தினுள் விரட்டப்பட்டனவே. ஆகையால் இக்கொடிய தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ள ஏதாவது உபாயம் இருக்கின்றதா?

**விதூஷகன்:-** மஹாராஜ! எவ்வாறு தப்பித்துக்கொள்ள முடியும்? உக்ராணக் காவலிருக்கும் மாளவிகையானவள் மஹாராணியவர்களால் கீழ்வருமாறு கட்டளையிடப்பட்டிருக்கின்றாள். "வெறுக்கப்பட்ட மாளவிகை, பகுளாவளிகை என்ற இவ்விருவர்களையும் எனது உத்தரவின் அடையாளமான முத்திரை மோதிரத்தைப் பார்க்காமல் வெளியில் விடக்கூடாது" என்று.

**ராஜா:-** (பெருமூச்சுடன் யோசனைசெய்து) நண்ப! இப்பொழுது நாம் என்ன செய்வது?

**விதூஷகன்:-** (யோசனை செய்து) அரசே! உபாயமிருக்கின்றது.

**ராஜா:-** யாது உபாயம் ?

**விதூஷகன்:-** (அரசனைப் பார்த்து) இப்பொழுது யாரேனும் ஒற்றுக் கேட்டுக் கொண்டிருக்கலாம்? ஆகையால் ரகசியமாகச் சொல்லவேண்டும். (காதோடு பேசுகின்றான்) . . . . . இவ்விதம்தான் . . . . .

(தெரியப் படுத்துகின்றான்)

**ராஜா:-** (ஸந்தோஷத்துடன்) நண்ப! நன்கு யோசிக்கப்பட்டது. ஜயம் பெறுமாறு செய்து முடிப்பாய்.

(வந்து)

**சேடி:-** மஹாராஜ! சுத்தக்காற்று வீசுமிடத்தில் தயாரிக்கப்பட்ட படுக்கை (சார்மணை) யில் உட்கார்ந்தவர்களாய் மஹாராணியவர்கள், சிவந்தசந்தனத்தால் பூசப்பட்ட தனது பாதங்களைப் பரிஜனங்களின் கைகளில் சார்த்திக்கொண்டும், பரிவ்ராஜிகையவர்களால் சொல்லப்பட்ட கதைகளைக் கேட்டுக்கொண்டும் பாதங்களின் வேதனையிலிருந்து விலகியிருக்கின்றார்கள்.

**ராஜா:-** கௌதம! ஆனால் நாம் தேவியைப் பார்ப்பதற்கு இதுவே தக்க தருணம் ஆக இருக்கின்றது.

**விதூஷகன் :-** அரசே! நீங்கள் முதலில் செல்லுங்கள் பின்பு நானும் ஏதாவது கையுறை தயார் செய்துகொண்டு பார்க்க வருகின்றேன்.

**ராஜா:-** கௌதம! எனது உபாயத்தை ஜயஸேனாவிடமும் தெரியப்படுத்து, பின்பு செல்.

**விதூஷகன்:-** அப்படியே (காதோடு) ஜயஸேனா ! இவ்விதமாய் (தெரியப்படுத்தி வெளியே செல்கின்றான்)

**ராஜா:-** ஜயஸேனா! தேவி சயனித்திருக்கும் இடத்திற்கு வழி காண்பிப்பாய்.

**சேடி:-** இப்படி வாருங்கள். இப்படி வாருங்கள்.

( படுத்துக்கொண்டவர்களாய் தேவியும், பரிவ்ராஜிகா, பரிஜனங்கள் ஆகிய இவர்களும் பிரவேசிக்கின்றார்கள் )

**தேவி:-** தாயே! கதையின் பொருளடக்கம் மிகவும் அழகாக இருக்கின்றது! பின்பு என்ன!

**பரிவ்ராஜிகா:-** (சுற்றிலும் பார்த்து) இதற்குமேல் பின்பு சொல்கின்றேன். கணவன் விதிசா நாதன் இதோ வருகின்றார்.

**தேவி:-** ஆ! நாதனா!

(எழுந்திருக்க விரும்புகின்றாள்)

**ராஜா:-** பிரியே! மரியாதை போதும். வீணாய் நின் சரீரத்திற்கு தொந்தரவு கொடுக்கவேண்டாம்.

3. ஹே மதுரபாஷிணி! தண்டைகளின் பிரிவினையைப் பெறத்தகாததும், தங்க மயமான ஆசனத்தால் தாங்கப்படுகின்றதும், வேதனையோடு கூடியதுமாகிய உனது பாதத்தையும், என்னையும் நீ (மீண்டும்) தொந்தரவு செய்யாமலிருப்பாய்.

**தாரிணீ:-** ஆர்யபுத்ர! ஜயமுண்டாகட்டும்.

**பரிவ்ராஜிகா:-** அரசே! வாழ்க! வாழ்க!!

**ராஜா:-** (பரிவ்ராஜிகையை நமஸ்கரித்து உட்கார்ந்து) தேவி! இப்பொழுது பாதத்தில் வேதனை சிறிது குறைந்திருக்கின்றதா?

**தேவி:-** நாத! சற்று அநுகூலமே!

(யக்ஞோபவீதத்தால் கைக் கட்டைவிரலைக் கட்டிக்கொண்டு பரபரத்தவனாய் விதூஷகன் வருகின்றான்)

**விதூஷகன்:-** அரசே! காப்பாற்றவேண்டும்! காப்பாற்றவேண்டும்!! ஸர்ப்பம் தீண்டிவிட்டது.

(எல்லோரும் வருந்துகின்றார்கள்)

**ராஜா:-** கஷ்டம்! கஷ்டம்!! அஜாக்கிரதையாய் எங்கே திரிந்தாய்?

**விதூஷகன்:-** தேவியவர்களைப் பார்க்க விரும்பியவனாய் யான் கையுறையைப் பெறவேண்டிப் புஷ்பம் பறிக்க பிரமதவனம் சென்றேன்.

**தேவி:-** கஷ்டம்! கஷ்டம்!! ஒரு பிராம்மணன் உயிரை இழக்க நானல்லவா காரணமாகின்றேன்.

**விதூஷகன்:-** உத்தியானவனத்தில் அசோக மலரின் கொத்தைப் பறிக்க எனது வலது கையை நீட்டினேன். அது ஸமயம் பொந்திலிருந்து வெளியேவந்த ஸர்ப்ப உருவம் கொண்ட யமனால் கடிக்கப்பட்டேன். இதோ இரண்டு பற்களின் அடையாளங்களைப் பாருங்கள்.

**பரிவ்ராஜிகா:-** பற்கள் பதிந்த இடத்தைச் சோதிப்பது முதல் சிகித்ஸையாகக் கேள்விப்பட்டிருக்கின்றேன். உடனே அவ்வாறு செய்யவேண்டும்.

*4.* தீண்டப்பட்ட விடத்தைச் சோதிப்பதோ, அல்லது தீயினால் சுடுவதோ, அல்லது அக்காயத்திலிருந்து ரத்தத்தை வெளிப்படுத்துவதோ, ஆகிய இவைகள் தீண்டப்பட்டவர்களுக்கு உடனே செய்யவேண்டிய சிகித்ஸைகளாகும். இவைகள் ஆயுஸைக் கொடுக்கக் கூடியவைகளாகவும் இருக்கின்றன.

**ராஜா:-** இப்பொழுது இது விஷவைத்தியர்களே செய்யவேண்டிய காரியமாகும். ஜயஸேனா! சீக்கிரம் துருவசித்தியை அழைத்துவா.

**சேடி:-** கட்டளைப்படியே.

(வெளியே செல்கின்றாள்)

**விதூஷகன்:-** கஷ்டம்! பாழும் எமன் என்னைப் பிடித்துக்கொண்டுவிட்டானே!

**ராஜா:-** கௌதம! பயப்படாதே. சில சமயங்களில் பாம்புக்கடி விஷம் இல்லாமலும் இருக்கலாம்.

**விதூஷகன்:-** அரசே! நான் எப்படி பயப்படாமலிருப்பேன்? என் அவயவங்கள் எல்லாம் வலிப்பு வந்ததுபோல் நடுங்குகின்றனவே.

(விஷவேகத்தை நடிக்கின்றான்)

**தேவி:-** ஐயோ! விஷவேகத்தால் மரணக்குறி ஏற்பட்டது போலிருக்கின்றதே! கௌதமனைப் பிடித்துக் கொள்ளுங்கள். பிடித்துக் கொள்ளுங்கள்.

(பரிஜனங்கள் பரபரப்புடன் பிடித்துக் கொள்கின்றார்கள்)

**விதூஷகன்:-** (அரசனைப் பார்த்து) அரசே ! பாலிய முதல் நான் தங்களுக்குப் பிரிய நண்பனாக இருந்து வந்திருக்கின்றேன். எல்லாவற்றையும் யோசனைசெய்து பிள்ளையை இழந்த என் தாயாரின் யோக க்ஷேமத்தை நீங்கள்தான் இனிக் கவனித்துக் கொள்ளுதல் வேண்டும்.

**ராஜா:-** பயப்படாதே! தைரியமாய் இரு. விஷவைத்தியன் அதி சீக்கிரத்தில் ஸொஸ்தப்படுத்துவான்.

(வந்து)

**ஜயஸேனோ:-** அரசே! கௌதமன் இங்கேயே யழைத்துவரப்படலாம் என்று துருவசித்தி தெரிவித்துக் கொள்கின்றார்.

**ராஜா:-** ஆனால், இவனைப் பிடித்துக்கொண்டு துருவசித்திபிடம் அழைத்துச் செல்லுங்கள்.

**ஜயஸேனா:-** அப்படியே.

**விதூஷகன்:-** (தேவியைப் பார்த்து) தேவி! பிழைப்பேனோ, அல்லது இறந்துதான் போய்விடுவேனோ! அரசனிடம் பணி செய்துகொண்டிருக்கும் என்னால் தங்களுக்கு ஏதாவது குற்றமேற்பட்டிருந்தால், அதைத் தாங்கள் மன்னித் தருளவேண்டும்.

**தேவி:-** கௌதம! நீ தீர்க்காயுள் வாய்ந்தவனாய் இருக்கவேண்டும்.

(விதூஷகனும் சேடியும் செல்கின்றார்கள்)

**ராஜா:-** ஐயோ பாவம்! கௌதமன்இயற்கையிலேயே பயந்தவன். ஏனெனில், பொருத்தமான பெயரையுடைய துருவசித்திபிடத்திலும் இவனுக்கு நம்பிக்கை ஏற்பட இல்லையே!

(வந்து)

**ஜயஸேனா:-** அரசே! வந்தனம்! உதககும்பத்தில் ஸர்ப்ப அடையாளம் கொண்ட ஏதாவதொன்றை வைத்து ஜபம் செய்யவேண்டுமாம். ஆகையால் அதைக் கொண்டு வரும்படி துருவசித்தி தெரிவித்துக் கொள்ளுகிறார்.

**தேவி:-** இதோ! ஸர்ப்ப அடையாளமுள்ள மோதிரமே இருக்கின்றதே! காரியம் முடிந்த பின்பு இதை என்னிடமே கொடுப்பாய்.

(மோதிரத்தைக் கொடுக்கின்றாள்)
(சேடி பெற்றுக்கொண்டு செல்கின்றாள்)

**ராஜா:-** ஜயசேனா! குணமடைந்தவுடன் சீக்கிரம் தெரியப்படுத்து.

**சேடி:-** கட்டளைப்படியே.

பரிவ்ராஜிகா:- கௌதமன் இதற்குள் குணமடைந்திருப்பான் என்று என் மனதிற்குத் தோன்றுகிறது.

ராஜா:- தாயே! அப்படியே ஆகவேண்டும்.

(வந்து)

ஜயஸேனா:- அரசே! வந்தனம்! சிறிது நேரத்திற்குள் கௌதமன் விஷம் நீங்கி ஸௌஸ்தம் அடைந்தான்.

தேவி:- நல்லவேளை. நான் பழிக்கு ஆளாகாமல் தப்பினேன்.

சேடி:- அரசே! தங்களுடன் கலந்து யோசிக்கவேண்டிய ராஜீய காரியங்கள் பல இருக்கின்றபடியால் மஹாராஜாவைப் பார்க்க விரும்புகின்றதாக மந்திரி வாஹதகன் விக்ஞாபனம் செய்துகொள்ளுகின்றார்.

தேவி:- நாத! தாங்கள்அந்தக் காரியத்தைக் கவனிக்கச் செல்லலாம்.

ராஜா:- இங்கு வெய்யில் வந்துவிட்டது. இந்த வேதனைக்கு நிழலான இடம்தான் மேலானது. ஆகையால், இப்படுக்கையை வேறு இடத்திற்குக் கொண்டு போகலாம்.

தேவி:- பரிஜனங்கள்! அரசனுடைய கட்டளைப்படிச் செய்யுங்கள்.

பரிஜனங்கள்:- அப்படியே.

ராஜா:- ஜயஸேனா! ரஹஸியமான மார்க்கமாய் என்னைப் பிரமதவன மழைத்துச்செல்வாய்.

சேடி:- அரசே! இப்படி வாருங்கள்.

ராஜா:- ஜயசேனா! கௌதமன் இதற்குள் தன்காரியத்தைச் செய்திருக்கக் கூடுமல்லவா?

சேடி:- ஆம்!

5. ராஜா:- நாம் கைக்கொண்ட உபாயமானது நிச்சயமாய் நமதிஷ்டத்தை நிறைவேற்றி வைக்கக்கூடியது என்பதைத் தெரிந்திருந்தும் எனது கோழை மனம் ஸந்தேகத்தையே அடைகின்றது.

(நுழைந்து)

விதூஷகன்:- மஹாராஜ! வாழ்க! தங்களது மங்கள காரியங்கள் முடிவு பெற்றன.

ராஜா:- ஜயஸேனா! நீயுமுனது கட்டளையைச் செய்வாய்.

சேடி:- அரசே! கட்டளைப்படி

(வெளியே செல்கின்றாள்)

ராஜா:- நண்ப! மாதவிகையானவள் பெருந்தன்மையற்றவளாயிற்றே! இதைப்பற்றிச் சிறிதும் உன்னை அவள் விசாரிக்க வில்லையா?

விதூஷகன்:- மஹாராஜ! தேவியாருடைய முத்திரை மோதிரத்தைப் பார்த்த பின்பு அவள் யாது விசாரிக்க முடியும்?

ராஜா:- முத்திரை மோதிரத்தைப்பற்றி நான் கேட்கவில்லை. "இவ்விருவர்களையும் விடுதலை செய்ய இப்பொழுது காரணம் யாது? பரிஜனங்கள் இருக்க, நீங்கள் இக் காரியத்தில் நியமிக்கப்பட்ட காரணம் யாது?" என்று அவள் உன்னை கேட்கலாம் அல்லவா.

விதூஷகன்:- அவள் அவ்வாறே என்னைக் கேட்டாள். மடையனாக இருந்தபோதிலும், நான் அப்பொழுது புத்திசாலித்தனமாகவே தக்க பதிலுரைத்தேன்.

ராஜா:- அதெவ்வாறு? சொல் கேட்கின்றேன்.

விதூஷகன்:- ஐயா! நானிவ்விதம் பதில் கூறினேன். அஃதாவது "தற்சமயம் மஹாராஜாவிற்கு நக்ஷத்திரம் பகையில் இருக்கின்றது. ஆகையால், கைதிகள் எல்லோரையும் சிறையிலிருந்து விட்டுவிடவேண்டும்" என்று சோதிடர்கள் அரசனிடம் தெரிவித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

ராஜா:- (ஸந்தோஷத்துடன்) பின்பு! பின்பு!!

விதூஷகன்:- "அதைக் கேட்டு மஹாராணியர்கள் இராவதியின் மனதிற்கு வருத்தமில்லாதிருக்கும்படி மஹாராஜா அவர்களே இவ்விருவர்களையும் விடுதலை செய்த பாவனையாய் எனக்குக் கட்டளை கொடுத்திருக்கிறார்கள்". என்று நான் பதிலுரைத்தேன். இதைக் கேட்டு மாதவிகையானவள் "நியாயம்தான்" என்று ஒப்புக்கொண்டாள். நமதெண்ணம் நிறைவேறியது.

ராஜா:- (விதூஷகனை யாலிங்கனம் செய்து) நண்ப! உண்மையான அன்பையே நீ என்மீது காண்பிக்கின்றாய்.

6. அபீஷ்டத்தை நிறைவேற்றக்கூடிய தக்க உபாயத்தை மட்டில் சினேகிதர்கள் தங்கள் புத்திகூர்மையில் காண்கின்றார்களில்லை. ஆனால் காரியம் கை கூடும்வரை அதைச் செலுத்தும் வழியையும் அவர்களது ஸூக்ஷ்மபுத்தி காண்கின்றது. இதற்குக் காரணம் அன்பேயாகும்.

**விதூஷகன்:-** அரசே! சீக்கிரம்! சீக்கிரம்! வஸந்த மண்டபத்தில் மாளவிகையை அவள் ஸகியுடன் தங்கச் செய்து தங்களிடம் வந்திருக்கின்றேன்.

**ராஜா:-** சரி! நான் அவளை உபசரிக்கின்றேன். நீ முன்னால் செல்.

**விதூஷகன்:-** அரசே! இவ்வழியே வாருங்கள் (சென்று) இதுதான் வஸந்த மண்டபம்.

**ராஜா:-** (பயத்துடன்) நண்ப! எனது ஸகியான இராவதியினது சேடியான சந்திரிகா இதோ பரபரப்புடன் புஷ்பங்களைக் கொய்துகொண்டு நமது ஸமீபமாகவே வருகின்றாள். இங்கேயே நாம் இச்சுவற்றின் பின்னால் மறைந்திருப்போம்.

**விதூஷகன்:-** ஆஹா! கள்ளர்களுக்கும் காதலர்களுக்கும் சந்திரிகை அதிக விரோதம் ஆயிற்றே.

(இருவரும் அவ்வாறே செய்கின்றார்கள்)

**ராஜா:-** கௌதம! உனது ஸகி மாளவிகையும் ஆவலுடன் என்னை எதிர்பார்த்துக் கொண்டுதான் இருக்க வேண்டும். வா! இங்குத் தங்கி இந்த ஜன்னலின் வழியாய்ப் பார்ப்போம்.

**விதூஷகன்:-** அப்படியே

(இருவரும் பார்க்கின்றார்கள்)

**பகுளாவளிகா:-** ஸகி! மஹாராஜாவை நமஸ்காரம் செய்.

**ராஜா:-** கௌதம! அவள் எனது படத்தைக் காண்பித்து கொண்டிருக்கின்றாள் என நினைக்கின்றேன்.

**மாளவிகா:-** (ஸந்தோஷத்துடன்) தங்களை நமஸ்கரிக்கின்றேன்.

(வெளியே நோக்கி, வருத்தத்துடன்)

ஸகி! நீ என்னை ஏமாற்றுகின்றனை?

**ராஜா:-** ஸகே! இவளது ஸமகாலத்திய ஸந்தோஷம் துயரம் இவைகளால் நான் சந்தோஷப்படுகின்றேன்.

7. தாமரை மலர் சூர்யோதயத்தில் யாது நிலைமையை அடைகின்றதோ, அதே மலர் சூர்யாஸ்தமனத்தில் யாது நிலைமையை அடைகின்றதோ, அவ்விரு நிலைமைகளையும் இச்சுந்தரியினது முகம் க்ஷணை நேரத்தில் அடைகின்றது.

**பகுளாவளிகா:-** ஸகி! என்ன! இவர் சித்திரத்தில் வரையப்பட்ட அரசன் அல்லவா?

**இருவர்களும்:-** (நமஸ்கரித்து) மஹாராஜா! வாழ்க! வாழ்க!!

**மாளவிகா:-** ஸகி! நான் இப்பொழுது சித்திரத்தில் அரசனது ஸௌந்தர்யத்தைப் பார்த்து எத்தகைய திருப்தியை அடைகின்றேனோ, அத்தகைய திருப்தியை அவரது ஸௌந்தர்யத்தை நேரில் பார்த்தபொழுது நான் அடையவில்லை. ஏனெனில், சித்திரத்தில் அரசனை நன்றாய் உற்றுக் கவனிக்கின்றேன்.

**விதூஷகன்:-** மஹாராஜ! கேட்டீர்களா ? தங்களைச் சித்திரத்தில் ஊன்றிப் பார்த்ததுபோல் அவ்வளவு நன்றாய்த் தங்களை நேரில் பார்க்கவில்லை என்று மாளவிகை கூறுகின்றனள். ஆகையால், உயர்ந்த இரத்தினாபரணங்களை உள்ளே வைத்திருக்கும் பெட்டிபோலன்றோ தாங்களும் வீணேயௌவனச் செருக்கை வகிக்கின்றீர்கள்.

**ராஜா:-** நண்ப! ஸ்தீரீகள் குதூஹலம் உள்ளவர்களாயிருப்பினும் இயற்கையில் நாணத்தால் பயந்தவர்களாகவே இருக்கின்றார்கள்.

*8.* ஸ்திரீகள் தங்கள் கணவன்மார்களுடைய ஸௌந்தர்யத்தை முழுமையும் நன்றாய் கவனிக்கவே விரும்புகின்றார்கள். ஆனால், முதல் முதல் ஸந்திக்கும்பொழுது நீண்ட கண்களையுடைய அந்த ஸ்திரீகளின் பார்வைகள் கணவன் மார்களிடத்தில் பூர்ணமாய் விழுகின்றதில்லை.

**மாளவிகா:-** ஸகி! (படத்தை நோக்கியவளாய்) இவள் யார்? அரசன் பிரேமை நிறைந்து பார்க்கப்படுகின்றனளே!

**பகுளாவளிகா:-** ஹா! இவளா! இவள்தான் இராவதி. அரசன் சமீபத்தில் நிற்கின்றாள்.

**மாளவிகா:-** ஸகி! அரசன் சிறிது தாக்ஷிண்யமற்றவர் என்றே எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில், அந்தப்புர ஸ்திரீகள் எல்லோரையும்விட்டு இவள் ஒருத்தியினது முகத்தினிடத்தே தனது பார்வையை செலுத்தியிருக்கின்றனரே!

**பகுளாவளிகா:-** (மனதுள்) சித்திரத்தில் இருப்பவரை உண்மையாகக் கருதி இவள் பொறாமைப்படுகின்றாள். இருக்கட்டும். இவளுடன் சிறிது விளையாடுகின்றேன்.

(வெளியாய்)

அடி! அரசனுடைய முழு அன்புக்கும் பாத்திரமாயிருக்கின்றவள் இவள் ஒருத்தியே.

மாளவிகை:- ஆனால், நானேன் இவ்வித மென்னைத் துன்பப்படுத்திக் கொள்கின்றேன். *(பொறாமையோடு திரும்புகின்றாள்)*

ராஜா:- கௌதம! கவனி.

9. மாளவிகையானவள் அசூயையினால் இப் படத்திலிருந்து தனது முகத்தைத் திருப்பும்பொழுது இவளது நெற்றியில் இடப்பட்ட திலகம் புருவ நெறித்தலால் பிளவுபடுகின்றது. இவளது உதடுகள் துடிக்கின்றன. இத்தோற்றம் குற்றவாளியான கணவன்மீது காண்பிக்கவேண்டிய கோபத்தையும் ஆசிரியனான கணதாஸனிடமிருந்தே அழகான அபிநய முறையில் கற்றுக்கொண்டு, அதை இவள் இங்கு வெளிப்படுத்துகின்றனள் போலும்!

விதூஷகன்:- மஹாராஜ! சரி! இப்பொழுது மாளவிகையைச் சமாதானம் செய்யத் தயாராயிருங்கள்.

மாளவிகை:- ஆரிய கௌதமன் அவர்களும் அரசனோடு கூடவேதான் இருக்கின்றார்.

*(வேறு இடம் பார்க்க விரும்புகின்றாள்)*

பகுளாவளிகா:- *(மாளவிகையைத் தடுத்து)* ஸகி! என்ன? உண்மையிலேயே கோபிக்காமல் இருக்கின்றாயே!

மாளவிகா:- ஸகி! என்னை நீண்ட கோபக்காரியாகக் கருதினால், இதோ கோபத்தை மறுமுறையும் அழைக்கின்றேன்.

10. ராஜா:- *(வந்து)* ஹே கருநெய்தல் மலர்போன்ற கண்களையுடையவளே! சித்திரத்தில் வரையப்பட்ட செய்கைகளைக் கண்டு என்னைக் கோபிக்கின்றனை? இதென்ன? உன்னிடத்தே பற்றுள்ள (அர்ப்பணம் செய்யப்பட்ட ) உனது அடிமையான யான் இதோ நின் எதிரிலேயே இருக்கின்றேனே.

பகுளாவளிகா:- அரசே! வாழ்க! வாழ்க!!

மாளவிகா:- *(மனதுள்)* சித்திரத்தில் வரையப்பட்ட அரசனிடத்திலா நான் அசூயை யடைந்தேன்! இதென்ன பேதைமை?

*(வெட்கித்த முகமுடையவளாய் கைகூப்பி நின்றாள்)*
*(அரசன் மதனாவஸ்தையால் தழதழப்பை நடித்து)*

விதூஷகன்:- மஹாராஜ! உணர்ச்சியற்றவர்போல் அன்றோ காணப்படு கின்றீர்கள். ஏன்?

ராஜா:- உனது ஸகியை எவ்வாறு நம்புவது என்ற காரணத்தால் தான்.

விதூஷகன்:- அரசே! இம்மாளவிகை யிடத்திலா தங்களுக்கு அவநம்பிக்கை?

ராஜா:- நண்ப! கேள்.

11. உனது ஸகியான மாளவிகையானவள் ஸ்வப்னத்தில் எனது நேத்திர மார்க்கத்தில் அகப்படுகின்றாள். ஆனால், க்ஷணப்பொழுதில் மறைந்து விடுகின்றாள். இன்னமும், என் இரு புஜங்களினிடையே அகப்படுகின்றாள். ஆயினும், உடனே திடீரென நழுவி விடுகின்றாள். ஹேநண்ப! ஸமாகமத்தில் இத்தகைய ஏமாற்றத்துடன் மதன தாபத்தால் பீடிக்கப்பட்ட எனது மனம் இவளது விஷயத்தில் எவ்வாறு நம்பிக்கையை யடையும்?

**பகுளாவளிகை:-** ஸகி! நீ பலவாறு அரசனையே ஏமாற்றி இருக்கின்றாய். சரி! சரி!! இப்பொழுதாவது மஹாராஜாவுக்கு உன்மீது நம்பிக்கை ஏற்படுமாறு நடந்து கொள்வாய்.

**மாளவிகை:-** பாக்கியமற்ற யான் அரசனது ஸந்திப்பை ஸ்வப்னத்தில்கூட அடையவில்லையே!

**பகுளாவளிகா:-** அரசன்தான் இதற்குப் பதிலளிக்க வேண்டும்.

12. **ராஜா:-** பகுளாவளிகா! பதில் கூறுவதால் யாது பயன் ? மன்மதனாகிய அக்கினியின் ஸாக்ஷியாய் எனது ஆத்மாவானது உன் தோழியான மாளவிகைக்கே அர்ப்பணம் செய்யப்பட்டது. ஆகையால், இவன் தனிமையில் மாளவிகைக்குப் பணி செய்யுமாளாக விருக்கின்றானே யல்லாது, பணி செய்யப்படுவான் அல்லன்.

**பகுளாவளிகா:-** அரசே! நாங்கள் அனுக்ரஹிக்கப்படுகின்றோம்.

**விதூஷகன் :-** (சிறிது சென்று பரபரப்புடன்) பகுளாவளிகா! இதோ! மானொன்று இச் சிறு அசோகதருவினுடைய தளிர்களை மேய்கின்றது. வா நாமிதை விரட்டுவோம்.

**பகுளாவளிகா:-** அப்படியே.

(புறப்படுகின்றாள்)

**ராஜா:-** நண்ப! நீ இவ்விதமே அதிஜாக்ரதையாயிருத்தல் வேண்டும். இதுசமயம், நாங்கள் பாதுகாக்கப்படவேண்டிய நிலைமையில்தான் இருக்கின்றோம்.

**விதூஷகன்:-** அரசே! கௌதமனுக்கு இதுகூடவா உபதேசிக்கவேண்டும்.

**பகுளாவளிகா:-** (சிறிது சென்று) ஐயா கௌதம ! நான் மறைவிலிருக்கின்றேன். நீ இவ்விடமே யிருப்பாய்.

**விதூஷகன்:-** இதுதான் சரி.

(பகுளாவளிகை செல்கின்றாள்)

**விதூஷகன்:-** இதோ இந்தப் பளிங்குக் கல்லின்மேல் உட்காருகின்றேன். (உட்கார்ந்து)

ஆஹா! இப் பளிங்குக்கல் உட்காருவதற்கு எவ்வளவு ரம்மியமாய் யிருக்கின்றது ?

(தூங்குகின்றான்)
(மாளவிகை பயந்து நிற்கின்றான்)

13. **ராஜா:-** ஹே சுந்தரி! என்னுடன் ஸமாகமத்தில் பயத்தை விட்டுவிடு. அநேக காலமாய் உனது அன்பையே எதிர்பார்த்து, மாமரத்தின் நிலைமையில் யான் இருக்கின்றேன். இத்தகைய என்னிடம் மாதவீ லதையினது தன்மையை நீ அடைவாய்.

**மாளவிகை:-** நாத! தேவியினுடைய பயத்தினாலன்றோ தங்களுக்குப் பிரியத்தைச் செய்ய யான் சக்தியற்றவளாய் இருக்கின்றேன்.

**ராஜா:-** ஸுந்தரி! பயம் வேண்டாம்.

**மாளவிகை:-** (பரிஹாஸார்த்தமாய்) நாத! இராவதி தேவியின் முன்னிலையில் தாங்கள் எவ்வளவு தைரியத்துடன் பயப்படாமல் இருந்தீர் களென்பதை நான் நன்கறிந்தேன்.

14. **ராஜா:-** கோவைப்பழம் போன்ற உதடுகளை யுடையவளே ! பிம்பகுலத்தில் தோன்றிய அரசர்களுக்கு தாக்ஷிண்யமன்றோ குலவிரதமாயுள்ளது. ஆகையால், நீண்ட நயனங்களை யுடையவளே! எனது பிராணன் " நின்னையடைவேன் " என்ற நம்பிக்கையையே ஆதாரமாகக் கொண்டிருக்கின்றது.

ஆகையால், நீண்டகாலமாய் உன்னிடம் அன்பு கொண்ட என்மீது தயவு புரிவாய்.

(ஆலிங்கனம் செய்வதுபோல் பாவனை செய்கின்றான்)

**மாளவிகா:-** (அதை மறுக்கின்றாள்)

**ராஜா:-** (மனதுள்) சிறுமிகளின் மதனவியாபாரமானது அதிரமணீயமன்றோ! ஏனெனில்,

15. ஒட்டியாண காரியத்தில் பரபரத்த விரல்களுடன் கூடின எனது கையை இவள் நடுங்கினவளாகவே தடை செய்கின்றாள். பலாத்காரமாய் ஆலிங்கினம் செய்யப்படுகையில், இவள் தனது கரங்களால் ஸ்தனங்களை மறைக்கின்றாள். நான் இவளது முகத்தைப் பானம் செய்ய நிமிர்த்தினபொழுது, அடர்ந்த ரோமங்களால் அதிரமணீயமான இமைகளை உடைய தனது முகத்தை திருப்பிக்கொள்கின்றாள். இவ்விதம் "மறுப்பது" என்ற பாவனையாலும் இவள் எனது அபீஷ்டத்தை பூரணம் செய்து சுகத்தையே அளிக்கின்றனள்.

(இராவதியும் நிபுணிகாவும் வருகின்றார்கள்)

**இராவதி:-** அடி! நிபுணிகா! வஸந்த மண்டபத் தாழ் வாரத்தில் கௌதமன் தனிமையாய்த் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டதாகச் சந்திரிகை உன்னிடம் கூறியது உண்மைதானோ?

**நிபுணிகா:-** தேவி! நான் தங்களிடம் பொய்யான வார்த்தையைத் தெரிவித்து கொள்வேனோ?

**இராவதி:-** அடி! ஆனால், நாமங்குச் செல்வோம். பிராணஸம்ஸயத்திலிருந்து தப்பியவனும், அரசனுக்கு ஆப்த நண்பனுமான மாணவகனைக் கேட்கவும் . . . .

**நிபுணிகா:-** தேவி! தங்கள் வாக்கியம் முடிவு பெறாதது போல் காணப்படுகின்றதே!..

**இராவதி:-** ஸகி! சித்திரத்தில் வரையப்பட்டக் கணவனை வணங்குவதற்கும்தான்.

**நிபுணிகா:-** தேவி! ஆனால் சரி! தாங்கள் அரசனை ஏன் நேரில் வணங்கக் கூடாது?

**இராவதி:-** அடி! பைத்தியமே! எந்த என் நாதனுடைய அன்பானது வேறு ஸ்திரீயினிடம் மாற்றப்பட்டிருக்கின்றதோ, அவரே தான் சித்திரத்திலும் இருப்பவர் ஆவார். ஆனால், எனது அபசாரத்தை நீக்கிக்கொள்ளும் பொருட்டே இம்முயற்சி.

**நிபுணிகா:-** இப்படி வாருங்கள் *(இருவரும் செல்கின்றார்கள்)*

*(வந்து)*

**சேடி:-** தேவி! வாழ்க ! மஹாராணியார் இவ்வாறு கூறுகின்றார்கள். " இது என் துவேஷத்தைக் காட்டும் சமயமல்ல. தோழியுடன் மாளவிகையானவள் விலங்கிட்டுச் சிறையிலிடப்பட்டாள், நீ நம் நாதனுக்கு நன்மை செய்யச் சம்மதிப்பாயேயானால் நானும் அவ்வாறே செய்கின்றேன். உனதபிப்பிராயத்தைத் தெரியப்படுத்த வேண்டும்." என்பதுதான்.

**இராவதி:-** நாகரிகா! மஹாராணியாரிடம் இவ்விதம் விக்ஞாபனம் செய்து கொள்வோம். "அதாவது:- மஹாராணிக்கு உத்தரவு கொடுப்பதற்கு நான் யார் ? பரிஜனத்தை விலங்கிட்டதனாலேயே மஹாராணியவர்கள் என்னிடம் வைத்திருக்கும் தயை நன்கு விளங்குகின்றது. வேறு எவருடைய தயையால் நான் க்ஷேமத்தைப் பெறமுடியும் ?

**சேடி:-** அப்படியே *(வெளியே செல்கின்றாள்)*

**நிபுணிகா:-** *(சிறிது சென்று பார்த்து)* தேவி! கடைவீதியில் நின்றுகொண்டே நித்திரை செய்யும் காளைமாடு போல் இதோ வஸந்த மண்டப

வாசலில் கௌதமனும் உட்கார்ந்த படியே நித்திரை செய்கின்றான்.

**இராவதி:-** ஐயோ! கஷ்டம்! ஒருக்கால் ஸர்ப்பத்தின் விஷவேகம் இன்னமும் இருக்குமோ!

**நிபுணிகா:-** தேவி! ஏன் பயப்படுகின்றீர்கள். இவனது முகக்களை நன்றாயிருக் கின்றதே! மேலும், இவன் துருவஸித்தியால் வைத்தியம் செய்யப்பட்டிருக்கின்றான். ஆகையால், இவனிடம் நாம் கெடுதியைச் சந்தேகிக்க வேண்டியதில்லை.

**விதூஷகன்:-** (தூக்கத்தில் பேசுகின்றான்) ஸ்ரீமதி மாளவிகா ! . . . . . . .

**நிபுணிகா:-** தேவி! கேட்டீர்களா! இந்த துஷ்டன் எவரிடம் பக்ஷம் வைத்திருக்கின்றான் பார்த்தீர்களா! எப்பொழுதும் நம்முடைய பூஜாப் பணியாரங்களைக் கொண்டே இவன் தனது வயிற்றை நிரப்பிக்கொண்டும், மற்றும் பல வெகுமதிகளைப் பெற்றுக் கொண்டும் ஸ்வப்னத்தில் மாளவிகையை அழைக்கின்றானே?

**விதூஷகன்:-** மாளவிகா! இராவதியையும் நீ மீறிய வளாயிருப்பாயாக.

**நிபுணிகா:-** தேவி! இதென்ன பெருத்த ஆபத்தாய் இருக்கின்றதே! இருக்கட்டும்! ஸர்ப்பத்தினிட மிருந்து பயந்த இந்தத் துஷ்டனை ஸர்ப்பம் போலவே கோணலான இத்தடியினால் பயமுறுத்து கின்றேன்.

**இராவதி:-** அடி! இவன் நன்றி மறந்தவன், இவன் தண்டிக்கப் படுவதற்குத் தகுந்தவனே!

(நிபுணிகா விதூஷகன் மேல் தடியை எறிகின்றாள்)

**விதூஷகன்:-** (திடீரெனவிழுந்து), உதவிபுரிய வேண்டும் உதவிபுரிய வேண்டும் அரசே! ஸர்ப்பம் என் மேல் விழுந்தது.

**ராஜா:-** பயப்படவேண்டாம்! பயப்படவேண்டாம்!!

**மாளவிகை:-** (அசரனைப் பின்தொடர்ந்து) நாத! திடீரென வெளியே செல்ல வேண்டாம். ஸர்ப்பம் என்று சொல்லப்படுகின்றது.

**இராவதி:-** ஹா! கஷ்டம் கஷ்டம். மஹாராஜாவானவர் இதோ இவ்வழியாகவே ஓடுகின்றாரே.

**விதூஷகன்:-** (சிரித்துக்கொண்டே) என்ன! இது ஒரு தடியல்லவா.

முன்னால் நானகவே தாழை முள்ளால் காயம் செய்து கொண்டு, அதை ஸர்பத்தால் கடிக்கப்பட்ட காயமெனப்

பாசாங்கு செய்தேன். அது இப்பொழுது உண்மையில் பலித்து விட்டது என்றல்லவோ எண்ணினேன்.

*(திரையை ஒதுக்கி பிரவேசித்து)*

**பகுளாவளிகா:-** *(தள்ளாடியவளாய் அரசனிடம் வந்து)*
அரசே! தாங்கள் வெளியே செல்ல வேண்டாம். இது வளைந்து வளைந்திருக்கின்றதே. இதுவும் அவ்வாறே செல்லும் ஸர்ப்பம் போலத்தான் காணப்படுகின்றது.

**இராவதி:-** *(தூண்மறைவிலிருந்து அரசனை யணுகி)*

நாத! இருவர்கட்கும் பகலில் குறிப்பிட்ட ஸமாகமமானது யாதொரு இடையூறுமின்றி நிறை வேறியதா?

*(இராவதியைக் கண்டு எல்லோரும் பயந்தார்கள்)*

**ராஜா:-** பிரியே! இம் மரியாதை விரோதமாயிருக்கின்றதே!

**இராவதி:-** அடி பகுளாவளிகா! நல்லது, பிரதிக்ஞைப் படியே நீ உனது தூதியின் காரியத்தைச் செய்து முடித்துவிட்டாய்.

**பகுளாவளிகா:-** தேவி! தயவு செய்யவேண்டும். தவளைகள் கதறுகின்ற காரணத்தால் தானா? இல்லையேல், தேவேந்திரன் பூவுலகை மறந்துவிடுகின்றானா என்ன?

**விதூஷகன்:-** தேவி! இருந்தாலும், தாங்கள் இம்மாதிரி செய்யக்கூடாது. உங்களைக் கண்டமாத்திரத்தாலே அவருக்கு நீங்கள் செய்த, (நமஸ்காரத்தை மீறிய) அவமானத்தை முற்றிலும் அவர் மறந்துவிட்டாரே! அப்படியிருந்தும், தாங்கள் இன்னமும் சமாதானமடையாமல் இருக்கின்றீர்களே!

**இராவதி:-** எனது கோபம் அரசனை என்ன செய்யக்கூடும்?

**ராஜா:-** சுந்தரி! நீ காரணமின்றிக் கோபித்துக்கொள்வது சரியல்ல. ஏனெனில்,

*16.* உனது முகம் க்ஷணமாவது காரணமின்றிக் கோபத்தை யடைந்தது எப்பொழுது? இரவானது பௌர்ணமி தினத்தைத் தவிர மற்ற தினத்தில் ராகுவால் பீடிக்கப்பட்டு, ஒளியற்ற சந்திரனையுடையதாக எவ்வாறு ஆகும்?

**இராவதி:-** நாத! "காரணமின்றி" என்று தாங்கள் கூறியது மிகவும் பொருத்தமானதுதான். ஏனெனில் எங்களது பாக்கியம் பிறர் வசமாக்கப்பட்டபொழுது கோபித்தேனே ஆனால் நான் பரிஹஸிக்கப் படவேண்டியது தானே!

ராஜா:- பிரியே! நீ விரோதமாகவே நினைக்கின்றனை. என்னைப்பற்றிய மட்டில் கோபத்திற்குக் காரணமான எதையும் யான் காண்கின்றேன் இல்லை. ஏனெனில்,

17. உண்மையில் குற்றவாளிகளாகவே இருப்பினும், வேலைக்காரர்கள் திருவிழாக்காலங்களில் சிறையிலிருந்து நீக்கப்பட வேண்டியவர்களாக ஆகின்றார்கள். இந்த எண்ணத்தைக்கொண்டே நான் அவர்களை விடுவித்தேன். அவர்களும் நன்றி பாராட்டியவர்களாய் என்னை வணங்கவே என்னிடம் வந்தார்கள்.

இராவதி:- நிபுணிகா! மஹாராணியவர்களிடம் சென்று இவ்விதம் விண்ணப்பம் செய்துகொள்வாய். அதாவது "தங்களுக்கு என்மீது உள்ள பக்ஷபாதம் இப்பொழுது நன்கு காணப்பட்டது". என்று,

நிபுணிகா:- தேவி! அப்படியே.

(செல்கின்றாள்)

விதூஷகன்:- (மனதுள்) ஹோ! ஹோ!! வந்ததே அனர்த்தம்! கூண்டிலிருந்து தப்பிய வீட்டுப்புறா மீண்டும் பருந்து வாயில் விழுந்தது.

(வந்து ஒரு புறமாய்)

நிபுணிகா:- தேவி! தற்செயலாய் மாதவிகை என்னைச் சந்தித்தாள். " இது இவ்வாறு முடிந்தது " என்ற கூறினள்.

(காதோடு சொல்கின்றாள்)

இராவதி:- (மனதுள்) எல்லாம் விவரிக்கப்பட்டிருக்கின்றது. நிச்சயம். இவை எல்லாம் இந்தத் துஷ்ட கௌதமனால் ஏற்பட்டதாகவே இருக்கின்றது. (விதூஷகனைப் பார்த்து, வெளியாய்) கௌதம! நல்லது! நல்லது! இதுவே காமசாஸ்திர இலாகா மந்திரியின் முறையாகும்!

விதூஷகன்:- தேவி! நீதி சாஸ்திரத்தின் ஒரு அக்ஷரத்தையாவது கற்றிருப்பேனா யானால், நான் காயத்திரியை மறந்தேயிருப்பேன்.

ராஜா:- (மனதுள்) இப்பொழுது நான் இச்சங்கடத்திலிருந்து எவ்வாறு தப்புவேன்?

(வந்து)

ஜயஸேனா:- (குழப்பத்துடன்) தேவ! குமாரியான வஸுலக்ஷ்மியானவள் பந்து விளையாடிக்கொண்டிருக்கும் சமயத்தில், பழுப்பு நிறமுள்ள வாலில்லாக் குரங்கு ஒன்றால் அதிகமாய் பயமுறுத்தப்பட்டு மஹாராணியவர்களது மடியில் படுத்திருக்கின்றாள்.

பெருங் காற்றால் அசைக்கப்பட்ட தளிர்போல் குழந்தையினது உடல் இன்னமும் நடுங்கிக்கொண்டே யிருக்கின்றது. இன்னமும், ஞாபகம் வரவேயில்லை.

ராஜா:- ஐயோ! கஷ்டம்! இயற்கையாகவே குழந்தைப் பருவம் பயப்படுந் தன்மை வாய்ந்ததாயிற்றே!

இராவதி:- (கலக்கத்துடன்) வஸுலக்ஷ்மியைச் சாந்தம் செய்யச் சீக்கிரம் முயலுங்கள். குழந்தைக்கு பயத்தாலுண்டான கலக்கத்தை அதிகமாய் வளர்க்க வேண்டாம்.

ராஜா:- இதோ! அவளுக்கு ஞாபகம் வரும்படிச் செய்கின்றேன்.

(வேகமாய்ச் செல்கின்றான்)

விதூஷகன்:- (மனதுள்) வாயில்லா வானரமே! நல்லகாரியம் செய்தாய். நல்லது! நல்லது!! உனது கக்ஷியைச் சேர்ந்தவனை இச்சங்கடத்திலிருந்து நன்றாய் காப்பாற்றினாய்.

(அரசன், விதூஷகன், இராவதி, நிபுணிகா, சேடி எல்லோரும் செல்கின்றார்கள்)

மாளவிகா:- ஸகி! தேவியை நினைக்க எனது நெஞ்சம் பதறுகின்றதே! நான் யாது யாது கஷ்டங்கள் அனுபவிக்க வேண்டியிருக்குமோ! எனக்குத் தெரியவில்லையே! கஷ்டம்! கஷ்டம்!!

(திரையினுள்)

ஆச்சரியம்! ஆச்சரியம்!! தோஹதத்தைப் பெற்று ஐந்து நாட்களுக்குள்ளாகவே தங்கநிறமான அசோக தருவானது அரும்புகளால் நிறையப்பட்டிருக்கின்றது. நான் சென்று மஹாராணியாரிடம் தெரியப்படுத்துகின்றேன்.

(கேட்டு மாளவிகா, பகுளாவளிகா ஆகிய இவ்விருவர்களும் சந்தோஷப் படுகின்றார்கள்)

பகுளாவளிகா:- ஸகி! தைர்யமாய் இரு. மஹாராணியவர்கள் ஒருக்காலும் வாக்குத்தந்ததை மீறி நடக்கவே மாட்டார்கள்.

மாளவிகா:- ஸகி! சரி. ஆனால், பிரமதவனத்தைக் காப்பவனது பின்னாலேயே நாம் இருவரும் இருப்போம்.

பகுளாவளிகா:- அப்படியே (வெளியே செல்கின்றார்கள்)

## நான்காம் அங்கம் முற்றிற்று

# ஐந்தாம் அங்கம்

*(உத்தியானவனக் காவல்காரி வருகின்றாள்)*

**மதுகரிகா:-** தங்க நிறமுள்ள அசோக தருவைச் சுற்றிலும் அலங்காரங்கள் செய்து, சுற்றிலும் மேடையும் போடப்பட்டது. மஹாராணியாரது கட்டளை நிறைவேற்றப்பட்டதென அவர்களிடம் விண்ணப்பம் செய்துகொள்ளுகின்றேன்.

*(சிறிது சென்று)*

ஆஹா! மாளவிகையானவள் தெய்வத்தால் அருள்புரியத் தகுந்தவளாயிருக்கின்றாள். மாளவிகையினிடத்தில் அவ்வளவு கடுங்கோபங் கொண்ட மஹாராணியார் அசோக மரம் புஷ்பித்த இச்செய்தியால் மாளவிகையின் மீது தயவையே காண்பிப்பார்கள். மஹாராணியவர்கள் இப்பொழுது எங்கு இருக்கலாம்?

*(சுற்றிலும் பார்த்து)*

ஆ! இதோ! மஹாராணியவர்களுடைய பரிஜனங்களுள் ஒருவரும், குள்ளனுமான ஸாரஸகன் சிவந்த அரக்கு முத்திரை வைத்த பெட்டியொன்றை எடுத்துக்கொண்டு சதுர ஹாலிலிருந்து வெளிக்கிளம்பிச் சென்றுகொண்டிருக்கின்றான். இவனைக் கேட்கின்றேன்.

*(குறிப்பிட்டபடி ஸாரஸகன் வருகின்றான்)*

**மதுகரிகா:-** *(பக்கத்தில் வந்து)* ஸாரஸக! எங்குச் செல்கின்றாய்?

**ஸாரஸகன்:-** மதுகரிகா! வேதத்தில் தேர்ச்சி பெற்ற அந்தணர்களுக்குத் தக்ஷிணை கொடுக்கவேண்டிய தினம் அல்லவா. ஆனதால், இந்தத் தக்ஷிணையைப் புரோஹிதர்களிடம் சேர்ப்பிக்கச் செல்லுகின்றேன்.

**மதுகரிகா:-** இப்பொழுது தக்ஷிணை கொடுக்க யாது ஸந்தர்ப்பம்?

**ஸாரஸகன்:-** மதுகரிகா! "இளவரசனான வஸுமித்திரன் யாகக் குதிரையைக் காப்பாற்றுபவனாக ஸேனாதிபதியால் நியமிக்கப்பட்டான்" என்று கேட்டது முதல் மஹாராணியார் வேதமோதும் பிராம்மணர்களுக்கு தினமும் பதினெட்டு பவுன் மதிப்புள்ள தக்ஷிணையைக் குமாரனின் தீர்க்காயுளை உத்தேசித்துக் கொடுத்துக் கொண்டு வருகின்றார்கள்.

**மதுகரிகா:-** நியாயம்! இதுதகுதிதான்! தேவியார் இப்பொழுது எங்கே இருக்கின்றார்கள்? யாது செய்கின்றார்கள் ?

**ஸாரஸகன்:-** மங்கள கிருஹத்தில் ஆஸனத்திலமர்ந்தவர்களாய்! விதர்ப்பதேசத் திலிருந்து தனது ஸஹோதரனான வீரஸேனனால் அனுப்பப்பட்ட கடிதத்தைக் காரியஸ்தன் படிக்கக் கேட்டுக் கொண்டு இருக்கின்றார்கள்.

**மதுகரிகா:-** ஸாரஸக! விதர்ப்ப ராஜனது செய்தி யாது?

**ஸாரஸகன்:-** மதுகரிகா ! வீரஸேனன் முதலிய ஜயசாலிகளான வீரர்களால் தோற்கடிக்கப்பட்ட விதர்ப்ப மன்னனது பங்காளியான மாதவஸேனனும் சிறை நீக்கப்பட்டான். அவனால் காணிக்கையாக அனுப்பப்பட்ட விலையுயர்ந்த இரத்தினாபரணங்கள், வாஹனங்கள், கலைகள் கற்ற பெண்கள் இவைகளுடன் தூதனொருவன் நாளையதினம் மஹாராஜாவைத் தரிசிப்பான் என்று கேள்விப் படுகின்றேன்.

**மதுகரிகா:-** ஸாரஸக! நீ சென்று உனது கட்டளையை நிறைவேற்றி வரலாம். நானும் மஹாராணியவர்களைப் பார்க்கப் போகின்றேன்.

*(இருவரும் செல்கின்றார்கள்)*
*(பிரவேகம் முடிந்தது)*
*(சேடி வருகின்றாள்)*

**பிரதிஹாரீ:-** அசோக மரத்திற்குப் பூஜை செய்வதில் ஆயத்தமாய் இருக்கும் மஹாராணியவர்கள் எனக்கிவ்வாறு கட்டளையிட்டிருக் கின்றார்கள். "அசோக மரத்தினுடைய புஷ்பசோபையை மஹாராஜாவுடனிருந்தே நான் பார்க்க விரும்புகின்றேன். மஹாராஜாவானவர் சிம்மாசனத்தில் ராஜாங்கக் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருக்கின்றார். அவரையே நான் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றேன். மஹாராஜாவினிடம் தெரியப்படுத்து" என்று,

*(செல்லுகின்றாள்)*
*(திரைமறைவில் இரண்டு துதிபாடகர்கள்)*

**முதலாமவன்:-** அரசே தாங்கள் சத்துருக்களுக்குத் தண்டனை விதிக்கின்றவராக இருந்தும், அவர்களது சிரத்தின்மேல் *(பூஷணமாகவே)* விளங்குகின்றீர்கள்.

1. விதிசா நதிக்கரையிலுள்ள நந்தவனங்களிலே, உருவெடுத்து வந்த மன்மதனே போல் குயில்களினது இனிய கீதங்களை அனுபவித்துக்கொண்டு, ஆனந்தமாக வஸந்த காலத்தைச்

செலுத்துகின்றீர்கள். அபீஷ்டங்களைப் பூர்த்தி செய்கின்ற ஹே அரசே! மஹிமைவாய்ந்த உங்களது விஜய கஜங்களுக்குக் கட்டு முளையாக உபயோகிக்கப்படும் வரதா நதியின் இருகரைகளிலுள்ள மரங்களுடன் தங்களது சத்துருவும் தலைகுனிந்தவனாகவே நிற்கின்றான்.

2. இரண்டாமவன்:- தேவர்களுக்குக் கொப்பான ஹே அரசே! கோட்டைக் கதவின் தாள்போன்ற உறுதியான கரங்களால் ருக்மணீதேவியைப் பலாத்காரமாய் அபஹரித்த ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரித்திரமும், படை வலிமையால் விதர்ப்பமன்னனது ராஜ்ய லக்ஷ்மியைப் பலாத்காரமாய் அபஹரித்த தங்களது சரித்திரமும் வீரச் செய்கையில் விருப்பங்கொண்ட கவிஞர்களால் கீதங்களாய் அமைக்கப்பட்டுப் புகழப்படுகின்றன.

பிரதிஹாரி:- ஓஹோ! ஜயசப்தம் கேட்கப்படுகின்றதால், அரசன் புறப்பட்டு விட்டதாகத் தெரியவருகிறது. நானும் அரசனெதிரில் நில்லாமல் முன் மண்டபத்தின் வளைவுக் கடியிலே தங்கி நிற்கின்றேன்.

(ஒரு புறமாய் நிற்கின்றான்)

(அரசன் சினேகிதனுடன் வருகின்றார்)

3. ராஜா:- பிரியையான மாளவிகையானவள் சுலபமாய் அடையத் தகாதவள் என்பதையும், விதர்ப்ப மன்னன் நமது சேனையால் அடக்கப் பட்டான் என்பதையும் நினைக்கும்போது, வெய்யிலோடு கூடிய மழையினால் அடிபட்ட தாமரை மலர்போல் எனது ஹிருதயம் துக்கத்தை அடைகின்றது. ஆனால், அந்தக்ஷணமே சுகத்தையும் அடைகின்றது.

விதூஷகன்:- அரசே! எனக்குத் தெரிந்தவரை தாங்கள் பூர்ண இன்பத்தையே அடையப்போகின்றீர்கள்.

ராஜா:- நண்ப! அதெவ்வாறு ?

விதூஷகன்:- மஹாராஜ! மஹாரணியவர்கள் பண்டிதகௌசிகியைப் பார்த்து, "தாயே! தாங்கள் அலங்காரம் செய்யும் வித்தையில் அதிகக் கர்வம் கொண்டிருக்கின்றீர்களே! விதர்ப்ப தேசத்திய நாகரீகத்தை ஒத்து விவாஹஸம்பந்தமான அலங்காரத்தை இப்பொழுது மாளவிகையினது சரீரத்தில் அலங்கரியுங்கள் பார்ப்போம் என்று கட்டளையிட்டார்கள். அவ்வாறே மாளவிகையும் புதிய வகையில் விசேஷமாய் அலங்கரிக்கப் பட்டிருக்கின்றார்கள் எனக் கேள்விப்படுகின்றேன். ஆகையால் மஹாராணியவர்கள் ஒருக்கால் தங்கள் அபீஷ்டத்தைப் பூர்த்தி செய்து வைக்கலாமென்றே எண்ணுகிறேன்.

ராஜா:- கௌதம! அவ்வாறே யிருக்கலாமென்று தான் நானுமெண்ணு கிறேன். ஏனெனில், தாரிணீ தேவியினுடைய காரியங்களைக் கவனிக்குங்கால், அவள் எனது கோரிக்கை விஷயத்தில் அசூயையற்றவளாகவேதான் இருக்கின்றாள் எனத் தெரியவருகிறது.

பிரதிஹாரீ:- (அரசனிடம் வந்து) அரசே! வணங்குகின்றேன். "தங்க நிறமுள்ள அசோக மரத்தினுடைய புஷ்பங்களின் சிறப்பைத் தாங்கள் பார்வையிட்டு, அதனால் என்து முயற்சி சித்தியாகவேண்டும்" என மஹாராணியார் விண்ணப்பம் செய்து கொள்கின்றார்கள்.

ராஜா:- தேவி அங்கேயேதான் இருக்கின்றாளா?

பிரிதிஹாரீ:- தேவி! ஆம்! அந்தப்புர ஸ்திரீ ஜனங்களை அவரவர்கள் அந்தஸ்துக்குத் தக்கவாறு மரியாதை செய்து, ஸந்தோஷப்படுத்தி அனுப்பிவிட்டு, மாளவிகையை முன்னிட்டு, தனது பரிஜனங்களுடன் மஹாராஜாவை எதிர் பார்க்கின்றார்கள்.

ராஜா:- (ஸந்தோஷத்துடன் விதூஷகனைப்ப பார்த்து)

ஜயஸேனா! நீ முன்னால் செல்.

ஜயஸேனா:- இப்படி வாருங்கள்! இப்படி வாருங்கள்!!

(எல்லோரும் செல்கின்றார்கள்)

விதூஷகன்:- (பார்த்து) நண்ப! வஸந்தனது யௌவனப் பருவம் சிறிது கழிந்து விட்டதனை நந்தவனக் காட்சியே காட்டுகின்றது.

ராஜா:- கௌதம! ஆம்! நீ கூறுவதுபோலவேதான் இருக்கின்றது.

4. இதோ! முன்னால் மருதாணிப் புஷ்பங்கள் இங்குமங்கும் சிதறப்பட்டு இருக்கின்றன. இதோ! மாமரங்களின் முன்னே பழங்களின் தோற்றத்தை யுடையதாய் இருக்கின்றன. ஆகையால், முடிவடையும் தருணத்திலிருக்கும் இந்த வஸந்தகாலத்தின் யௌவனப்பருவமானது மனதைக் கவருகின்றது.

விதூஷகன்:- (சிறிது சென்று) அரசே! பாருங்கள். கொத்துக் கொத்தான மலர்களோடு கூடின இந்தக் தங்கநிற அசோக விருக்ஷமானது நூதன வகையில் பூஷணங்களால் அலங்கரிக்கப் பட்டிருக்கின்றது போலும்.

ராஜா:- கௌதம! இந்த விருக்ஷம் சிறிது தாமதித்துப் புஷ்பித்ததும் நியாயமே! ஆகையினாலன்றோ இந்த விருக்ஷமானது மற்ற விருக்ஷங்களாலடையத் தகாத மேலான அழகைப்பெற்றிருக் கின்றது. பார்.

5. முன்னமேயே வஸந்த காலத்திய மேன்மையை வெளிப்படுத்திய அசோக விருக்ஷங்கள் அனைத்தும், தங்களது புஷ்பங்களை இப்பொழுது தோஹதத்தைப் பெற்ற இந்தத் தங்க நிற அசோக விருக்ஷத்திற்கு அர்ப்பணம் செய்கின்றன போலும்.

**விதூஷகன்:-** மஹாராஜ! இனி நீங்கள் சந்தோஷமாயிருக்கலாம். ஏனெனில், நம் முன்னிலையிலும் தாரிணீ தேவியார் மாளவிகையைத் தனது பக்கத்திலிருக்க அனுமதித்திருக்கின்றார்களே!

**ராஜா:-** (மகிழ்வுடன்) நண்ப! கவனி.

6. பிரியையான மாளவிகையால் வணக்கத்துடன் அநுஸரிக்கப்படுகின்ற தாரிணீ தேவியானவள் என்னை உபசரிக்க எழுந்திருக்கின்ற இத்தோற்றம் கையில் தாமரை மலரைத் தரித்துக்கொள்ள மறந்த ராஜ்யலக்ஷ்மியினால் பின்பற்றப்பட்ட பூதேவி போலல்லவா காணப்படுகின்றாள்.

(தாரிணீ, பரிவ்ராஜிகா, மாளவிகா பரிஜனங்கள் ஆகிய இவர்கள் வருகின்றார்கள்)

**மாளவிகா:-** (மனதுள்)

விவாஹ சம்பந்தமான அலங்காரத்தின் காரணத்தை நான் நன்கு அறிகின்றேன். ஆயினும், தாமரையிலையில் இருக்கும் நீர்த்துளிபோல் எனது மனம் நடுங்குகின்றது. ஆனால், அந்த க்ஷணத்திலேயே எனது இடது நேத்திரமும் இடைவிடாது துடிக்கின்றது.

**விதூஷகன்:-** நண்ப! தலைவியான மாளவிகையானவள் விவாஹத்திற்குரிய அலங்காரத்தினால் நன்கு காணக்கூடியவளாய் விளங்குகின்றாள்.

**ராஜா:-** சரி! இவளைப் பார்க்கின்றேன்.

7. ஏராளமான ஆபரணங்களுடன் அதிகம் தொங்காமல் வெண்பட்டுத் தரித்துக் கொண்டிருக்கின்ற இம்மாளவிகையானவள், மூடுபனியால் மறைக்கப்படாத நக்ஷத்திரங்களோடும் உதயசந்திரனோடும் கூடின சித்திரை மாதத்திய இரவுபோல் காணப்படுகின்றாள்.

**தேவி:-** (அரசனை யணுகி) நாத! விளங்குக.

**விதூஷகன்:-** தேவி! சிறப்புற்று வாழ்க.

**பரிவ்ராஜிகா:-** அரசே! வாழ்க! வாழ்க!!

**ராஜா:-** தாயே! வந்தனம்! வந்தனம்!!

**பரிவ்ராஜிகா:-** அரசே! கோரிய பயனைப் பெறுவாய்.

**தேவி:-** *(புன்னகையுடன்)* நாத! இதோ! இந்த அசோக விருக்ஷம்தான், யுவதிகளுடன் கூடிய தங்களுக்கு ஸங்கேத ஸ்தலமாக எங்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

**விதூஷகன்:-** மஹாராஜ! நீங்கள் நன்றாய் ஆராதிக்கப்படுகின்றீர்கள்.

**ராஜா:-** *(வெட்கத்துடன் அசோக தருவைச்சுற்றி வருகின்றான்)*

8. வஸந்த லக்ஷிமியினது கட்டளையை அலக்ஷியம் செய்ததாய் இருந்தபோதிலும், இந்த அசோகதருவானது, தேவியினால் செய்யப்பட்ட மரியாதைகளுக்குத் தகுதியானதே! ஏனெனில், ஹே தேவி! உனது முயற்சியால் மலர்களைப்பெற்ற இத்தரு உன்னிடம் கௌரவத்தையே காட்டுகின்றது!

**விதூஷகன்:-** அரசே! பயப்படாமல் யுவதியான இவளைக் கவனியுங்கள்.

**தேவி:-** யாரை ?

**விதூஷகன்:-** தேவி! தங்க நிறம் வாய்ந்த, அசோக விருக்ஷத்தின் புஷ்ப சோபையைத்தான்!

*(எல்லோரும் உட்காருகின்றார்கள்)*

**ராஜா:-** *(மாளவிகையைப் பார்த்து மனதுள்)*

ஸமீபத்தில் பிரிவினை கஷ்டமானது.

9. நான் சக்கிரவாகப் பறவைபோல் ஆகின்றேன். என் பிரியையான மாளவிகையானவள் சக்கிரவாகப் பேடைபோலாகின்றாள். எங்கள் இருவர்களது ஸமாகமத்தை அநுமதிக்காத தாரிணீ தேவி, இப்பொழுது இரவு போலாகின்றாள்

*(வந்து)*

**கஞ்சுகி:-** அரசே! வாழ்க! வாழ்க!! கலைகளில் தேர்ச்சிபெற்ற இரண்டு பெண்மணிகள் தங்களுக்குக் காணிக்கையாக விதர்ப்ப தேசத்திலிருந்து அனுப்பப்பட்டிருக்கின்றார்கள். வழிப் பிரயாணத்தால் களைப்புற்றவர்களாய் இருந்ததால், உடனே அவ்விருவர்கள் தங்களிடம் அனுப்பப்படவில்லை. இப்பொழுது அவர்கள் மஹாராஜாவினது தரிசனத்தைப் பெறத் தகுந்தவர்களா யிருக்கின்றார்கள். ஆகையால், அரசன் உத்தரவு கொடுக்க வேண்டுமென மந்திரி விண்ணப்பம் செய்து கொள்கின்றார்.

**ராஜா:-** அவர்களை யழைத்து வரலாமே!

**கஞ்சுகி:-** கட்டளைப்படியே.

*(வெளியே சென்று)*

*(அவ்விருவர்களுடன் மறுபடி வந்து)*

இப்படி வாருங்கள். இப்படி வாருங்கள்

முதலாமவள்:- (சிறிது திரும்பி) ஸகி! மதனிகா! அபூர்வமான இந்த அரண்மனையில் பிரவேசித்ததும் எனது உள்ளம் அளவற்ற மகிழ்ச்சியை அடைகின்றது.

இரண்டாமவள்:- அடி! ஜியோத்ஸ்னிகா! என் மனதும் அவ்வாறேதான் மகிழ்ச்சியை அடைகின்றது. வரப்போகும் சுகத்தையோ, அல்லது துக்கத்தையோ மனோ நிலைமை முன்பே கூறுகின்றது என்பது உலகவதந்தியல்லவா!

ஜியோத்ஸ்னிகா:- அடி! ஆனால், அது இப்பொழுது உண்மையாகவே ஆகட்டும்.

கஞ்சுகி:- இதோ! அரசன் மஹாராணியோடு இங்குத்தான் இருக்கின்றார். நீங்கள் இருவர்களும் வாருங்கள்.

(இருவர்களும் முன்னால் செல்கின்றார்கள்)

(மாளவிகையும், பரிவ்ராஜிகையும் அவ்விரு சேடிகளைக் கண்டதும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளுகின்றார்கள்)

இருவர்களும்:- ( நமஸ்காரம் செய்து )அரசே! வாழ்க! வாழ்க!! தேவி வாழ்க! வாழ்க!!

(அரசனது கட்டளையின் மேல் இருவரு முட்காருகின்றார்கள்)

ராஜா:- பெண்மணிகளே! நீங்கள் இருவர்களும் யாது கலைகளில் தேர்ச்சி பெற்றிருக்கின்றீர்கள்?

இருவர்களும்:- தேவ! நாங்கள் ஸங்கீதத்தில் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்கின்றோம்.

ராஜா:- தேவி! இவ்விருவர்களுள் எவரேனும் ஒருவர் உன்னால் ஏற்றுக் கொள்ளப்படலாம்.

தேவி:- மாளவிகா ! இங்குப்பார். இவ்விருவர்களுக்குள் யாரை உனக்கு ஸங்கீதத்தில் துணைவியாக நீ ஏற்றுக்கொள்கின்றாய் ?

இருவர்களும்:- (மாளவிகையைக் கவனித்து) ஆஹா நம் அரசனது குமாரியல்லவா இவள்! (நமஸ்கரித்து) அம்மணி! மங்களம்! மங்களம்!!

(இருவர்களும் மாளவிகையுடன் கண்ணீர் விடுகின்றார்கள்)

(எல்லோரும் திகைப்புடன் பார்கின்றார்கள்)

ராஜா:- நீங்களிருவர்களும் யார்? இவள் யார்?

**இருவர்களும்:-** அரசே! இவள் தான் எங்களரசனது புதல்வியாகின்றாள்.

**ராஜா:-** அதெப்படி?

**இருவர்களும்:-** தேவ! கேளுங்கள். ஜயம் வாய்ந்த ஸேனாபலத்தால் விதர்ப்ப நாதனையடக்கித் தாங்கள் எந்த மாதவ சேனனைச் சிறையிலிருந்து விடுவித்தீர்களோ, அந்த மாதவ ஸேனனுக்கு இம் மாளவிகை யானவள் தங்கையாய் இருக்கின்றாள்.

**தேவி:-** இவள் அரசகுமாரியா? ஆஹா! பாதரக்ஷையாக உபயோகித்தன்றோ, சந்தனக் கட்டையை யான் அவமதித்தேன்.

**ராஜா:-** இம்மாளவிகை இப்போர்ப்பட்ட நிலைமைக்கு வந்த காரணம் யாது?

**மாளவிகா:-** மாளவிகா (பெருமூச்சுடன், மனதில்) விதியினது கட்டளையால் தான்!

**மதனிகா:-** அரசே! கேளுங்கள். எங்களது அரச குமாரனான மாதவஸேனன் அவரது தாயாதிகளது வசத்திலகப்பட்டபொழுது, அவரது மந்திரியான ஸுமதியவர்கள் எங்கள் போன்ற பரிஜனங்களை விட்டுவிட்டு இம்மாளவிகையை எடுத்துச் சென்றான்.

**அரசன்:-** இதை முன்னமேயே நான் கேட்டிருக்கின்றேன். பின்பு யாது நேர்ந்தது?

**மதனிகா:-** தேவ! இதற்கு மேல் யாது நேர்ந்ததோ நாங்கள் அறியோம்.

**பரிவ்ராஜிகா:-** அரசே! பின்பு யாது நேர்ந்ததென் பதைப்பற்றி பாக்கியமிழந்த யான் கூறுகின்றேன்.

**இருவர்களும்:-** குமாரி! இக்குரல் கௌசிகையம்மைவர்களது குரல்போல் அல்லவா கேட்கப்படுகின்றது!

**மாளவிகா:-** ஆம்! கௌசிகையம்மாளவர்களேதான்.

**இருவர்களும்:-** யதிவேடம் பூண்டிருப்பதால் இந்த கௌசிகையம்மை அவர்களை கஷ்டப்பட்டே நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டியதாய் இருக்கின்றது. அம்மா! நாங்களிருவர்களும் நமஸ்கரிக் கின்றோம்.

**பரிவ்ராஜிகா:-** குழந்தைகளே! க்ஷேமம்தானா.

**ராஜா:-** தாயே! இவர்கள் எவ்வகையில் தங்களுக்கு வேண்டியவர்களா கின்றார்கள்?

**பரிவ்ராஜிகா:-** அரசே ! இவ்விதமாய்.

**விதூஷகன்:-** தாயே ! இவளைப்பற்றிய செய்தியை மீதியையும் கூறவேண்டும்.

**பரிவ்ராஜிகா:-** *(மனோவிகாரத்துடன்)* கேளுங்கள். மாதவஸேனனது மந்திரியான ஸுமதியை எனது மூத்த ஸஹோதரனாகத் தாங்கள் அறிந்துகொள்ளுதல் வேண்டும்.

**ராஜா:-** தெரிந்தது. பின்பு.

**பரிவ்ராஜிகா:-** அரசே! தங்களுடைய விவாஹ சம்பந்தமான உறவைப் பெறவேண்டி என்னோடு இம்மாளவிகையை எடுத்துச் சென்ற ஸுமதியானவன் இடையில் விதிசா நகரம் வந்துகொண்டிருந்த யாத்திரிகர்களின் கூட்டத்தைச் சந்தித்தான்.

**ராஜா:-** பின்பு! பின்பு!!

**பரிவ்ராஜிகா:-** வழி நடையால் களைப்புற்ற வியாபாரிகளின் கூட்டமானது சிரமபரிஹாரம் செய்துகொள்ளும் பொருட்டு ஓர் வனமத்தியில் தங்கியது.

**ராஜா:-** பின்பு! பின்பு!!

**பரிவ்ராஜிகா:-** பின்பு,

*10.* அம்பறாத்துணியின் தோற்பட்டைகளால் மார்புகளை மறைத்துக்கொண்டு, மயில் தோகைகளைக் காது நுனிவரைத் தொங்கவிட்டு கொண்டும், கையில் வில்லை ஏந்திக் கொண்டும் இருக்கின்ற கள்வர் கூட்டத்தாருடைய சேனையொன்று தோன்றிற்று.

*(மாளவிகையானவள் பயத்தை காட்டுகின்றாள்)*

**விதூஷகன்:-** பெண்ணே! பயப்படாதே. சென்றதையல்லவா பரிவ்ராஜிகா கூறுகின்றார்கள்.

**ராஜா:-** அப்புறம்!

**பரிவ்ராஜிகா:-** வியாபாரிகள் சிறிது நேரம் சண்டை செய்தார்கள். ஆயினும், அவர்கள் கள்வர்களால் விரட்டி யடிக்கப்பட்டார்கள்.

**ராஜா:-** துக்கம்! துக்கம்!! தாயே! இனி இத் துக்கச் செய்தியைத் தொடர்ந்து சொல்லப்போவதை நான் எங்ஙனம் கேட்டுச் சகிப்பேன்?

*11.* பரிவ்ராஜிகா:- தனது எஜமானனிடம் அதிகம் பிரேமைகொண்ட எனது ஸஹோதரன், மிகவும் பயந்த இம்மாளவிகையைச்

சத்ருக்களால் செய்யப்பட்ட அவமானத்திலிருந்து காப்பாற்ற விரும்பியவனாய்த் தனது அருமையான உயிரையே கொடுத்து எஜமானனது கடனைத் தீர்த்து கொண்டான்.

**ஜ்யோத்ஸனிகா:-** ஐயோ! ஸுமதி கொல்லப்பட்டாரா!

**மதனிகா:-** ஆனதால் தான் மாளவிகைக்கு இப்பேர்ப்பட்ட நிலைமை ஸம்பவித்தது.

*(பரிவ்ராஜிகா கண்ணீர் சொரிந்தாள்)*

**ராஜா:-** தாயே! கவலைவேண்டாம். சரீரமெடுத்த பிராணிகள் எல்லாமும் இவ்வாறே தான். இது உலக சுபாவம். ஆதலால், வருந்த வேண்டாம். தங்கள் சஹோதரன் இச்சரீரத்தால் பெறத்தக்க நல்லப் பயனைப் பெற்றுக்கொண்டன்றோ தன் எஜமானனது கடனைத் தீர்த்து உயிரைக் கொடுத்தான். பின்பு யாது நேர்ந்தது?

**பரிவ்ராஜிகா:-** அரசே! பின்பு நான் மூர்ச்சையை அடைந்துவிட்டேன். சிறிதுநேரம் சென்றதும் எனது மூர்ச்சை தெளிந்தது. அப்பொழுது இம்மாளவிகையை நான் பார்க்கவில்லை.

**ராஜா:-** தாயே! கரைகடந்த துக்கம் உங்களால் அனுபவிக்கப் பட்டிருக்கின்றது.

**பரிவ்ராஜிகா:-** பின்பு ஸஹோதரனுக்கு தஹனக்கிரியை முதலியதைச் செய்து முடித்து விட்டேன். புதிதாய் வைதவ்யத்தை யடைந்தவள் போல், துக்கித்தவளாய்த் தங்களது தேசத்திற்கு வந்து இக்காஷாய உடையைத் தரித்தேன்.

**ராஜா:-** தாயே! தங்களைப் போன்ற ஸாது ஜனங்களுக்கு இதுதான் முறைமை. பின்பு.

**பரிவ்ராஜிகா:-** அரசே! பின்பு இம்மாளவிகையானவள் வனவீரர்களிடமிருந்து வீரஸேனது வசத்திலும், வீரஸேனனிடமிருந்து தேவியாரது வசத்திலும் அகப்பட்டாள். நான் தேவியாரது அரண்மனைக்கு வந்தபின்பே இவள் என்னால் பார்க்கப்பட்டாள். இவ்வளவுடன் எனது கதை முடிவடைகின்றது.

**மாளவிகா:-** *(மனதுள்)* இப்பொழுது அரசன் என்ன சொல்கின்றார்? பார்ப்போம்.

**ராஜா:-** கஷ்டம்! கஷ்டம்!! ஆபத்துக்கள் எவ்வளவு அவமானத்தை விளைவிக்கின்றன?

12. உயர்ந்த பட்டாடை ஸ்நாநாதி ஸமயங்களில் உபயோகிக்கப்படுவது போலல்லவா மஹாராணியின் பதவிக்குத் தகுதியாயிருக்கும் இம்மாளவிகையானவள் ஒரு பணிப்பெண்ணாக நியமிக்கப்பட்டிருக்கின்றாள்.

**தேவி:-** தாயே! தாங்கள் இம்மாளவிகையை அரச குலத்தில் தோன்றியவளாக இது காலம் வரையும் வெளிப் படுத்தாமலிருந்தது தகுதியற்றதே ஆகும்.

**பரிவ்ராஜிகா:-** பாபம்! பாபம்!! தேவி காரணத்தைக் கொண்டுதான் யான் இது விஷயத்தில் மௌனமாயிருந்தேன்.

**தேவி:-** அக்காரணம் யாதோ ?

**ராஜா:-** தாயே ! சொல்லத் தகுதியாக இருப்பின், அதை வெளியிடலாம்.

**பரிவ்ராஜிகா:-** கேளுங்கள். இவளது பிதாவானவர் ஜீவதசையில் இருக்கும் பொழுது, ஜிவனார்த்தமாய் தேசாடனம் செய்துகொண்டு பழுதற்ற வார்த்தையையுடைய மஹானொருவர் எனது முன்னிலையில் தோன்றி, இம்மாளவிகையைப் பார்த்து இவள் ஒரு வருஷகாலம் பணிப்பெண்ணாகவிருந்த பின்பே உற்ற கணவனை யடைவாள் என்று கூறியுள்ளார். ஆகையால்தான், அரசே! தங்களது பாதஸேவையால் அம்மஹானது கட்டளை பரிபக்குவமடைந்து வருகின்றதெனத் தெரிந்து சமயத்தை எதிர்பார்த்திருந்தேன். ஆகையால், இச்செய்கையில் யான் குற்றமற்றவளாகவே இருக்கின்றேன்.

**ராஜா:-** தாயே! நீங்கள் எதிர்பார்த்திருந்ததும் நியாயமே!

**கஞ்சுகி:-** தேவ! வேறு காரியத்தில் தங்களது கவனம் ஊன்றி இருந்தமையால், நான் தெரிவித்துக்கொள்ளாமல் இருந்தேன். விதர்ப்ப தேச சம்பந்தமான காரியங்களில் மந்திரி, தங்களது தீர்மானத்திற்குமேல், தேவரீரது திருவுள்ளத்தையறிய விரும்பியவராய் விண்ணப்பம் செய்து கொள்ளுகின்றார்.

**ராஜா:-** தாயாதிகளாகிய யக்ஞஸேனன், மாதவஸேனன் இவ்விருவர்களுக்கும் இரட்டை ஆட்சியை ஸ்தாபிக்க விரும்புகின்றேன். அதாவது :-

13. எவ்வாறு சந்திரன், சூரியன் ஆகிய இவர்கள் இரவு, பகல் இவைகளை முறையே ஆளுகின்றார்களோ, அவ்வாறே

அவ்விருவர்களும் வரதா நதியின் வடகரை, தென்கரை இவைகளிலுள்ள பிரதேசங்களை முறையே ஆளட்டும்.

**கஞ்சுகி:-** தேவ! இவ்விதமே நான் மந்திரி ஸபையில் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**அரசன்:-** *(விரல் ஸம்க்ஞையால் அநுமதி கொடுக்கின்றார்)*

*(கஞ்சுகி செல்கின்றான்)*

**ஜ்யோத்ஸனிகா:-** *(ஒரு புறமாய்)* அம்மணி! அரசகுமாரன் பாதி ராஜ்ஜியத்திற்கு அரசனாக ஸ்தாபிக்கப்படப் போவதில் எனது மகிழ்ச்சியைத் தெரியப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

**மாளவிகா:-** அவன் உயிர்ச் சேதத்திலிருந்து தப்பித்துக்கொண்டனனே, அதைப்பற்றி யல்லவோ நாம் முதலில் சந்தோஷப்படவேண்டும்.

*(வந்து)*

**கஞ்சுகி:-** அரசே! வாழ்க!! அரசனுடைய புத்திக்கூர்மை போற்றத்தக்கது. மந்திரி சபையின் நோக்கமும் அவ்வாறே என்று மந்திரி வணக்கமாய் விண்ணப்பம் செய்துகொள்கின்றார்.

14. இருஸமபாகமாகப் பிரித்துப் பாரத்தைத் தாங்குகின்ற இரு குதிரைகள் ஸாரதியினுடைய கட்டளையை எவ்வாறு அனுஸரிக்கின்றதோ, அவ்வாறே, யக்ஞஸேனன் மாதவஸேனன் ஆகிய இவர்களும் ராஜ்யத்தை ஸம இருபாகமாகப் பிரித்துக்கொண்டு, ஒருவருக்கொருவர் இடையூறின்றி, அரசே! தங்களது கட்டளையில் இருப்பார்கள்.

**ராஜா:-** சரி ! அவ்வாறே செய்யப்படலாமென்று ஸேனாதிபதியான வீரஸேனனுக்கு ராஜலோகம் அனுப்பும்படி மந்திரி ஸபைக்குத் தெரிவிப்பாய்.

**கஞ்சுகி:-** கட்டளைப்படியே *(வெளியே சென்று, மறுபடி கடிதம், வெகுமதி, இவைகளுடன் வருகின்றான்)* அரசனது கட்டளை நிறைவேற்றப்பட்டது. சேனைத் தலைவரான புஷ்பமத் திரனிடமிருந்து வெகுமதியோடு கடிதமொன்று வந்திருக்கின்றது. அரசே ! தாங்கள் அதைப் பார்க்கவேண்டும்.

*(அரசன் விரைவில் எழுந்து, மரியாதையுடன் வெகுமதியைப் பெற்றுக்கொண்டு, அதை பரிஜனத்தினிடம் கொடுக்கின்றார்)*

*(கடிதத்தைப் பிரிக்கின்றான்)*

**தேவி:-** *(மனதுள்)* நம்முடைய மனதும் புஷ்யமித்திரரது செய்தியை அறியவே ஆசை கொண்டிருந்தது. பெரியோர்களது க்ஷேம

ஸமாசாரத்தை யறிந்த பின்பே வஸுமித்திரனது செய்தியைக் கேட்போம். எனது புதல்வன் ஸேனாதிபதியால் பொறுப்புள்ள அதிகாரத்திலன்றோ நியமிக்கப் பட்டிருக்கின்றான்.

ராஜா:- *(உட்கார்ந்து, கடிதத்தைப் படிக்கின்றான்)*

அதாவது :- ஆசீர்வாதம், ஸேனாபதியான புஷ்பமித்திரன் தீர்க்காயுள் வாய்ந்த குமாரனான அக்கினிமித்திரனை அன்பால் ஆலிங்கனம்செய்து யாகசாலையிலிருந்து எழுதுவதாவது :- ராஜயக்ஞத்தில் தீக்ஷைகொண்ட என்னால், அநேக ராஜகுமாரர்களோடு வஸுமித்திரனை (குதிரையை) காப்பாற்றுபவனாக ஏற்படுத்தி, ஒரு வருஷத்தில் திரும்பவேண்டியதாய் எந்த யாகக்குதிரை தடையின்றி ஸஞ்சரிக்குமாறு விடப்பட்டதோ, அந்தக் குதிரை ஸிந்துநதியின் தெற்குக் கரையில் ஸஞ்சரிக்கும்பொழுது யவனர்களது குதிரைப் படையால் பிடிக்கப்பட்டது. பின்பு, இரு ஸைன்யங்களுக்கும் பெருத்த யுத்தமும் நேர்ந்தது.

தேவி:- *(வருத்தத்தை யுணருகின்றாள்)*

ராஜா:- இவ்விதம் எவ்வாறு நேர்ந்தது?

*(கடிதத்தையும் மீதிப்பாகத்தையும் அரசன் படிக்கின்றான்)*

*15.* பின்பு வில்வீரனான வஸுமித்திரன் சத்ருக்களை ஜயித்தான். பலாத்காரமாய் அபஹரிக்கப்பட்ட எனது சிறந்த குதிரையையும் மீட்டுவந்தான்.

தேவி:- இதைக் கேட்ட பின்புதான் எனது மனம் அமைதியை யடைந்தது.

அரசன்:- *(மீதியைப் படிக்கின்றான்)* முன்பு அம்சுமானால் *(மீட்கப்பட்ட குதிரையால்)* ஸகர மஹாராஜன் யாகம் செய்ததுபோல, இப்பொழுது நானும் எனது பௌத்திரனால் மீட்கப்பட்ட குதிரையை யுடையவனாய் யாகம் செய்யப்போகின்றேன். ஆகையால், காலதாமதமின்றி நீ மனதில் கோபத்தைப் பாராட்டாமல் உனது மனைவிகளோடு கூட யாகத்திற்கு வரவேண்டும்.

ராஜா:- அனுக்ரஹிக்கப்பட்டேன்.

பரிவ்ராஜிகா:- புதல்வனுக் கேற்பட்ட ஜயத்தினால் நானும் மகிழ்ச்சியை அடைகின்றேன்.

*(மஹாராணியைப் பார்த்து)*

16. தேவி! கொண்டாடத் தகுந்த வீரபத்தினிகளுள், தாங்கள், தங்களது நாதனால் முன்னணியில் வைக்கப் பட்டிருக்கின்றீர்கள். இப்பொழுது, தங்களது புதல்வனால் "வீரனான புதல்வனை ஈன்றெடுத்தவள்" என்ற பட்டமும் தங்களை யடைந்திருக்கின்றது.

**விதூஷகன்:-** தேவி! குழந்தை தனது பிதாவைப் பின்பற்றிய விஷயத்தில் நான் அளவற்ற சந்தோஷமடைகின்றேன்.

**பரிவ்ராஜிகா:-** யானைக்குட்டியானது தன் கூட்டத்தலைவனையே அநுஸரிக் கின்றதன்றோ!

17. **கஞ்சுகி:-** தேவ! ஸமுத்ர ஜலத்தை வற்றச் செய்கின்ற அக்னி பகவானுக்குத் துடையில் தோன்றிய முனிவர்போல மேன்மை வாய்ந்தவராயும், சத்துருக்களால் தாக்கப்பட முடியாதவராயும் இருக்கின்ற தாங்களே பிதாவாகவிருக்கும்பொழுது, ஸூதனாகிய எந்த வஸுமித்ரனுண்டோ. அவனுக்குக் கிடைத்த இம்மாதிரியான வெற்றிச் செயல்களால் எங்கள் மனத்தில் என்ன ஆச்சர்யம் தோன்றவிருக்கிறது? இல்லையே.

**ராஜா:-** மௌத்கல்ய! யக்ஞஸேனனது மைத்துனனைப் போலவே சிறையில் அடைக்கப்பட்டவர்களெல்லோரையுமே விட்டுவிடலாம்.

**கஞ்சுகி:-** அரசே! கட்டளைப்படியே.

*(வெளியே செல்கின்றாள்)*

**தேவி:-** ஜயஸேனா! சென்று, இராவதி முதலிய அந்தப்புர ஸ்தீரிகளிடம் புதல்வன் வீரஸேனனது ஜயவார்த்தையைத் தெரியப்படுத்துவாய்.

**ஜயஸேனா:-** அப்படியே

*(வெளியே செல்கின்றாள்)*

**தேவி:-** ஜயஸேனா! சற்றுவா இங்கே.

**ஜயஸேனா:-** தேவி! இதோ வந்தேன்.

**தேவி:-** *(ஒரு புறமாய்)* அசோக விருக்ஷத்தினது விருப்பத்தை நிறைவேற்றுமாறு மாளவிகைக்குக் கட்டளையிடும் சமயம் அவளுக்கு நான் செய்த வாக்குறுதியையும், அவளது பிறப்பின் வரலாற்றையும் இராவதியிடம் தெரியப்படுத்தி அவள் *(இராவதி)* என்னை ஸத்தியம் தவறாதவளாகக் கருதுமாறு அவளை நீ உனது வார்த்தையால் ஸமாதானம் செய்தல்வேண்டும்.

ஜயஸேனா:- தேவி! கட்டளைப்படியே!

( வெளியே சென்று )
( மறுபடி வந்து )

தேவி! இப்பொழுது தங்கள் புத்திரனது ஜயத்தைக் கேட்டு அந்தப்புர ஸ்தீரீகள் அடையப்போகும் ஸந்தோஷமாகிய ஆபரணங்களுக்கு நான் ஒரு பேழையாய் இருக்கின்றேன்.

தேவி:- ஜயஸேனா! இதிலென்ன ஆச்சர்யம் இருக்கின்றது? இந்தப் பாக்கியமானது அவர்களுக்கு மெனக்கும் பொதுவானதன்றோ. (ஒரு புறமாய்) தேவி!

ஜயஸேனா:- "அதிகாரம் வாய்ந்த தங்களது வார்த்தை தகுதியானதே! ஆனால், முதலில் செய்த தீர்மானம் மாற்றப்படுவதற்கு தகுதியல்ல" என்று இராவதியார் விண்ணப்பம் செய்து கொள்ளுகின்றார்கள்.

தேவி:- தாயே! முதல் முதலில் ஸுமதியவர்களால் தீர்மானிக்கப்பட்டபடியே மாளவிகையை மஹாராஜாவுக்கு கொடுக்கத் தங்களது அநுமதியைப் பெற விரும்புகின்றேன்.

பரிவ்ராஜிகா:- தேவி! இப்பொழுதும் மாளவிகைக்கு நீங்கள் தான் அதிகாரியாய் இருக்கின்றீர்கள்

தேவி:- (மாளவிகையை கையில் பிடித்து) ஸந்தோஷத்திற்குக் காரணமான இந்த வெகுமதியை எனது நாதனே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(அரசன் வெட்கத்தால் தலை குனிந்து நிற்கின்றான்)

தேவி:- (புன்னகையுடன்) ஆஹா! எனது நாதன் என்னை அவமதிக்கின்றனரா என்ன ?

விதூஷகன்:- தேவி! புதுமாப்பிள்ளை வெட்கப்படுவது உலக வழக்கம்தானே!

( அரசன் விதூஷகனைப் பார்க்கின்றார் )

விதூஷகன்:- தேவி! தாங்கள் மஹாராஜாவிடம் வைத்திருக்கும் எல்லையற்ற அன்பிற்கு அறிகுறியாகத் தங்களால் கொடுக்கப்பட்ட இம்மாளவிகையை மஹாராணிப் பதவியோடு கூடியவளாக யிருக்க அவர் ஒருக்கால் விரும்புகின்றாரோ என்னவோ!

தேவி :- கௌதம ! பிறப்பின் மேன்மையினாலேயே இவள் மஹாராணிப் பதவியைப் பெற்றிருக்கின்றாள். அதையே நாம் திரும்பச் சொல்லுவதால் யாது பயன் ?

18. பரிவ்ராஜிகா:- அப்படியல்ல. மங்களம் நிறைந்தவளே! சுரங்கத்திலிருந்து எடுக்கப்பட்ட எத்தகைய இரத்தினமும் சாணையால் சுத்தம் செய்யப்படாத தங்கத்தோடு சேர்க்கப்படத் தகுதியாகின்றதில்லை.

தேவி:- (நினைத்து) தாயே! மன்னிக்க வேண்டும். சந்தோஷச் செய்தியைப் பேசிக் கொண்டிருந்ததால், இப்பொழுது உசித காரியத்தையும் நான் மறந்து விட்டேன். ஜயஸேனா! விரைவில் சென்று, புதிய வெண்பட்டொன்றை யெடுத்துவா.

ஜயஸேனா:- கட்டளைப்படியே!

*(வெளியே சென்று, பட்டாடையை எடுத்து வருகின்றாள்)*

தேவி:- இதோ! வெண்பட்டு!

தேவி:- (மாளவிகைக்கு பட்டையுடுத்தி) நாத! இப்பொழுது இம்மாளவிகையை தாங்கள் அங்கீகரிக்கலாம்.

ராஜா:- தேவி! உனது கட்டளைப்படியே! நான் யாதுபதில் கூற முடியும்.

பரிவ்ராஜிகா:- மாளவிகையானவள் மஹாராஜாவால் மனைவியாக அங்கீகரிக்கப்பட்டாள்.

விதூஷகன்:- மஹாராஜ! என்ன ஆச்சரியம் மஹாராணியாருக்குத் தங்களிடத்தில் எவ்வளவு அன்பு ?

(தேவி பரிஜனங்களைப் பார்க்கின்றார்கள்)

பரிஜனங்கள்:- (மாளவிகையிடம் வந்து ) தேவி! வாழ்க! வாழ்க.

(மஹாராணி பரிவ்ராஜிகையைப் பார்க்கின்றாள்)

பரிவ்ராஜிகா:- தேவி! தங்களிடத்தில் இது ஒன்றும் ஆச்சர்யம் இல்லையே!

*19.* மஹாநதிகள் தன்னோடு அநேக நதிகளைச் சேர்த்து கொண்டே எவ்வாறு ஸமுத்திரத்தை யடைகின்றதோ, அவ்வாறே பதிவிரைதைகளான ஸ்திரிகள் தங்களுக்கு ஸபத்னிகளை யேற்படுத்திக் கொண்டே கணவன்மார்களுக்குப்பணி செய்கின்றார்கள்.

நிபுணிகா:- அரசே! வாழ்க! இராவதி தேவியார் கீழ்க்கண்டவாறு விண்ணப்பம் செய்து கொள்ளுகின்றார்கள். அதாவது, "நாதனது உபசாரத்தை மீறியதால் குற்றவாளியான யான் நாதனுக்கு அநுகூலத்தையே செய்தவளாக ஆகின்றேன். இப்பொழுது மனோரத ஸித்தியைப் பெற்ற மஹாராஜாவால் நான் அனுக்ரஹிக்கப்பட்டு கௌரவத்தையும் பெறத் தகுந்தவளாகின்றேன்" என்று.

மஹாராணி:- நிபுணிகா! மஹாராஜாவானவர் அவசியம் இராவதியின் பிராத்தனையை நிறைவேற்றுவார்.

நிபுணிகா:- அநுக்ரஹிக்கப்பட்டேன்.

பரிவ்ராஜிகா:- தேவ! தங்களது ஸம்பந்தத்தால் கோரியப் பயனைப் பெற்ற மாதவஸேனனிடம் எனது ஸந்தோஷத்தை அறிவிக்கத் தாங்கள் தயவு செய்யவேண்டும்.

தேவி:- அம்மா! நீங்கள் எங்களை இவ்விதம் விட்டுச் செல்வது யுக்தமல்லவே.

ராஜா:- தாயே! தங்களது ஸந்தோஷ விசாரணையை எங்கள் கடிதத்தின் மூலமாய் மாதவஸேனனுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பரிவ்ராஜிகா:- தேவ! நீங்கள் இருவர்களும் என்மீது வைத்திருக்குமன்பால் நான் உங்களிடத்தில் ஸ்வாதின மற்றவளாகவே இருக்கின்றேன்.

தேவி:- நாத! நான் இன்னமும் யாது பிரியமானகாரியம், தங்களுக்குச் செய்யவேண்டும்? அதை எனக்கு கட்டளையிடவேண்டும்.

ராஜா:- தேவி! இதைக்காட்டிலும் என்ன பிரியம் இருக்கின்றது? ஆனால், ஒன்றுமாத்திரம் இருக்கட்டும்.

*20.* ஹே தேவி! நீ எப்பொழுதுமே என்மீது தயை நிறைந்தவளாக இருத்தல் வேண்டும். இவ்வளவுதான் என்னால் வேண்டிக் கொள்ளத் தகுந்தது.

(ஆசி)

அக்னிமித்திரன் அரசனாக இருக்கும்பொழுது, குடிகளுக்குத் துன்பத்தை நீக்கிக் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை.

(எல்லோரும் வெளியே செல்கின்றார்கள்)

## ஐந்தாம் அங்கத்துடன் மாளவிகா க்னிமித்திரம் என்னும் நாடகமும் முடிந்தது.

***சுபம்! சுபம்!! சுபம்!!!***

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| AN INTRODUCTION TO RELIGION AND PHILOSOPHY - TEVARAM AND TIVVIYAPPIRAPANTAM | 200.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2 | 80.00 |
| தாய்நாட்டிலும் மேலை நாடுகளிலும் தமிழியல் ஆய்வு | 75.00 |
| ஜப்பானியக் காதல் பாடல்கள் | 75.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| பயிலரங்கக் கவிதைகள் | 18.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து | 125.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-4 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-3 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-2 | 110.00 |
| நாட்டுப்புறக் கதைகளும் நாடக ஆக்கமும் | 30.00 |
| A BUNCH OF ESSAYS ON TAMIL LITERATURE | 30.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| ON TRANSLATING TIRUKKURAL | 50.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி | 200.00 |
| THIRUVACHAGAM | 175.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| நானும் என் எழுத்தும் | 50.00 |
| தமிழர் கட்டிடக்கலை | 30.00 |
| THE NARRINAI FOUR HUNDRED | 175.00 |
| சர்வக்ஞர் உரைப்பா | 40.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| மேலை நோக்கில் தமிழ்க்கவிதை | 100.00 |
| SOUND CORRESPONDENCES BETWEEN TAMIL & JAPANESE | 35.00 |
| அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள் | 125.00 |
| TAMIL LITERATURE AND INDIAN PHILOSOPHY | 200.00 |
| சதகத்திரட்டு தொகுதி-1 | 80.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| சதகத்திரட்டு தொகுதி-2 | 55.00 |
| தமிழ்ப் பண்பாடு | 25.00 |
| உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை-4 | 70.00 |
| சுவடிச்சுடர் | 120.00 |
| தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர் | 45.00 |
| தமிழக மகளிரியல் | 80.00 |

Pub.No. 428 **மாளவிகாக்னிமித்திரம்** **20.00**